திருக்கோயில்

OFFICE OF THE STATE EDITOR
9 - AUG 1972

என் கடன் பணிசெய்து கிடப்பதே

மாலை 14] பரிதாபி — ஆடி, ஆவணி ஆகஸ்ட், 1972 [மணி 11

தமிழ்நாடு அரசி

திங்கள் வெளியீ

—ஆசிரியர்.

செம்பொன்னர்கோவில் சட்டமன்ற உறுப்பினரும், ஷ கோயில் அறங்காவலர் குழுத் தலைவரும் ஆகிய திரு. டி. வி. சம்பத் M.L.A. அவர்கள் தலைமையில், திருவெண்காடு சுவேதாரண்யேச்சுவர சுவாமி மகளிர் உயர்நிலைப்பள்ளியின் இலக்கிய மன்றத்தைக் கல்வி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், M.A. அவர்கள் துவக்கி வைத்து உரை நிகழ்த்துதல். (14—7—72).

பொருளடக்கம்

1. சம்பந்தர் பதிகங்களும், சேக்கிழார் விளக்கங்களும்
2. திருவாசகத்தின் சிறப்பு
3. அறநிலையத்துறை ஆற்றும் அரும்பணிகள்
4. சமணமும் தமிழும்
5. ஆழ்வார்கள் காணும் முழுமுதற் கடவுள்
6. மதிப்புரைகள்
7. அருள் ஆசியுரை
8. திருமுறைக் கருத்தரங்கத் துவக்கப் பேருரை
9. மதிப்புரை
10. ஆறுபடை வீடுகள்
11. சைவ சித்தாந்தம்
12. அத்வைத தத்துவம்
13. சிறுவரம்பேடு
14. தமிழில் அறிவியல் கருத்துக்கள்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா. பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை–34" என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்துக்கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறாமல் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்

86|Gn/72
OFFICE ... 9 - AUG 1972 ... MADRAS



மாலை 14] பரிதாபி — ஆடி, ஆவணி — ஆகஸ்ட், 1972 [மணி 11

"சம்பந்தர் பதிகங்களும், சேக்கிழார் விளக்கங்களும்"*

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

முன்னுரை :

திருஞானசம்பந்தர், சைவசமய ஆசிரியர் மட்டுமல்லர்; தமிழக மக்களின் சமுதாயப் பெருந் தலைவருமாவர். அப்பெருந்தகையார், தமிழ்நாட்டில் வேற்றுவரின் ஆட்சியும் மொழியும் சமயமும் பிறவும் புகுந்து பரவித், தமிழ் நாட்டு மக்களின் மொழி சமயம் பண்பாடு முதலியவற்றைச் சீர்குலைத்துச் சிதைத்துவந்த காலத்தில், ஒரு பெரும் ஞான ஞாயிருகவும், சமுதாயப் பெருந்தலைவராகவும் தோன்றினார்; நாட்டின் மூலை முடுக்கர்களுக்கெல்லாம் சென்றார்; 'பற்பல ஆயிரம் தொண்டர்களுடன்' ஈடு இணையற்ற மக்கள் எழுச்சி இயக்கத்தைத் தோற்றுவித்தார். 1300 ஆண்டுகளுக்கு முன்னரே "அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல", இனிய தமிழ் பரப்பும் உயரிய குறிக்கோள் உடையவராய், அயராது உழைத்து அரும்பெருந் தொண்டாற்றிய தமிழகப் பெருந் தலைவர், திருஞானசம்பந்தரே எனத் துணிந்து கூறலாம்.

சம்பந்தருக்கு முன்னரே தொல்காப்பியர் திருவள்ளுவர் நக்கீரர் இளங்கோவடிகள் போன்ற எத்தனையோ, பல சான்றோர்கள் விளங்கியிருந்தனராயினும், அவர்கள் அனைவரும் தனிநிலையில் தமிழ்ப்பணி புரிந்தனரேயன்றி, இயக்க நெறியில் தமிழ் வளர்க்கத் தலைப்பட்டிலர். திருஞானசம்பந்தரோ, தமிழகம் முழுவதும் திருவுலாச் செய்தார். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பினார்; செஞ்சொற் கவிதைமாரி பொழிந்தார்; புதிய புதிய-நல்லநல்ல-விதவிதமான சந்தநலம் சான்ற செந்தமிழ்ப் பதிகங்களை அருளிச்செய்தார்! மூலையிற் கிடந்த சமய நெறியினை, மக்கட் சமுதாய முற்றத்திற்குக்

---

*திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாதரவில், திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி கோயிலில் நடைபெற்ற, இரண்டாவது திருமுறைக் கருத்தரங்கத்தில் நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது. (13—5—72). —ஆசிரியர்.

JL Q2m211,N59 TK N72.14.11

கொணர்ந்தார். சமயமும் தமிழும் தம்முள் தழுவி விரவி வளரச் செய்தார்! தமிழுக்கும் தமிழருக்கும் திருஞானசம்பந்தரால் விளைந்த நலன்களுக்கு அளவேயில்லை!

இத்தகைய சிறப்புமிக்க பெருந்தலைவராகிய திருஞானசம்பந்தர் முதலிய தமிழகப் பெருஞ்சான்றோர்களின் வாழ்க்கை வரலாறுகளைத் திறம்படச் செவ்விதின் ஆராய்ந்து, அரும்பெரும் காவியமாக இயற்றித் தந்த அருளாளர், சேக்கிழார் பெருமான்! உலகப் புகழ் பெற்ற உயரிய வரலாற்று ஆசிரியர்கள் எனச் சிறந்தெடுத்துப் போற்றப்பெறும் மேதைகளின் வரிசையில், தலைசிறந்த பெருஞ் சான்றோராக வைத்து மதித்துப் போற்றத்தக்கவர் சேக்கிழார் பெருந்தகை! அவர் இயற்றியருளிய பெரியபுராணம், தமிழகக் காப்பியம் என்று தனிச் சிறப்பாக விதந்தெடுத்துப் புகழ்ந்து போற்றிப் பாராட்டற்பாலதாகும். உலக வரலாற்று நூல்களில், தமிழகக் காப்பியம் எனப் போற்றப் பெறத்தகுந்த பெரியபுராணத்திற்கு, ஒப்புயர்வற்ற ஒரு பெருந் தனிச் சிறப்பிடம் உண்டு.

சேக்கிழார் பெருமான், திருஞானசம்பந்தரின் வரலாற்றுச் செய்திகளையும் அவர்புரிந்த தலயாத்திரையின் வரன்முறைகளையும் வழி வகை விவரங்களையும், அவர்தம் வரலாற்றின் இடையிடையே நடைபெற்ற பல உலகியல் அருளியல் நிகழ்ச்சிகளையும், மிகமிக நுணுக்கமாக ஆராய்ந்து தம் நூலின்கண் தகவுற விளக்கிச் சென்றுள்ளார். இந்தத் திருமுறைக் கருத்தரங்கத்தில், திருஞானசம்பந்தரின் திருப்பதிகங்களுக்குச் சேக்கிழார் பெருமான் செய்துள்ள விளக்கங்களுள் ஒருசில பற்றி மட்டும், ஈண்டு இயன்ற அளவு சிறிது காண்போம்!

தோடுடைய செவியன் :

(1) சைவத் திருமுறைகளின் முதல் தொடக்கப் பதிகமாகிய 'தோடுடைய செவியன்' என்பதனை நாம் அனைவரும் நன்கறிவோம். அப்பதிகத்தினை மாத்திரம் ஓதுங்கால், அஃது எதற்காக? எப்போது? சம்பந்தரால் பாடப்பெற்றது என்னும் விவரத்தினை நாம் அறிந்துகொள்ளுதல் இயலாது. பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை அவர்கள் 'திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி' என்னும் தமது நூலின்கண், 'தோடுடைய செவியன் என்னும் தேவாரத் திருப்பதிகத்தில், திருஞானசம்பந்தர் சிவஞானப்பால் உண்ட அருள் நிகழ்ச்சிச் செய்திக்கு உரிய சான்று எதுவும் காணப்படவில்லை''(1) என்று, தமது ஐயம் தோன்றக் குறிப்பிட்டுள்ளார். இதனால், அத் திருப்பதிகத்திலேயே சம்பந்தர் ஞானப்பால் உண்ட அருள் நிகழ்ச்சிக்கு உரிய அகச்சான்றுகளேதும் இல்லை என்று நினைக்க இடன் உள்ளது. எனினும்,

"பேதையார் பொற்கிண்ணத்து
அடிசில் பொல்லாது எனத்
தாதையார் முனிவுறத்
தான்எனை ஆண்டவன்;
காதையார் குழையினன்,
கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும்
பெருந்தகை இருந்ததே''

எனச் சம்பந்தரே பிறிதொரு இடத்தில் அருளிச் செய்திருத்தலையும், அதனைவழிமொழிந்து திருக் கழுமல மும்மணிக்கோவையில் பட்டினத்தடிகளும், திருத்தொண்டர் திருவந்தாதியில் நம்பியாண்டார் நம்பிகளும் வலியுறுத்தியிருத்தலையும்' அரிய இனிய அகச் சான்றுகளாகக் கொண்டு, சம்பந்தர் ஞானப்பால் உண்ட அருள் நிகழ்ச்சியினைச் சேக்கிழார் விளக்கியிருக்கும் திறம் வியந்து போற்றற்பாலது.

(1) மேலும், இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் வரும் ''பெம்மான் இவன் அன்றே'' என்னும் சொற்றொடரின் பொருள் விளங்கும் படி, ''எம்மை இது செய்த பிரான் இவனன்றே'' என விரித்துரைத்தும், 'பிரமபுரம் மேவினர் தம்மை அடையாளங்களுடன் சாற்றினர்'' எனப் பொருள் புலப்படுத்திக் காட்டியும், அவர் விளக்கியிருக்கும் திறமும் பெரிதும் உணர்ந்து இன்புறற்பாலது.

(2) வடமொழி வேதம் எழுதாக்கிளவி எனப்படும், சம்பந்தர் பாடத் தொடங்கும் தேவாரமோ, தமிழ் வேதம்; எழுதும் மறையாகும். வேதம் ஓதப்புகுவோர், 'ஓம்' என்று

---

(1) "The hymn still exists and is the very first of the compilation called Devaram, but it seems to give *no support to the miracle narrated*".

—Prof, P. SUNDARAM PILLAI, M.A., etc., The Age of Thirugnana Sambanda, P.

முதற்கண் கூறியே தொடங்குவர். மறை முத லாகிய பிரணவம் உரைத்த பின்னரே மறை களை ஓதுதல் மரபு. ஆதலின், தமிழ் மறை யாகிய தேவாரத்தின் தொடக்கத்தில் பிரண வம் ஆகிய ஓகாரம் புணர்த்தப்பெற்ற 'தோடு' என்னும் சொல் அமைந்தது. அப்பிரணவ நாதமும் சடஆகாசம் ஆகிய பூத ஆகாசத் தின் அல்லாமல், சிதாகாசமாகிய தகர ஆகா சத்தில் தோன்றும் சுத்தநாதம் ஆதலின், த்+ஓ எனத் தகர மெய்யெழுத்தோடு சேர்த் துத் தோடு எனத் தொடங்கப் பெற்றது. இதனை,

' எல்லையிலா மறைமுதல், மெய்
யுடன்எடுத்த எழுதும்மறை
மல்லல்நெடுந் தமிழால் இம்
மாநிலத்தோர்க்கு உரைசிறப்ப ''

என ஆசிரியர் சேக்கிழார் விளக்கியருளு கின்றார். இங்ஙனம் பிரணவம் ஆகிய ஓகாரம் முதலில் அமையும்படி தொடங்கப்பெற்றதாக லின், சம்பந்தர் அருளிய முதற் பதிகத்தினைச் "செம்மைபெற எடுத்த திருத் தோடுடைய செவியன் எனும் மெய்ம்மை மொழித் திருப் பதிகம்'' என்று சேக்கிழார் புகழ்ந்து போற்று கின்றார்.

(3) இறைவனின் திருவடி முதலிய மற் றைய பல உறுப்புக்கள் இருப்பினும், அவற்றை யெல்லாம் முதற்கண் சிறப்பித்துப் போற்றாமல், 'தோடுடைய செவி' என இறைவனின் திருக் காதையே சம்பந்தர் சிறப்பித்துப் பாடியிருப் பதற்குக் காரணம், தாம் பாடத் தொடங்கும் தமிழ்வேதமாகிய திருப்பாடல்களைச் செவியில் ஏற்றருள வேண்டுதலேயாகும். இதனைத் "தம் பாடல்பரமர்பால் செல்லும்முறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்தார்'' எனச் சேக்கிழார் விளக்கியிருத்தல் காணலாம்.

(4) தோடு பெண்கள் அணியும் காதணி. குழை என்பது ஆண்கள் அணியும் காதணிக் குப் பெயர். இறைவன் அம்மையும் அப்பனு மாக வந்து காட்சியளித்துத் தமக்கு அருள் புரிந்த சிறப்புத் தோன்ற, அம்மைக்கு உரிய காதணியாகிய தோடு பற்றிக் குறிப்பிட் டருளினார்.

(5) அம்மையின் வாயிலாகவே அப்ப னின் அருளை அடைய வேண்டும். ஆதலின் அதுபற்றியும் அம்மையைச் சம்பந்தர் இங்ஙனம் முதற்கண் குறிப்பிட்டுச் சிந்தித்து வந்தித்தார். எனவும் கொள்ளலாம்.

ஒரு பெரு விளக்கம் :

(2) திருஞானசம்பந்தர் பதினாறாயிரம் பதிகங்கள் பாடியதாக நம்பியாண்டார் நம்பி கள் கூறுவர். ஆனால் அவற்றில் இன்று நமக் குக் கிடைத்திருப்பன 384 பதிகங்களேயாகும். அவைகளுள் மிகப் பெரும்பாலானவற்றில் மூன்று செய்திகளைத் திரும்பத் திரும்ப விடாது பாடுவர் திருஞானசம்பந்தர்! அவற்றை அவர் கூறியது கூறலாகக் கருதுவதில்லை. அக்காலத் தில் வதிந்திருந்த சமுதாய மக்களுக்கு, அக் கருத்துக்களை மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்லுதல் இன்றியமையாததெனத் திருஞானசம்பந்தர் கருதினார்போலும்! தமது பதிகங்கள் ஒவ்வொன்றிலும், 8-ஆம் பாட்டில் இராவணன் கயிலை மலையைப் பெயர்க்க முயன் றமை, 9-ஆம் பாட்டில் அயனும் மாலும் அடிமுடி தேடியமை, 10-ஆம் பாட்டில் புறச் சமயத்தவர்களின் புன்றன்மை ஆகியவற்றைக் குறித்துச் சம்பந்தர் தவறாமல் முறையே பாடி யருள்வர்! இஃது எற்றுக்கு என நாம் எண்ணு தல் இயல்பு.

(1) "இவ்வுலகில் வாழ்பவர்கள் பிழை செய்தாலும், அவர்கள் தம்முடைய பிழை யுணர்ந்து வருந்தித் தன்னைச் சரணாக வந் தடைந்தால், கண்ணுதலான் தன் பெருந் தன் மையினால் அவர்களை மன்னித்துக் கைக் கொண்டு காத்தருள்வான்'' என்பதனை இராவ ணன் கயிலை மலையைப் பெயர்த்த வரலாறு உணர்த்துகின்றது. (77)

(2) "கல்வியினாலோ செல்வத்தினாலோ இறைவனை அடைதல் இயலாது. தன்முனைப் பற்று அன்புடன் பணிந்து தொழுபவர்கள் மட் டுமே சிவபிரான் திருவருளைப் பெறுதல் இய லும்'' என்பதனை அயனும் மாலும் அடிமுடி தேடிய வரலாறு அறிவிக்கின்றது. (78)

(3) "வேதகாரணராகத் திகழும் சிவபிரா னின் திருவருள் நெறியை உணர்ந்து உய்யா மல், தம்மிலேயே நலங்கொண்டு, போதம் இல் லாத புறச்சமயத்தவர்கள் பரப்பி வருகின்ற புது நெறிகள் தமிழக மன்பதைக்குத் தீங்கு பயப்பனவேயாகும்'' என்பதனைச் சம்பந்தரின் 10-ஆம் பாடல் ஒவ்வொரு பதிகத்திலும் செவ் விதின் வலியுறுத்துகின்றது (79). இவ்வாறு சேக் கிழார் பெருமான், சம்பந்தரின் பதிகங்கள்

எல்லாவற்றுக்குமே உரிய ஒரு பொதுவான பெருவிளக்கத்தைத் தொடக்கத்திலேயே அளித்திருத்தல் அறிந்து இன்புறத்தகும்.

இரு பதிகங்கள் :

(4) அப்பரும் சுந்தரரும், நமச்சிவாயப் பதிகம் என ஒவ்வொரு பதிகமே பாடியுள்ளனர். ஆனல் சம்பந்தர் மட்டும் நமச்சிவாயப் பதிகம் என ஒன்றும், அஞ்செழுத்துப் பதிகம் என ஒன்றும், ஆக இரண்டு பதிகங்கள் அருளிச் செய்துள்ளார். இவைகள் தனித்தனியே எப்போது? ஏன்? பாடப்பெற்றன என்பது, திருமுறைகளை மட்டுமே கொண்டு நாம் அறிதல் இயலாது. 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' எனத் தொடங்கும் நமச்சிவாயப் பதிகம் ஆச்சாபுரம் என வழங்கும் திருநல்லூர்ப் பெருமணத்தில், சம்பந்தர் திருமணம் புரிந்து கொண்டு,சிவசோதியிற் கலந்தபோது பாடியது என்றும் (ச. பு. 12 48); 'துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்' என்று தொடங்கும் அஞ்செழுத்துப் பதிகம், தமக்குமறையவர் சிலர் உபநயனச் சடங்கு புரிய முற்பட்டபோது 'அந்தியின் மந்திரம் அஞ்செழுத்துமே' என்பதனை வலியுறுத்திப் பாடப்பெற்றதென்றும், சேக்கிழார் தாம் இவற்றைத் திறந்தெரிந்து நமக்குத் தெளிவுறுத்துகின்றார். (ச. பு. 264, 265, 266).

தலங்களும் பதிகங்களும் :

(5) திருஞானசம்பந்தர் தலங்கள்தோறும் சென்று சிவபிரானைத் தரிசித்ததும், ஆங்காங்கே பாடிய பதிகங்களும், அப்பதிகங்களில் வரும் சிறப்புமிக்க குறிப்புக்களும் பற்றிச் சேக்கிழாரடிகள் செய்துள்ள விளக்கங்கள், நுண்ணிதின் உணர்ந்து எண்ணி எண்ணி இன்புறற்பாலன. அவற்றுள் சில வருமாறு :

(1) ''ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர் என்றெடுத்து ஆர்வத்தால் பாடினர்; நீடுவாழ் தில்லை நான்மறையோர் தமைக் கண்ட அந்நிலையெல்லாம் கூடுமாறு கோத்து அவர் தொழுதேத்து சிற்றம்பலம் எனக் கூறினர்.'' (174).

(2) ''திருந்துதேவன்குடி மன்னும் சிவபெருமான் கோயில் எய்தி, மருந்தொடு மந்திரமாகி மற்றும் இவர் வேடமாம் என்று அருந் தமிழ்மாலை புனைந்தார்''. (195),

(3) ''வடகுரங்காடுதுறையில் வாலியார் தாம் வழிபட்ட அடைவும் திருப்பதிகத்தில் அறியச் சிறப்பித்தருளினார்''. (598),

(4) ''நந்தி திருவருள்பெற்ற நன்னகரை, ஐந்து புலன் நிலைகலங்கும் இடத்து அஞ்சேல் என்பார்தம் ஐயாறு என்று, புந்திநிறை செந்தமிழின் சந்தஇசை போற்றிசைத்தார் புகலிவேந்தர்'' (301).

(5) ''மங்கைவாழ் பாகத்தான் மழபாடி தலையினால் வணங்குவார்கள். பொங்கும் மாதவமுடையார் எனத் தொழுது போற்றிசைத்துக் கோயில் புக்கார்''. (306),

(6) ''சென்று திருமாந்துறையில் பரிதி மதி மருத்துவர்கள் தொழுது வழிபாடு செய்ய நின்றநிலை சிறப்பித்துப் பாடினார்''. (309).

(7) ''விண்ணவர் போற்றிசை ஆனைக்காவில் நாற்கோட்டு நாகம் பணிந்ததும், அண்ணல் கோச்செங்கண் அரசன் செய்த அடிமையும் அஞ்சொற்றொடையில் வைத்தார்''. (345),

(8) ''அவம் இலா நெஞ்சமே அஞ்சல் நீ, உய்யுமாறு கருதி என்றே, சிவனது ஆரூர் தொழாய் நீ மறவாது என்று செங்கைகூப்பிப் பவனமாய்ச் சோடையாய் எனும் திருப்பதிகம் முன் பாடினார்.'' (518).

பதிகச் செய்தி :

(5) இங்ஙனம் சேக்கிழார் பெருமான் செய்தருளிய தக்க விளக்கங்கள் இல்லையேல், சம்பந்தரின் பதிகங்கள் பலவற்றைப் பற்றிய முழுச் செய்திகளையும் நம்மனோர் தெரிந்து கொண்டிருக்க இயலாது. ''மணிவளர் கண்டரோ, மங்கையை வாடமயல் செய்வதோஇவர்மாண்பே'' எனவரும் திருப்பாச்சிலாச்சிராமப் பதிகமும், ''உடையாய் தகுமோ ! இவள் உள் மெலிவே'' எனவரும் திருமருகற் பதிகமும், திருநாவுக்கரசர் அருளிச் செய்த திருக்கழிப்பாலைப் பதிகங்கள் போல, அகப் பொருட்டுறையில் 'நற்றாய் இரங்கல்' என்னும் நிலையில் அமைந்த பதிகங்கள் என்றே கருதப்படுதல் கூடும். இவைகள்

முறையே கொல்லி மழவன் என்பவனின் புதல்வியைப் பற்றியிருந்த முயலக நோய்த் தீர்த்தருளப் பாடியது என்றும், கன்னிகை ஒருத்திக்காகக் கருணை கூர்ந்து, பாம்பு கடித்து இறந்துபட்ட அவளது காதற் கணவனாகிய வணிகனை உயிர்ப்பித்தருளப் பாடியது என்றும். நமக்குச் செவ்விதின் விளக்கியருளியவர் சேக்கிழாரேயாவர்.

(6) இவ்வாறே 'அவ்வினைக்கு இவ்வினையாம்' எனத் தொடங்கும் திருக்கொடிமாடச் செங்குன்றூர்ப் பதிகமும்; 'மாதர் மடப் பிடியும்' எனத் தொடங்கும் யாழ்மூரிப்பதிகமும்; 'வேயுறு தோளிபங்கன்' எனத்தொடங்கும் கோளறு பதிகமும் பற்றிய செய்திகளை, நாம் அப்பதிகங்களின் அமைப்பினால் அறிந்து கொள்வது அரிது. இவைகள் முறையே கொடிய நளிர்சுரநோய் போக்குவதற்கும் (335, 336); இறைவனின் புகழ் இசைக் கருவியினில் அடங்காது என்பது காட்டுதற்கும் (451, 452); நாளும் கோளும் தீயவாக உள்ளன என்று கூறித் தமது மதுரைச் செலவினை விலக்கலுற்ற திருநாவுக்கரசர்க்குத் தாம் அங்குச் செல்லின் பழுதடையாது எனப் பகர்வதற்கும் (616), சம்பந்தரால் பாடப்பெற்றவையாகும் என்று, அவற்றின் வரலாற்று முறையினை அறிவுறுத்தியருளிய சிறப்பு, நம் சேக்கிழார் பெருமானுக்கே உரியதாகும்.

பதிகத் தொடர்ப் பொருள் விளக்கங்கள் :

(7) இம்மட்டோ! சம்பந்தரின் பதிகங்கள் சிலவற்றில் வரும் தொடர்களில், நமக்கு ஏற்படக்கூடிய ஐயங்கள் சிலவற்றைத் தாமே நுனித்தறிந்து எடுத்துக்கொண்டு, சேக்கிழார் பெருமான் அத்தொடர்களின் உண்மை நுண்பொருட்டிறம் இதுவென்றும், நமக்கு உணர்த்தியருளுகின்றார். திருநெடுங்களம் பதிகத்தில் '' இடர்களையாய் '' ''இடர்களையாய்'' என ஒவ்வொரு பாடலிலும் சம்பந்தர் வேண்டிக்கொள்ளுகின்றார். நாம்அதனை ஓதும்போது, சம்பந்தர்க்கு உற்ற இடர் யாது? சம்பந்தர் போன்ற அரும்பெரும் சான்றோர்களுக்கும் இடர் நேருமோ? என, நமக்கு ஐயம் எழலாம். இறைவனையே இடைவிடாது நினைத்துத் தியானித்துக் கொண்டிருக்க விடாமல், உள்ளம் ஒரோவழி உலகியலிலும் ஈடுபட்டு உழலுதலே, இங்கு 'இடர்' எனப்பட்டது என்கின்றார் சேக்கிழார். ''நெடுங்களத்து ஆதியை அன்பால் நின்பால் நெஞ்சம் செலாவகை நேர்விலக்கும் இடும்பைகள் தீர்த்தருள் செய்வாய் என்னும் இன்னிசைமாலை கொண்டு ஏத்தினர்'' என்பது பெரியபுராணம். (340).

(8) இவ்வாறே ''இதுவோ எனை ஆளுமாறு? ஈவது ஒன்று எமக்கு இல்லையேல் அதுவோ உனது இன்னருள்? ஆவடுதுறை அரனே!'' எனவரும் திருவாவடுதுறைப் பதிகத்தொடரின் பொருளும் நமக்கு ஐயம் விளைவிப்பதாக உள்ளது. திருவாவடுதுறைப் பெருமானே! நீர் எம்மை ஆட்கொண்டருளுந் தன்மை இதுதானோ? நீர் எமக்குக் கொடுக்கக்கூடியது ஒன்றும் இல்லையென்றால், அதுதான் உமது இனிய அருளின் திறமோ? என்றுதான், நாம் பெரும்பாலும் பொருள் கொள்வோம். அங்ஙனம் கொள்ளின், சம்பந்தர் இறைவனை ஏதோ இரந்ததுபோலவும், இறைவன் அவருக்கு ஒன்றும் ஈந்திலர் போலவும், அங்ஙனம் ஏதும் ஈயாமையால் சம்பந்தர் இறைவனை இகழ்ந்து நிந்தித்தது போலவும் எல்லாம் தோன்றக்கூடும். ஆதலின் அது பொருள் அன்று என விலக்கி, '' அந்தமில் பொருளாவன ஆவடுதுறையுள் எந்தையார் அடித்தலங்கள் அன்றோ? என எழுந்தார்''. ''நீள் நிதி வேண்டினார்க்கு ஈவது ஒன்று மற்று இலேன்; உன் அடி அல்லது ஒன்று அறியேன் என்று, பேரருள் வினவிய செந்தமிழ் எடுத்தார்'' எனச் சேக்கிழார் சுவாமிகள் விரித்துரைத்து விளக்கியிருக்கும் திறம் பொன்னினும் மணியினும் போற்றத்தகுவதாகும்.

திருவாலங் காடு ;

(9) சேக்கிழார் பெருந்தகை, தேவாரத் திருப்பதிகங்களை எங்ஙனம் நுணுகி நுணுகி ஆராய்ந்து சிறப்புற விளக்கியிருக்கின்றார் என்பதற்குத் திருவாலங்காட்டுத் திருப்பதிகம் ஒரு சிறந்த இணையற்ற சான்றாகும். திருஞானசம்பந்தர் காஞ்சிபுரம், திருமாற்பேறு, திருவல்லம், இலம்பையங்கோட்டூர் திருவிற்கோலம்(கூவம்), திருவூறல் (தக்கோலம்), முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருவாலங்காடு என்னும் தலத்திற்கு அருகு வந்தார். அத்தலம் அம்மையப்பரைத் தலையால் நடந்து போற்றிய காரைக்காலம்மையார் எழுந்தருளியுள்ள பதி என்று கருதி, அத்தலத்தை மிதிப்பதற்கு அஞ்சி, அருகேயுள்ள பழையனூரிற் சென்று தங்கிஅன்றிரவு பள்ளிகொண்டருளினர். அப்போது இறைவன் நள்ளிரவில் கனவில் தோன்றி ''நம்மைப் பாடுதற்கு மறந்தனையோ'' என்று வினவியருள, உடனே சம்பந்தர் விழித்தெழுந்து பதிகம்

பாடினுர், எனப் பெரியபுராணம் பாடிச் செல்லுகின்றது (1009, 1010). அவ்வரலாற்று நிகழ்ச்சியினைத் ''துஞ்ச வருவாரும் -தொழுவிப் பாரும்—வழுவிப்போய் நெஞ்சம்புகுந்து என்னை நினைவிப்பாரும்'' எனவரும் சொற்ருெடர்களாலேயே உன்னித்து ஓர்ந்து உணர்ந்தார். உணர்ந்ததன் பயனே சேக்கிழார் அதனை விவரித்துப் பாடியருளியதற்குக் காரணமாகும்.

பழையனூர் நீலி கதை :

மேலும் அப்பாடலில் ''முனைநட்பாய் வஞ்சப்படுத்து ஒருத்தி வாழ்நாள் கொள்ளும் வகை'' எனவரும் சொற்ருெடரில் அமைந்துள்ள நீலிகதை என்னும் பழைய வரலாற்றுச் செய்தி ஒன்றினையே, ''நற்றிறம்புரீ பழையனூர்ச் சிறுத்தொண்டர் நவை வந்து உற்றபோது தம்உயிரையும், வணிகனுக்கு ஒரு கால் சொற்ற மெய்ம்மையும் தாக்கி, அச்சொல்லையே காக்கப்பெற்ற மேன்மையில் நிகழ்ந்தது பெருந்தொண்டைநாடு'' என்று, திருக்குறிப்புத் தொண்டர்புராண வரலாற்றில் சேக்கிழார் விதந்தெடுத்து விளக்கிப் பாடியருளினுர்,

''மாறுகொடு பழையனூர் நீலி செய்த
வஞ்சனையால் வணிகன் உயிர் இழப்பத் தாங்கள்
கூறியசொற் பிழையாது துணிந்து செந்தீக்
குழியில் எழுபது பேரும் முழுகிக் கங்கை
ஆறணிசெஞ் சடைத்திருவாலங்காட்டப்பர்
அண்டமுற நிமிர்ந்தாடும் அடியின் கீழ்மெய்ப்
பேறுபெறும் வேளாளர் பெருமை எம்மால்
பிரித்தளவிட்டு இவ்வளவுஎனப் பேசல் ஆமோ?''

என உமாபதிசிவம் விரித்துரைத்துப் பாடுதற்கு வழிவகுத்தருளிய பெருமை சேக்கிழார்க்கே உரியதாகும்.

மண்ணில் நல்ல வண்ணம் :

(10) திருஞான சம்பந்தர் அருளிச் செய்த தேவாரத்திருப்பதிகங்களுள், 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' என்பது அனைவரும் அறிந்ததொன்று. எனினும், இப்பாடல் சம்பந்தரால் எங்கே பாடப்பெற்றது என வினவினுல், நம்மிற் பெரும்பாலோர் 'கழுமலம்' என அப்பாடலில் வருவதைக்கொண்டு அது சீர்காழியில் பாடப்பெற்றது எனவே விடைகூறுவர். ஆனுல் சேக்கிழார் பெருமானே அது மதுரையில் இருந்தபோது பாடியதுஎன்று பெரியபுராணத்தில் குறிப்பிட்டருளியிருக்கின்ருர். அங்ஙனம் அவர் நுனித்தறிந்து உணர்ந்து பாடுதற்குக் காரணம், 'பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே' என்னும் வரியின் ஈற்றிலுள்ள ஏகாரத்தின் நுண் பொருட்குறிப்பேயாகும்.

''தேற்றம் வினவே பிரிநிலை எண்ணே
ஈற்றசை எனஐந்து ஏகா ரம்மே''

என்பது தொல்காப்பியம். இதனேடு 'இசைநிறை' என்ற ஒன்றையும் சேர்த்து ஏகாரப் பொருள்கள் ஆறு என்று, நன்னூல் இயற்றிய பவணந்தி முனிவர் கூறுவர்.

'அவர்களுள் இவனே நல்லவன்' என்பது பிரிநிலை. 'நீயே இங்ஙனம் கூறினுய்?' என்பது வினு. 'இவனே அதனை எடுத்தான்' என்பது தேற்றம். 'என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே' என்பது ஈற்றசை. 'நிலனே நீரே தீயே வளியே விசும்பே' என்பது எண், 'ஏயே இவள் ஒருத்தி பேடியோ' என்பது இசைநிறை. ஏகார இடைச்சொல் குறிக்கும் இந்த ஆறுவகைப் பொருள்களுள், 'பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே' என்னும் வரியின் இறுதியில் உள்ள ஏகாரம், ஈற்றசை(பொருளில்லாதது) எனவே, நாமெல்லாம் பெரும்பாலும் கொள்வோம். ஆனுல், சேக்கிழார் சுவாமிகளோ திருவருளின் துணையால், அது வேறு பொருள் குறிப்பது என உணர்ந்து கொண்டு, நமக்கும் விளக்கிக் காட்டியருளுகின்ருர்.

திருஞானசம்பந்தப்பெருமான் பாண்டி நாட்டில் சிவநெறியைச் செழிப்பித்துத் திருநீற்ருெளி பரப்பி, மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் மகிழ்ந்து வணங்க, மதுரையின் கண் அரச விருந்தினராகச் சிலநாள் தங்கியிருந்தார்.

அப்போது தம் அருமைப் புதல்வரின் பிரிவைத் தாங்கலாற்ருத சிவபாதஇருதயர், அவரைக் காணுதற்குக் கழிபெரு வேட்கை மீதூர்ந்து, பாண்டிநாடு நோக்கிப் புறப்பட்டு மதுரையைச் சென்று அடைந்தார். மதுரையில் திருஞானசம்பந்தர் தங்கியிருந்த திருமடத்தை வினவித் தெரிந்துகொண்டு தேடியடைந்தார். அங்கிருந்த அன்பர்கள் அவரை வணங்கி வரவேற்றனர். திருஞான

சம்பந்தர்பால் ஓடிச் சென்று 'அப்பர் எழுந்தருளினுர்'என்று மகிழ்ச்சியுடன் அறிவித்தனர். அப்பர்' (தந்தையார்) என்ற அளவில், சம்பந்தர் சிவபெருமானையே நினைவுகூர்ந்தார். ஆதலின் 'எப்பொழுது வந்தருளிற்று' என வினவிக்கொண்டு எதிர் எழுந்தருளினுர். ஆனுல் அப்பொழுது அவர்முன் சிவபாத இருதயர்தாம் சென்றணைந்தார். அந்நிலையில், சம்பந்தர் அவரை எதிர்தொழுது மகிழ்ந்தார்.

எனினும், உலகியற் றந்தையைக்கண்ட திருஞானசம்பந்தருக்குச் சிவபெருமான் ஆகிய தம்முடைய அருளியல் தந்தையின் நினைவே மேலோங்கி நின்றது. ஏனைய உயிர்கட்கெல்லாம் பொதுவாக அம்மையப்பனுய் விளங்கும் இறைவன், திருஞானசம்பந்தர் திறத்தில் உண்மையிலேயே அம்மையப்பனுய் எழுந்தருளி, இளங்குழவிப் பருவத்திற்ருனே அவரை ஆண்டுகொண்டு தண்ணளி புரிந்தனன் ஆதலின், அத்தகைய அம்மையப்பரின் நலத்தை வினவியறிய அவருள்ளம் விரைந்தது. அம் மன எழுச்சியால், சம்பந்தர் சிவபாத இருதயரை நோக்கி,

" அருந்தவத்தீர் ! எனையறியாப்
பருவத்தே எடுத்தாண்ட
பெருந்தகை, எம்பெருமாட்டி
யுடன் இருந்ததே?"

எனத் திருப்பதிகம் போற்றிசைத்தார். அத் திருப்பதிகமே "மண்ணில் நல்லவண்ணம்" எனத் தொடங்குவதாகும். அத்திருப்பதிகம் இத்தகைய ஒரு பொருந்திய சூழ்நிலையிலேயே திருந்த அருளிச் செய்யப்பட்டது என்பதனைச் சேக்கிழார் பெருமான், 'காலம் இடையிட்டவற்றையும், தேயம் இடையிட்டவற்றையும் காணும் ஞானக்கண் கொண்டு' திருவருள் துணையால் உணர்ந்து நமக்கு உணர்த்தியருள்கின்ருர்.

திருஞானசம்பந்தரின் உணர்வோடு, சேக்கிழார் பெருமானின் உணர்வும் ஒன்றி இயைந்து நின்று திளைத்திருந்தாலன்றி, இச் சூழ்நிலையை அவர் இனிதுணர்ந்திருத்தல் இயலுமோ? சேக்கிழாருக்கு இச்சூழ்நிலையின் பெற்றியுணர்தற்குப் பெரிதும் உதவியது. "பெருந்தகை இருந்ததே" எனவரும் ஈற்றடியில் உள்ள ஏகாரமேயாகும். நம்போன்ருேர் அவ்வேகாரத்தினை "ஈற்றசை" என்ருே, 'பிற' என்ருே எளிதாக எண்ணி. எள்ளித் தள்ளி விடுவோம். ஆனுல், சேக்கிழார் பெருமான் தேவாரத் திருப்பாடல்களின் ஒரு சிறு எழுத்தினையும் பொருளற்றதெனப் புறக்கணிக்க உள்ளம் ஒருப்படுவரோ? சேக்கிழார் அவ்வேகாரத்தினை வினுப்பொருள் குறித்ததென நுண்ணிதின் எண்ணியுணர்ந்தார்:

" மண்ணில் நல்ல என்றெடுத்து,
மனத்தெழுந்த பெருமகிழ்ச்சி
உண்ணிறைந்த காதலினுற்
கண்ணருவி பாய்ந்தொழுக,
அண்ணலார் தமைவினவித்
திருப்பதிகம் அருள் செய்தார்
தண்ணறும்பூஞ் செங்கமலத்
தார்அணிந்த தமிழ்விரகர்"

எனத் தாம் நுண்ணிதின் எண்ணியுணர்ந்த செம்பொருளைச் சேக்கிழார் சுவாமிகள், நாமும் உணர்ந்து மகிழ விளக்கியிருத்தல் காணலாம்.

இச்செய்யுளின்கண் "அண்ணலார் தமை வினவித் திருப்பதிகம் அருள் செய்தார்" எனவரும் வரியில் அமைந்துள்ள வினவி என்னும் ஒரு சொல்லே மிகவும் உயிர்ப்புடையதாய், அத் திருப்பதிகத்தின் கருத்து முழுவதனையும் சுருக்கித் தொகுத்துத் திரட்டியுணர்த்தி நிற்கின்றது. இங்ஙனம் இங்கு ஏகாரம் வினுப்பொருள் உணர்த்தி வந்தது என்பதனைக் குறிப்பதற்கு, வினவி என்னும் ஒரு சொல்லைப்பெய்து பொருளைத் தெளிவு படுத்தி அருளிய சேக்கிழாரின் அருமைப்பாடு அனைவரும் வியக்கத்தகுவது.

பையவே செல்க :

(11) திருஞான சம்பந்தர், மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் வேண்டிக் கொண்டபடி, மதுரைக்குச் சென்று திருமடம் ஒன்றில் தங்கியிருக்கின்ருர். அப்போது சமணர்கள் அவர் தங்கியிருந்த மடத்திற்குத் தீக்கொளுவினர். அதுகண்ட சம்பந்தர் தம்முடன் தங்கியிருந்த அடியார்களுள் ஒருவருக்கும் தீங்குநேராதபடி, "செய்யனே, திரு ஆலவாய் மேவிய ஐயனே, அஞ்சல் என்று அருள்செய் எனை; பொய்யராம் அமணர் கொளுவும் சுடர் பையவே சென்று பாண்டியற்

காகவே'' என்னும் பதிகம்பாடினர். இப்பாடலில்வரும் பையவே என்னும் சொல்லைச் சம்பந்தர் அமைத்ததற்குரிய காரணங்களை ஆராய்ந்து, நிரல்படுத்தி,

'' பாண்டிமா தேவியார் தமது பொற்பிற்
பயிலுநெடு மங்கலநாண் பாது காத்தும்,
ஆண்டகையார் குலச்சிறையார் அன்பினாலும்,
அரசன்பால் அபராதம் உறுத லாலும்,
மீண்டுசிவ நெறியடையும் விதியி னாலும்,
வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்
தீண்டியிடப் பேறுடையன் ஆத லாலும்,
தீப்பிணியைப் பையவே செல்க என்றார் ''

என்று திட்பநுட்பம் அமையச் சேக்கிழார் தெளிவுற விளக்கியிருக்கும் திறம், அவர்தம் தெய்விக நுண்மாண் நுழைபுலத்தினை யுணர்த்தும்.

வாழ்க அந்தணர் :

(12) திருஞான சம்பந்தப் பெருமான் அருளிய பதிகங்கள் அனைத்துமே 'பாசுரம்' எனப்படுமாயினும், 'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்' எனத் தொடங்கும் பதிகம் ஒன்றுமட்டும், 'திருப்பாசுரம்' எனப் பெரிதும் சிறப்பித்து வழங்கப் பெறும். சமணர்கள் புரிந்த புனல் வாதத்தில் வைகை யாற்று வெள்ளத்தில் எதிரேறிச் சென்ற பெருமாட்சிமையுடையது அத்திருப்பாசுரம். அதன் கண், (1) 'வாழ்க அந்தணர் வானவர் ஆன் இனம்' என்றது, உலகம் இன்புற்று வாழ்வதற்காகச் சிவபெருமானுக்குச் செய்யப்படுகின்ற நலல வேள்விகளும், அர்ச்சனை வழிபாடுகளும் நிலை பெறுதற் பொருட்டு. (2) 'வீழ்க தண்புனல்' என்று மழையினை வாழ்த்தியது, அது வேள்வி நற்பயனுதலும், சிவார்ச்சனைக்குரிய நல்லுறுப் பதாலும் பற்றி. (3) ''வேந்தனும் ஓங்குக'' என்று அருளிச் செய்ததனல், பாண்டியனுடைய உள்ளக்கூனும் உடற்கூனும் நிமிர்ந்தன; அவன் 'நின்றசீர் நெடுமாறன்' எனப் போற்றப்பெறும் சிறந்த நிலையை அடைந்தான். (4) 'ஆழ்க தீயது'' என்றது இறையருள் நெறிக்குப் புறம்பான அயல் நெறிகளின் தீங்குகள் கெடுதற்கு. (5) 'எல்லாம் அரன் பெயர் சூழ்க' என்றது, உலகிலுள்ள உயிர்கள் அனைத்தும் அஞ்செழுத்தோதி வளர்ந்து வாழ்தலைக் குறித்து. (6) ''வையகமும் துயர் தீர்க'' என்றது, இவ்வுலக மக்கள் இம்மை வாழ்விலும் மறுமைவாழ்விலும் துயரம் தீர்ந்து எல்லா நலன்களும் பெற்று இன்புறுக என்று வாழ்த்தியபடி. 'வையகம் துயர் தீர்க' என்னமல், உம்மை கொடுத்து 'வையகமும் துயர் தீர்க' என்றருளிச் செய்த தனல், 'வையகம்' என்பதற்கு இம்மை வாழ்வு என்று பொருள் கொண்டும், எதிரது தழீஇய எச்ச உம்மையால், மறுமை வாழ்வை இணைத்துக் கொண்டும் ''இகபரத்தில் துயர் மன்னி வாழ் உலகத்தவர் மாற்றிட முன்னர் ஞானசம்பந்தர் மொழிந்தனர்'' எனச் சேக்கிழார் விளக்கியருளினர்.

முடிவுரை :

இங்ஙனம் இத் திருப்பாசுரத்தின் பாடல்கள் அனைத்திற்குமே, சேக்கிழார் பெருமான் (ச. பு. செ. 820 முதல் 847 முடிய) மிக விரிவாகப் பொருள் விளக்கம் செய்தருளியிருக்கின்றார். எனினும், ''திருஞான சம்பந்தர் அருளிய இத்திருப்பாசுரத்தின் பொருள் முழுவதனையும் அறிந்து யான் விளக்கினேன் இல்லை. சிறியவன் ஆகிய என்னுடைய அறிவிற்கு, அவர்தம் திருவடிகள் ஒருசிறிது உணர்த்தியபடி, எனக்குத் தெரிந்த அளவில் ஏதோ இயன்ற அளவுகூறி, அன்பினல் தொழுது போற்றினேன்'' என்னும் கருத்தமைய,

'' வெறியார் பொழிற் சண்பையர்
வேந்தர் மெய்ப்பாசுரத்தைக்
குறி ஏறிய எல்லை அறிந்து
கும்பிட்டேன் அல்லேன் ;
சிறியேன் அறிவுக்கு அவர்தம்
திருப்பாதம் தந்த
நெறியே சிறிதுயான் அறிநீர்மை
கும்பிட்டேன் அன்பால் ''—சேக்கிழார்

எனத் தமது அடக்கமும் அன்பும் பணிவும் தோன்றச் சேக்கிழார் பெருந்தகையே குறிப்பிடுவாராயின், நற்போலியர் நிலை எத்தகையது என்று சொல்லுதலும் வேண்டுமோ? ஆதலின் ''சம்பந்தர் பதிகங்களும், சேக்கிழார் விளக்கங்களும்'' பற்றிச் ''சிறியேன் அறிவுக்குச் சேக்கிழார் தம் திருப்பாதம் தந்த நெறியே, சிறிதுயான் அறிநீர்மை கும்பிட்டேன் அன்பால்'' எனக் கூறி அமைகின்றேன்,

—ஆசிரியர்

திருவாசகத்தின் சிறப்பு

திரு. கே. எஸ். நரசிம்மன், B.A.B.L., I.A.S.,

ஆணையர்,
அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழியில் எத்தனையோ பல சிறந்த நூல்கள் இருந்து வருகின்றன. அவற்றுள் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் போல, மணிவாசகர் இயற்றிய திருவாசகமும், அனைத்துலகப் புகழ் பெற்றுத் திகழ்கின்றது. உலகியலுக்குத் திருக்குறளும், அருளியலுக்குத் திருவாசகமும், நமக்குச் சிறந்த வழி காட்டிகளாக விளங்குகின்றன. திருக்குறள், திருவாசகம் என்னும் இவ்விரு பெரு நூல்களையுமே, பேரறிஞர் திரு. ஜி. யு. போப்துரை அவர்கள், தமது ஆங்கில மொழியில் மொழிபெயர்த்து வியந்து புகழ்ந்து போற்றியிருக்கின்றார்.

திருவாசகத்தின் பெருமை எல்லையற்றது. ‘திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்’ என்பது தமிழ்நாட்டுப் பழமொழி. “திருவாசகப் பாடல்களைக் கேட்ட பொழுதே, கீழான பறவைகளும் பொல்லாத விலங்குகளும்கூட மெய்ஞ்ஞான நாட்டமுறும்” என இராமலிங்க அடிகளார், திருவாசகத்தின் சிறப்பினை மிகவும் விதந்தெடுத்துப் பேசுகின்றார். “தோத்திரத்திற் சிறந்தது திருவாசகம்; சாத்திரத்திற் சிறந்தது திருமந்திரம்” என்பது வடலூர் இராமலிங்க அடிகளார் வற்புறுத்தியுணர்த்திய நற்பெருங் கருத்தாகும்.

திருவாசகம் தன்னை ஓதுபவரின் உள்ளங்களை உருக்கி உயர்த்தி உய்விக்கும் திறத்தில் தனிப்பெரும் சிறப்புடையதாகும். சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் மாண்புமிக வாய்ந்தது, மணிவாசகர் அருளிய

திருவாசகம் என்பது, வாழையடி வாழையாக வந்த நம் சமய ஞானச் செல்வர்கள் அனைவரும், நன்கினிது கண்டுணர்ந்த உண்மை அனுபவமாகும்.

திருவாசகத்தின் சிறப்பினைத் துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், பின்வருமாறு உருவகம் செய்து கூறுகின்றார். “சிவபெருமான் ஒரு பெரும் கருணைக்கடல். கடலில் நதிசென்று சேருவது இயல்பு. சிவபெருமானாகிய கருணைக் கடலின் தலையில், கங்கை நதி சேர்ந்திருக்கிறது. கடலில் மேகங்கள் நீரை முகக்கும். அதுபோல மாணிக்கவாசகராகிய மேகம், சிவபெருமானாகிய கருணைக்கடலில் முகந்து, அருள் என்ற மழையைப் பொழிந்தது. அது திருவாசகம் என்னும் வெள்ளமாகப் பெருகுகிறது. அத்திருவாசகமாகிய அருள் வெள்ளம் ஓதுபவர்களின் உள்ளமாகிய குளத்தில் புகுந்து, நாக்கு என்னும் மதகில் நடந்து, கேட்பவர்களின் செவியாகிய மடையில் பாய்ந்து, உணர்வு என்னும் வயலில், அன்பாகிய விதையினின்று சிவம் என்னும் மென்முளையைத் தோற்றுவிக்கும், பின்னர் அதனில் இருந்து கருணை மலரவும், முத்தி அல்லது வீடு பேருகிய சிறந்த பயன் விளையவும் செய்யும்”.

“வலமழு உயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கருணைக்கடல்
முகந்துஉல குவப்ப உகந்த மாணிக்க
வாசகன் எனும்ஒரு மாமழை பொழிந்த
திருவா சகம்எனும் பெருநீர் ஒழுகி,
ஓதுவார் மனம்எனும் ஒன்குளம் புகுந்து
நாஎனும் மதகில் நடந்து, கேட்போர்

செவிஎனும் மடையிற் செவ்விதிற் செல்லா,
உளம்எனும் நிலம்புக ஊன்றிய அன்பாம்
வித்தில் சிவம்எனும் மென்முளை தோன்றி
வளர்ந்து, கருணை மலர்ந்து,
விளங்குறும் முத்தி மெய்ப்பயன் தருமே''

என்பது நால்வர் நான்மணிமாலைச் செய்யுள். இதனால் திருவாசகம் தன்னை ஓதுபவர்களுக்கு இம்மை மறுமை ஆகிய எல்லா நலன்களையும் விளைவிக்கும் சிறப்புடையதாதலையுணரலாம்.

திருவாசகப் பாடல்கள் - எத்தகைய உள்ளங்களையும் உருக்கிவிடக்கூடிய சிறப்புடையதாகும். உள்ளத்தை உருக்கும் திறனில் திருவாசகம் போலச் சிறந்த நூல் பிறிதெதுவும் இல்லை எனலாம். ''திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின், கருங்கல் மனமும் கரைந்துருகும்'' என்று பெரியோர்கள் இதனைப் புகழ்ந்து போற்றியுள்ளனர்.

''அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே யனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ?
இன்றோர் இடையூறு எனக்குண்டோ!
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே?''

''இன்றெனக் கருளி இருள்கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்;
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும் நீயல்லை; அன்றி ஒன்றில்லை;
யாருனை அறிய கிற்பாரே?''

என்பனபோல, எத்தனையோ பல சிறந்த பாடல்கள் திருவாசகத்தில் உள்ளன. அவைகளைப் படித்துப் படித்து நாம் மகிழலாம். அன்புடன் நெஞ்சுருகப் பாடி இறைவனை வழிபடலாம்; இம்மை மறுமை வாழ்விற்குரிய எல்லா நலங்களையும் எய்தலாம். ★



பழநியில் நிகழ்ந்த திருவாவினன்குடிக் குடமுழுக்கு நினைவுப் பெருவிழாவில். மத்தியக் கல்வி சமூகநலத் துணை அமைச்சர் மாண்புமிகு திரு கே எஸ். இராமசாமி அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தல் உடன் இருப்பவர் திருவாவினன்குடிக் கோயில் திருப்பணி நன்கொடையாளர் திரு. எஸ். பி. இராமநாதன் செட்டியார் அவர்கள்.

அறநிலையத்துறை ஆற்றும் அரும்பணிகள்

★

மாண்புமிகு
திரு. மு. கண்ணப்பர் அவர்கள்,
அறநிலைய அமைச்சர்,
தமிழ்நாடு அரசு.

★

ஆலயங்கள் வழிபாட்டுக்கு மட்டுமின்றி, மக்கள் நல்வாழ்வுக்கும் பெருமளவில் உதவி வருகின்றன. தமிழகத்தில் உள்ள ஆலயங்களின் மூலமாக அரசுக்கு வருவாய் வருவதுடன் அதனால் பள்ளிகள், கல்லூரிகள், அனாதை இல்லங்கள், குழந்தைக் காப்பகங்கள் முதலியன சிறந்த முறையில் நடந்து வருகின்றன. இந்து அறநிலையத் துறை இச் செயற்கரிய செயலுக்கு ஊக்கந்தரும் வகையில் திறம்பட இயங்கி வருகிறது. கோயில்கள் மக்களுக்கு ஆற்றி வரும் அருந்தொண்டுகள் பற்பலவாகும்,

இந்து சமய அறக்கட்டளைகள் (நிருவாகத்) துறை 10,865 அற நிலையங்களைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுள்ளது. இவைகளின் வருவாய் ரூ. 5,55,78,000 என்று மதிப்பிடப்படுகிறது. இந்த அறநிலையங்களில் 157 மடங்களும், 9,876 கோயில்களும், 832 குறிப்பிட்ட அறக்கட்டளைகளும் அடங்கியுள்ளன. கோயில் நிலங்களுக்காக நியமிக்கப்பட்ட சிறப்புப் பணியாளர்களின் ஆய்வின் பலனாக இத்துறையின் கட்டுப்பாட்டிற்குள் அண்மையிற் கொண்டுவரப்பெற்ற ஒரு மடமும், 824 கோயில்களும் இதில் அடங்கும்.

இத்துறையை நடத்தி வருவதற்கான வருவாய், உதவித் தொகைகளிலிருந்தும், தணிக்கைக் கட்டணங்களிலிருந்தும் கிடைக்கின்றது. இப்பிரிவின்படி ரூ. 200-க்குக் குறையாத வருவாய் உள்ள ஒவ்வொரு அறநிலையமும் குறிப்பிட்ட உதவித் தொகையினை இத்துறைக்குச் செலுத்த வேண்டும். ரூ 10,000-க்கு மேற்பட்ட வருவாய் உள்ள 561 கோயில்களும், ரூ. 1000 முதல் ரூ. 10,000 வரை வருவாய் உள்ள 4,680 கோயில்களும், ரூ 1,000-க்குக் குறைவாக வருவாய் உள்ள 6,624 கோயில்களும் உள்ளன. ஆண்டுதோறும் கிடைக்கும் துறை வருவாய் ரூ. 49 இலட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. 1971-72-ஆம் ஆண்டில் மேலே சொல்லப்பட்ட 825 புதிய அறநிலையங்கள் சேர்க்கப்பட்டதன் காரணமாக இந்தத் துறை பெறும் வருவாய் ரூ. 18,562 இந்த ஆண்டில் கூடுதலாகி உள்ளது. கோயில்களின் வருவாயைப் பெருக்கவும், நிதி தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கவும் வேண்டிக்

கோயில்களின் நிருவாகம் இந்து சமய அறக் கட்டளைத் (நிருவாக) துறையின் முழுக் கட்டுப் பாட்டில் உள்ளது.

பொதுமக்களுக்குக் கல்விக்காகத் தன்னுலான சிறப்பு முறையில் இந்தத் துறை பணியாற்றி வருகின்றது. சமய நிறுவனங்களின் நிதிகளிலிருந்து கீழ்க்கண்ட கல்வி நிலையங்கள் பராமரிக்கப்படுகின்றன.

பழனியில், பழனி ஆண்டவர் கலைக் கல்லூரி, பழனி ஆண்டவர் செந்தமிழ்ப் பெண்கள் கல்லூரி. பழனி ஆண்டவர் பெண்கள் கலைக் கல்லூரி, கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறையிலுள்ள தேவி குமாரி பெண்கள் கல்லூரி, குற்றாலத்தில் உள்ள பராசக்தி பெண்கள் கல்லூரி. திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயில், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கலைக் கல்லூரிக்கு ரூ. 5 இலட்சம் நன்கொடையாகக் கொடுக்க முன் வந்துள்ளது.

இந்தியப் பண்பாட்டுக் கல்லூரிகள் இரண்டு உள்ளன. அவை: 1. இந்தியப் பண்பாட்டுப் பழனி ஆண்டவர் கல்லூரி,பழனி. 2. பூம்புகார்ப் பேரவைக் கல்லூரி, மேலையூர், தஞ்சாவூர் மாவட்டம்.

மாணவர் மற்றும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் பல கோயில்களால் நடத்தப் பெறுகின்றன. 1. இராமேசுவரம் தேவஸ்தானத்தினுல் இராமேசுவரத்தில் நடத்தப்பெறும் பர்வதவர்த்தினி அம்பாள் உயர்நிலைப்பள்ளி, 2. திருமலைக் குமாரசாமி பெண்கள் உயர்நிலைப் பள்ளி, குற்றாலம். இது திருநெல்வேலி மாவட்டம், பண்பொழி.திருமலைக் குமாரசுவாமி கோயிலினுல் நடத்தப்படுகிறது. 3. காந்திமதி அம்பாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பாளையங்கோட்டை; திருநெல்வேலி சுவாமி நெல்லையப்பர் தேவஸ்தானத்தினுல் நடத்தப்படுவது. 4.மீனுட்சி சுந்தரேசுவரர் தேவஸ்தானப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, மதுரை மீனுட்சி சுந்தரேசுவரர் தேவஸ்தானத்தினுல் நடத்தப் படுவது. 5. சுவேதாரண்யேசுவரர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டம், திருவெண்காடு சுவேதாரண்யேசுவரர் கோயிலினுல் நடத்தப்பெறுவது, 6. கலியுக வரதராசப் பெருமாள் தேவஸ்தானப்பெண்கள்உயர் நிலைப் பள்ளி, அரியலூர்; கள்ளக் குறிச்சி, கலியுக வரதராசப் பெருமாள் தேவஸ்தானத்தினரால் நடத்தப் பெறுவது, 7. சாமளாபுரத்தில் உள்ள உயர் நிலைப்பள்ளி, அய்யம் பாளையம் வாழைத் தோட்டத்து அய்யன் கோயிலினுல் நடத்தப் பெறுவது. 8. பெண்கள் உயர்நிலைப் பள்ளி, கோவிலூர்; தஞ்சாவூர் மாவட்டம், கோவிலூர்; மந்திரபுரீ சுவரர் கோயிலினுல் நடத்தப்பெறுவது.

கோயில்களில் கலை மற்றும் சிற்பக்கலை காட்டும் தொல் பொருட் களஞ்சியங்களைக் கீழ்க்காணும் சமய நிலையங்கள் பேணி வருகின்றன:—

1. திரு அரங்கநாத சுவாமி கோயில், திருவரங்கம். 2. திருமீனுட்சி சுந்தரேசுவரர் கோயில் மதுரை. 3. திரு ஜம்புகேசுவரர் கோயில் திருவானைக் கோவில், திருச்சி.

ஆயிரக்கால் மண்டபங்கள் உள்ள கோயில்கள், கலைக்கூடங்களைப் பேணி வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த மாநிலத்தின் மக்கள் நலனுக்காகவும், இத்துறை தன் பங்கினைச் செலுத்தி வருகின்றது. அனுதைகளுக்காக அனுதை இல்லங்களை, சமய நிறுவனங்களின் உபரி நிதியிலிருந்து நடத்தி வருகின்றது. பல ஆண்டுகளாக இவைகள் நடத்தப் பட்டு வந்தாலுங் கூட, அவைகளைப் பேணுதல் போன்றவைகளில் அதிகக் கவனம் செலுத்தியும், கூடுதலான எண்ணிக்கையில் சிறுவர்களைச் சேர்ப்பித்தும் புத்துயிர் கொடுக்கப்பட்டுள்ளது. கீழே சொல்லப் பட்டுள்ள கோயில்கள் அனுதை இல்லங்களைப் பேணி வருகின்றன.

1. சுப்பிரமணிய சுவாமி கோவில், திருத்தணி நகர் வட்டம், செங்கற்பட்டு மாவட்டம். 2. நவநீதேசுவரர் கோயில், சிக்கல், நாகப்பட்டினம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். 3. வைத்தியநாத சுவாமி கோயில், வைத்தீஸ்வரன் கோயில், சீர்காழி வட்டம். தஞ்சாவூர் மாவட்டம். 4. சீநிவாசப் பெருமாள் கோயில். நாச்சியார் கோயில், கும்பகோணம் வட்டம். 5. மீனுட்சி சுந்தரேசுவரர் தேவஸ்தானம், மதுரை. 6. தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம் பழனி. 7. நெல்லையப்பர் தேவஸ்தானம், திருநெல்வேலி. 8. சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் திருச்செந்தூர்.

1971-72-ஆம் ஆண்டில், இரு புதிய அனுதை இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

அவை : 1. வாழைத் தோட்டத்து அய்யன் கோயில், அய்யன் பாளையம், பல்லடம் வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம். 2. திருமலைக் குமாரசாமி கோயில், பண்பொழி தென்காசி வட்டம், திருநெல்வேலி மாவட்டம். அதிக எண்ணிக்கையில் அனாதை இல்லங்களைத் துவக்கத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

அறநிலையங்களின் உபரி நிதியிலிருந்து குழந்தைகள் காப்பகங்கள் நடத்தப்பட்டு, அவற்றில் பள்ளிப் பருவத்திற்கு முற்பட்ட குழந்தைகள் சேர்க்கப்படுகின்றனர். இவற்றில் இந்து சமய நெறிமுறைகளில் போதனை அளிக்கப்படுகின்றது.

குழந்தைகள் காப்பகங்கள் பின்வரும் அறநிலையங்களால் நடத்தப்பட்டு வருகின்றன: 1. வேதநாராயணப் பெருமாள் கோயில், திருநாராயணபுரம், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம், 2. சுப்பிரமணியசுவாமி கோயில், குமார வயலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம். 3. அரங்கநாதசுவாமி தேவஸ்தானம், காரமடை, அவிநாசி வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம் 4. மாரியம்மன் கோவில், இளம்பிள்ளை, சேலம் மாவட்டம்.

சமயபுரம், மாரியம்மன் கோயில் நிதியிலிருந்து 1971-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் ஒன்றும், பழனி தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம் நிதியிலிருந்து 1972-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் மற்றொன்றும் ஆக இரண்டு ஊமை-செவிடர் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1970-ஆம் ஆண்டு வரை, 14 சித்த மருத்துவ மனைகளைப் பல திருக்கோயில்கள் தங்களது உபரி நிதியிலிருந்து நடத்தி வந்தன. வழிபாட்டுப் பயணிகள் உட்பட வழிபடும் பொது மக்கள் பயன் பெறுவதற்காக அதிக மருத்துவ மனைகளும், மருந்தகங்களும் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தீவிர நடவடிக்கையின் காரணமாக 1971-ம் ஆண்டில் 24 புதிய சித்த மருத்துவ மனைகளை ஆரம்பிக்க அனுமதித்ததில் 5 சித்த மருத்துவ மனைகள் செயல்படத் துவங்கியுள்ளன. பொதுமக்களுக்குச் சமய நிறுவனங்கள் செய்யும் மாபெரும் தொண்டாக இதனைப் பொதுமக்கள் பாராட்டுகின்றனர்.

வழிபாட்டுப் பயணிகள் மற்றும் வழிபடுபவர்களின் பயனுக்காக ஓய்வு விடுதிகளையும், வழிபாட்டுப் பயணிகள் விடுதிகளையும் கட்டும் ஒருங்கிணைப்புத் திட்டம் ஒன்று இருந்து வருகின்றது. இது குறித்துச் சீரான முன்னேற்றம் காணப்படுகிறது.

திருச்செந்தூர், சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம் ரூ. 6 இலட்சம் செலவில் 96 அறைகளைக் கொண்ட புதிய கட்டடம் ஒன்றைக் கட்டிக் கொண்டிருக்கிறது. திருமணம் முதலியவற்றிற்காகத் திருமண மண்டபங்களைப் பொதுமக்கள் குறைவான அளவில் வாடகைக்கு எடுத்துக் கொள்ள வசதி செய்யும் பொருட்டுத் திருமண மண்டபங்களைக் கட்டும் திட்டம் மேற் கொள்ளப் பட்டுள்ளது. இந்த மண்டபங்கள் வழிபாட்டுக் கூடங்களாகவும் பயன்படுத்தப் படலாம்.

வருவாயற்ற, வறிய கோயில்களுக்கு அவைகளில் அவசரமாகச் செய்ய வேண்டிய பழுது பார்த்தல் மற்றும் அதிக அளவிலான பழுது பார்த்தலுக்கும் அரசு மானியங்கள் அளிக்கப்படுகின்றன. கோயில்களின் நிருவாகிகள் கோயிலைப் புதுப்பிக்கத் திருப்பணிக் குழுக்கள் அமைத்துப் பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் திரட்டியும், இதர சமய நிறுவனங்களிலிருந்து நிதி மாற்றம் மூலம் நிதிகள் பெற்றும் நடவடிக்கை மேற்கொள்ள அரசு மானியம் ஊக்கமளிப்பதாக உள்ளது.

1972-73-ஆம் ஆண்டிற்கு ரூபாய் ஐந்து இலட்சத்தினை மானியமாகக் கொடுக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

வில்லிப்புத்தூரிலுள்ள வட பத்திரசாயி கோயிலின் பெரிய கோபுரத்தை ரூபாய் நான்கு இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் செப்பனிட்டுப் புதுப்பிப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதித்துள்ளது. இப்பணி பொதுப்பணித் துறையிடம் பிறர்க்கான பணியாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்து சமய அறக்கட்டளைகள் ஆணையாளரின் பொதுநல நிதியிலிருந்து இதற்கென மொத்தம் ரூ. 3 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. மீதியுள்ள தொகை கோயில் நிதியிலிருந்தும், பொது மக்களிடமிருந்து நன்

கொடையாகவும் திருப்பணிக் குழுவினால் வழங்கப்படும்.

நடப்பு ஆண்டில் கோபுரம் அருகிலிருந்து மிகத் தூரமான இடத்திற்குக் கழிவு நீர்களைத் திசை மாற்றும் வேலை முடிக்கப் பெற்றுள்ளது. கோபுரத்தின் ஐந்தாவது அடுக்கு வரையில் உள்ள பழைய மர உத்திரங்கள் அகற்றப்பட்டுப் புதிய உத்திரங்கள் அமைக்கும் வேலை முடிவுற்று, பிற அடுக்குகளிலும் இப்பணி நடைபெற்று வருகிறது. கோபுரத்திலுள்ள வெடிப்புகளை அடைக்கும் வேலைக்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இதுவரை ரூ. 60,000 வரை செலவிடப்பட்டுள்ளது.

பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் திட்டமிட்டபடி செய்ய இருக்கும் திருப்பணிக்கான தலைசிறந்த திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூ. 40 இலட்சமாகும். ரூ. 3 இலட்சம் மதிப்புள்ள வேலைக்கான பிராகாரங்களை அகலப் படுத்துதல், தெற்கு, மற்றும் வடக்குக் கோபுரங்களைப் புதுப்பித்தல் ஆகிய வேலைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாநிலத்தில் உள்ள கோயில் நிலங்களைப் பொறுத்த எல்லாப் பொருள்கள் பற்றியும் நடவடிக்கை மேற்கொள்ளச் சிறப்புப் பணியாளர்களாக மாவட்ட வருவாய் அதிகாரி, மாவட்டத்தில் ஒரு தனி அதிகாரி, மற்றும் 4 தனித்துணை ஆட்சியாளர்களையும் அவர்களுக்குரிய பணியாளர் தொகுதியினையும் பணியில் அமர்த்திக் கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. ஆய்வுப் பணியினை விரைவு படுத்துவதற்காக 1971-ஆம் ஆண்டில் கூடுதல் பணியாளர்களை நியமனம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சமய நிறுவனங்களுக்கு, அவைகளின் பெயரில் பதிவாகி உள்ள எல்லா அசையாப் பொருள்களும் அவைகளின் சொத்து விவரப்பதிவேட்டில் குறிக்கப்பட்டும், சமய நிறுவனங்களில் உடைமையில் இல்லாத சொத்துக்கள் அனைத்தும் அவைகளின் உடைமையாக்கப்பட்டும் கணக்கில் கொண்டுவரப்பட்டும், அந்தச் சொத்துக்களின் வருமானம் முறையாகக் கணக்கிடப்பட்டும் வருவதைச் சரிபார்ப்பதற்காக இவ்விதம் ஏற்படுத்தப்பட்டது. நிலங்கள் முறையாகக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா என்றும் ஆக்கிரமிப்புகள், அனுமதியில்லாத இருப்பு அல்லது உடைமை முதலியன இருக்கின்றதா என்பதனைச் சரிபார்ப்பதற்காகக் கோயில்களுக்குச் சொந்தமாக உள்ள நிலங்கள் கட்டடங்கள், மனைகள் முதலியவற்றின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. முதல் நிலை ஆய்வின் பலனாகச் சிறப்புப் பணியாளர்கள், 1,59,322,27 ஏக்கர் நிலங்களுடைய 32,450 சமய நிறுவனங்களைக் கண்டுபிடித்துள்ளனர். இவைகள் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டிற்குள் இல்லாதவை. இந்தக்கோயில்களை நிருவாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக நிருவாக இலாகாவின்கீழ் சிறப்புப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1970-71-ம் ஆண்டு முடிய திருவரங்கம் கிழக்குக் கோபுரம், மற்றும் ஆயிரக்கால் மண்டபம், சேசராயர் மண்டபம் மேல் தளம் ஆகியவை பழுதுபார்த்தல் வேலை முடிக்கப் பெற்றுள்ளது. 1971-72-ஆம் ஆண்டில் சேசராய மண்டபத்தில் நீர்க்கசியும் மேல்தளம் பழுதுபார்த்தல் மற்றும் சேசராயர், ஆயிரக்கால் மண்டபங்களின் தூண்களைச் சுத்தப்படுத்துதல், வெள்ளைக் கோபுரச் சுதை வேலைகள் பழுது பார்த்தல், அடைப்பு அமைத்தல் மற்றும் பென்காப்சுலா தெளித்தல் ஆகிய வேலைகள் முடிக்கப் பெற்றுள்ளன.

இராமேசுவரத்திலுள்ள இராமநாதசுவாமி கோயில் "யுனெஸ்கோ" நிறுவனத்தின் உதவி பெறுவதற்காக இரண்டாவது கோயிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. "யுனெஸ்கோ வல்லுநர், திரு ஜி ஆர். எச். ரைட் என்பவர் இக்கோயிலை வந்து பார்வையிட்டு, தனது அறிக்கையினைக் கொடுத்துள்ளார். இந்தக் கோவிலுக்குத் தேவையான பொருள்கள் "யுனெஸ்கோ" நிறுவனத்தால் வழங்கப்படவிருக்கின்றன. பொருள்கள் ஆகியவற்றின் பட்டியலும் கொடுக்கப்பட்டுள்ளன இதுவரை "யுனெஸ்கோ இந்தக் கோவிலுக்குத் தனது உதவியினை வழங்கவில்லை. இது குறித்துப் புது டெல்லி, இந்திய அரசு கல்வி, மற்றும் சமூக நல அமைச்சகத்துடன் கடிதப் போக்குவரத்து இருந்து வருகின்றது.

மாநில யுனெஸ்கோ குழு, காஞ்சிபுரத்திலுள்ள வரதராசசுவாமி கோவிலையும், சிதம்பரத்திலுள்ள நடராசர் கோயிலையும் மூன்றாவது நான்காவது கோயில்களாக "யுனெஸ்கோ" நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் கீழ்த் தேர்ந்தெடுத்துள்ளது. இது குறித்தும், புது டெல்லி இந்திய அரசு கல்வி, மற்றும் சமூகநல அமைச்சகத்துடன் கடிதப் போக்குவரத்து இருந்து வருகிறது.

பொதுமக்களின் நலனுக்காக இம் மாநிலத்திலுள்ள கோயில்களின் நிருவாகத்தினை மேன்மையுறச் செய்யும் நோக்கத்தோடு இத்துறை தனது செயல்களை விரிவுபடுத்த, தொடர்ந்து முயற்சித்து வருகின்றது. ★

சமணமும் தமிழும்

திரு. க. த. திருநாவுக்கரசு, M.A., M.Litt.,
திருக்குறள் ஆராய்ச்சி விரிவுரையாளர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

முன்னுரை :

தமிழகத்திற்கும் சமண சமயத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு நெடுங்காலமாக இருந்து வருகிறது. சந்திரகுப்த மௌரியன் அரசைத் துறந்து, பத்திரபாகு என்ற சமண சமயப் பெரியாரோடு தென்னாட்டிற்கு வந்து தங்கிய காலம் முதற்கொண்டு சமண சமயத்தோடு நேரடியான தொடர்பு தமிழகத்திற்கு இருந்து வருகிறது. பத்திரபாகுவின் சீடர் விசாகதத்தர் என்பவராவர். விசாகதத்தரைச் சோழ பாண்டிய நாடுகளுக்கு அனுப்பி சமண சமயத்தைப் பரப்புமாறு பத்திரபாகு ஏற்பாடு செய்தார் என்று மைசூர் மாநிலத்திலுள்ள கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அக்காலந்தொட்டு கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரையில் சமண சமயம் தமிழகத்தில் தழைத்தோங்கியது. பின்னர் அரசியல் செல்வாக்குக் குன்றிய நிலையில் இலக்கியத் துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் சமண சமயம் ஆற்றல்மிக்க ஒரு சக்தியாகவே தமிழகத்தில் இயங்கலாயிற்று.

நீதி நூல் தொண்டு :

சமண சமயத்தின் செல்வாக்கு தமிழகத்தில் பெருகிய காலத்தில்தான் 'நீதி' என்ற சொல்லாட்சி தமிழ்மொழியில் வழங்கத் தொடங்கியது. சமண சமயத்தைப் பரப்ப முயன்ற துறவிகளாலேயே பெரிதும் நீதிநூல்கள் இயற்றப் பெற்றுள்ளன. அறநெறிக் கருத்துக்களைச் சமணர்களைப் போன்று அழகுற எடுத்துரைப்பார், இந்திய மண்ணில் இதுவரை வேறுயாரும் தோன்றவில்லை. அதிலும், அறநெறிக் கருத்துக்களைப் பாட்டாகப் பாடிய பெருமை சமணர்க்கே உரியது எனலாம்.

சமண சமயத் துறவிகள் பலர் இயற்றிய பாடல்கள் பலவற்றுள், நானூற்றைத் தொகுத்து அமைக்கப்பெற்ற நூல், நாலடியாராகும். இதை 'நாலடி நானூறு' என்றும் கூறுவர். திருக்குறளின் அமைப்பு முறையை ஓரளவிற்கும், அதன் கருத்துக்களைப் பேரளவிற்கும் பின்பற்றியதாக நாலடியார் விளங்குகிறது. அறம், பொருள் காமம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது இந்நூல். பதுமனார் என்னும் சமயப் புலவர் இந்நூலை வகைப்படுத்தி நல்லதோர் உரையினை வரைந்துள்ளார். இந்நூலின் அருமை பெருமைகளைப் படித்துணர்ந்த டாக்டர் ஜி. யு. போப் திருக்குறளோடு நாலடியாரையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். சமணக் கொள்கையின் அடிப்படையான வாழ்க்கை நுட்பங்கள் இங்கே விளங்குகின்றன. காமத்துப் பால் ஒரு சில பாக்களிலேயே அமைந்தாலும், திருக்குறளில் உள்ளதைப்போல நாடக வழக்காக அமைந்துள்ளமை இங்குக் கருதத் தக்கதாகும். பெருமுத்தரையர் என்னும் குறுநில மன்னரை நாலடியாரின் இரண்டு செய்யுட்கள் குறிப்பதால், இந்நூல் கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

பதினெண் கீழ்க்கணக்கு என்னும் தமிழ் இலக்கியத் தொகுதியில் திருக்குறள், நாலடியார் ஆகிய நீதி இலக்கியங்களுக்கு அடுத்த நிலையில் சிறப்பு மிக்கதாகப் பாவலரால் போற்றப்பெறுவது பழமொழியாகும். இதனைப்

''பழமொழி நானூறு'' என்றும் கூறுவர். முன்றுறையரையனர் என்ற சமணப் புலவரால் இந்நூல் இயற்றப் பெற்றுள்ளது. திருவள்ளுவரைப் போன்று திட்டமிட்டு இந்நூலை அரையனர் இயற்றவில்லை. அவ்வப்போது தாம் கண்டும் கேட்டும், உய்த்துணர்ந்தும் தெளிந்த பொருள்களை ஒவ்வொரு பழமொழியோடு இணைத்து ஒவ்வொரு வெண்பாவாகப் பாடிச் சேர்த்துள்ளார்.

சமண சமயத்தினருக்கே சிறப்பாக உரிய ஒழுகலாறுகள் பலவற்ரோடு, அறம் ஒழுக்கம் பற்றிய பொதுவான கருத்துக்களையும் தன்னகத்தே கொண்டு இலங்குவது முனைப்பாடியார் இயற்றிய அறநெறிச் சாரமாகும். கி.பி. பதின்மூன்றும் நூற்ருண்டைச் சேர்ந்தது இந்நூல்.

அறநெறிக் கருத்துக்களோடு சமண சமயக் கொள்கைகளை வற்புறுத்திக் கூறும் மற்ரெரு நூல் அருங்கலச் செப்பு. இந்நூல் குறட்பாக்களால் இயற்றப் பெற்றுள்ளது. அருங்கலான் வயத்தைச் சேர்ந்த சமணரால் படைக்கப்பெற்றதே அருங்கலச் செப்பு.

இலக்கணப் பணி :

தீபங்குடியில் சிறப்புற்று விளங்கிய 'அருங்கலான்வயம்' என்ற சமண சங்கத்தைச் சேர்ந்த அமிதசாகரர் என்னும் சான்ரேர் யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்னும் நூல்களை இயற்றியுள்ளார். இவை இரண்டும் செய்யுள் இலக்கணத்தைத் தனியே விரித்துரைக்கும் நூல்களாகும். 'யாப்பருங்கலம்' முன்னைய யாப்பாரய்ச்சியையெல்லாம் மழுங்கச் செய்து இன்றுவரை தன் கொள்கையையே எல்லோரும் கற்கும் வகையில் சிறந்து விளங்குகின்றது.

யாப்பருங்கலத்திற்கு அரியதொரு விருத்தியுரை எழுதப் பெற்றுள்ளது. காரிகைக்குக் குணசாகரர் என்ற சமணப் பெரியார் எளிமையும் தெளிவும் வாய்ந்த உரையினை எழுதியுள்ளார். யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியரும் குணசாகரராகவே இருக்கலாம் என்பது அறிஞர் நம்பிக்கை, சமண சமயச் சான்ரேர்களுள் ஒருவரான 'நேமிநாதர்' என்பவர் பெயரால், தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்தைக் குணவீர பண்டிதர் வெண்பாயாப்பில் 'நேமிநாதம்' என்னும் பெயரில் படைத்துள்ளார். சொற் செறிவும் பொருட் செறிவும் வாய்ந்தது இந்நூல். திரிபுவனதேவன் இரண்டாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1133-1150)காலத்தில் இப்புலவர் வாழ்ந்தவராவார்.

குணவீர பண்டிதரின் ஆசிரியர் வச்சணந்திமாலை என்ற பாட்டியல் நூலை இயற்றியுள்ளார். இந்நூல் வெண்பாயாப்பில் பாடப் பெற்றுள்ளமையால், 'வெண்பாப் பாட்டியல்' என்றும் வழங்கப் பெறுகிறது.

தொல்காப்பியத்திற்குப் பிறகு தமிழ் மொழியின் இலக்கணத்தைச் சிறந்த முறையில் பகுத்துப்பகுத்துத் தெளிவுறுத்தும் இலக்கணம் நன்னூலாகும். கொங்கு நாட்டுச் சனகாபுரத்துச் சிறப்புற்றிலங்கிய பவணந்தி என்ற சமணப் பெரியாரே இந்நூலினை இயற்றியுள்ளார். இவர் சீயகங்கன் என்ற கங்க அரசனின் விருப்பத்திற் கிணங்க இந்த இலக்கணத்தை எழுதினர். இச் சீயகங்கன் மூன்றும் குலோத்துங்கனின் மேலாண்மையை ஏற்றுக் கொண்ட குறுநில மன்னனுவான். எனவே, குலோத்துங்க சோழனின் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1178–1218) பவணந்தி முனிவர் வாழ்ந்தவராவார்.

இலக்கணத் தொண்டு :

ஐம்பெருங் காப்பியங்களுள் முதலில் வைத்து வழங்கப்பெறுவது சீவகசிந்தாமணி. இதுவிருத்தப்பாவால் இயற்றப்பெற்ற முதல் தமிழ்க் காப்பியமாகும். இலக்கிய நயம் அனைத்தும் நிறைந்தது சிந்தாமணி. இது கற்பனைத் திறனும் சொல்நயமும், பொருள் நயமும் பொருந்திய காதற் காப்பியமாகும். 'மகா புராணம்' என்ற வடமொழிநூலின் பிற்பகுதியே சிந்தாமணியாகத் தமிழாக்கப் செய்யப் பெற்றதாகச் சொல்லுவர். பதின்மூன்று இலம்பகங்(மாலை) களையுடையது இந்நூல்.

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று வளையாபதி. நூல் முழுவதும் கிடைக்கவில்லை புறத்திரட்டில் 66 பாடல்கள் இந்நூலைச் சேர்ந்தவை என்று குறிப்பிடப் பெற்றுள்ளன. அவை சமண சமயக் கருத்துக்களையே திரும்பத் திரும்ப எடுத்துரைக்கின்றன. இளம்பூரணர் 'உலகம் மூன்று' என்று தொடங்கும் பாடலை மேற்கோள் காட்டி, இது வளையாபதிச் செய்யுள் என்று குறிப்பிடுகின்ருர். எனவே, அவருடைய காலமான பதினேராம் நூற்ருண்டிற்கு முற்பட்ட காலத்தில் இந்நூல் இயற்றப் பெற்றிருக்கலாம்.

பெருங்கதை என்னும் மற்ரெரு நூல் சிலப்பதிகாரம், மணிமேகலையைப்போன்று



சிக்கல் சிங்காரவேலவர் இலவசச் சித்த வைத்தியசாலைத் திறப்பு விழாவில், வேளாண்துறை அமைச்சர் மாண்புமிகு மன்னை. ப. நாராயணசாமி அவர்களும், நல்வாழ்த்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும் ''முத்தமிழ்க் காவலர்'' திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களும், ஏனைய பல பெருமக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தல். (31—5—72)



★

நன்னிலம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. தம்பி தேவேந்திரன், M.L.A. அவர்கள், திருவெண்காடு சுவேதாரண்யேச்சுவர சுவாமி மகளிர் உயர்நிலைப்பள்ளியில், தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுதல். (14—7—72).

★

★

நமது அறநிலைய ஆணையர் திரு. K. S. நரசிம்மன், B.A.B.L., I.A.S., அவர்கள், திருவெண்காடு சுவேதாரண்யேச்சுவர சுவாமி மகளிர் உயர்நிலைப் பள்ளியில், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரை ஆற்றுதல்.(14—7—72).

☆

அகவற்பாவால் அமைந்தது' இதற்கு 'உதயணன் கதை என்ற பெயருமுண்டு. தமிழில் தோன்றிய முதல் மொழிபெயர்ப்பு நூல் இது. பைசாச மொழியில் குணாட்டியார் இயற்றிய 'பிருகத்கதை' என்னும் காப்பியத்தினைத் தழுவி, துர்வினீதன் வடமொழியில் 'பிருகத் கதை' என்னும் காப்பியத்தை இயற்றியுள்ளான். அந்நூலினைத் தழுவித் தமிழில் பெருங்கதை இயற்றப் பெற்றது என்பர். இதனை இயற்றிய கொங்குவேளிர், சமண சமயத்தைச் சேர்ந்தவர். இன்று நூல் முழுவதும் கிடைக்கப் பெறவில்லை. பொருட் சிறப்பிலும் நடையழகிலும் இதனைப் 'பெருங்காப்பியம்' என்று நாம் போற்றலாம்.

சூளாமணி என்னும் காப்பியம் சிந்தாமணியிலும் சிறந்ததாகக் கருதப் பெறுகின்றது. விருத்தப்பாவினால் இயற்றப்பெற்றது. சமண சமயத் தலைவர்களான 'திவிட்டன்' விசயன் ஆகியோர் வரலாற்றை விளக்கிக் கூறுவது. இந்நூல், ''தன்மையால் சூளாமணி எனப் பெயர் பெற்றது'' என்று மயிலைநாதர் கூறுகிறார். திவிட்டனின் தந்தை பயாபதியும் 'சூளாமணி' என்றே இந்நூலில் புகழப்பெறுகிறான். 'உலகின் முடிக்கொரு சூளாமணி ஆக்கினான்' என்பது இக்காப்பியத்தின் பாடற் பகுதியாகும். சூளாமணியின் ஆசிரியருடைய இயற்பெயர் சீவர்த்த தேவர். அவருடைய சிறப்புப் பெயராகிய 'தோலாமொழித்தேவர்' என்னும் பெயராலேயே உலகம் அவரைப் போற்றுகிறது. இயற்கையின் அழகும், மக்கள் உள்ளத்து எழுச்சிகளும் இயற்கைக்கு முரண்படாமல் தீட்டப்பெற்றுள்ளன. ஆனால், இத்தகைய இனிமை வாய்ந்த செய்யுட்கள் சிலவாகவே உள்ளன.

சமண சமயக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் சிறந்ததென்று நிலைநாட்டும் சமய வாதத்தை அடிப்படையாகக் கொண்டது நீலகேசி. நீலகேசி என்ற பெண்ணின் வரலாறு இதனோடு பின்னிப் பிணைந்துள்ளது. இதற்கு நீலகேசித் தெருட்டு என்ற பெயரும் வழங்கிவருகிறது. இந்நூலாசிரியரின் பெயர் தெரியவில்லை. நீலகேசியின் பெருமை உண்மையில் அதன் உரையினாலேயே விளங்குகிறது. குண்டலகேசிக்கு மறுப்பாக இக்காப்பியம்எழுதப்பட்டமை இந்நூலின் உரையினால்தெரிகிறது.

தமிழில் 'புராணம்' என்னும் பெயரால் வழங்கும் சமண சமயக் காப்பியம் மேருமந்திர புராணம். நீலகேசிக்கு உரையெழுதியுள்ள வாமன முனிவரே, மேருமந்திர புராணத்தை இயற்றியுள்ளார். ஊழ்வினையின் ஆற்றலை அறிவிப்பதே இந்நூலின் குறிக்கோளாகும்.

யசோதர காவியம் ஊழ்வினையின் பயனைக் கதையின் வாயிலாக வற்புறுத்திக் கூறுவது. பத்தாம் நூற்றாண்டில் யசோதரன் கதை இந்தியநாடு முழுவதும் வழங்கி வந்தது. புஷ்பதந்தர் என்பவர் எழுதிய வடமொழி நூலைத் தழுவியே, வெண்ணாவலுடையார்வேள் என்பவர் இதனைத் தமிழில் படைத்துள்ளார்.

உரை நடையில் இயற்றப்பெற்ற சமண சமயக் காப்பியம் ஸ்ரீபுராணமாகும். குணபத்திராச்சாரியார் ஒன்பதாம் நூற்றாண்டில் இயற்றிய 63 சமணப் பெரியார்களின் வரலாற்றைக் கூறும் உத்தர புராணத்தைப் பின்பற்றித் தமிழில் எழுதப்பெற்றது இந்நூல். ஸ்ரீபுராணம் மணிப்பிரவாள நடையில் எழுதப் பெற்றது.

உரைகளும் நிகண்டுகளும் :

யாப்பருங்கல விருத்தியுரைகாரரும், நன்னூலுக்கு முதன்முதல் உரையெழுதிய மயிலைநாதரும், நீலகேசிக்குச் சமயவாதப் பேருரை வரைந்த சமயதிவாகரவாமன முனிவரும் சமண சமயத்தைச் சேர்ந்தவர்களே.

கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திவாகர முனிவர் இயற்றிய திவாகர நிகண்டும் பிங்கல முனிவர் இயற்றிய பிங்கல நிகண்டும் தமிழ்மொழி ஆராய்ச்சிக்குச் சமணர்கள் செய்துள்ள பேருதவியாகும். இவ்விரு நிகண்டுகளையும் அடிப்படையாகக் கொண்டு மிக விரிவான முறையில் மண்டலபுருடர் என்ற பெரியார் சூளாமணி நிகண்டினை இயற்றியுள்ளார். இவர் சமண சமயத்தவர்; பதினாறும் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இம்மூன்று நிகண்டுகளை அடிப்படையாகக்கொண்டே வீரமாமுனிவர் முதன்முதல் தமிழில் சதுரகராதியை இயற்றினார். இன்றும் இந்நிகண்டுகள் தமிழ்மொழியின் சொற்பொருளாராய்ச்சிக்கு வழிகாட்டிகளாக உள்ளன.

சமண சமயத்தவர் தமிழ்மொழி, இலக்கிய வளத்திற்கு இந்த இங்ஙனம் வகையான துறைகளில் முதன்மையாகப் பணியாற்றியுள்ளனர். இவையல்லாமல், வேறுதுறைகள் சிலவற்றிலும் இவர்கள் தொண்டாற்ற முயன்றுள்ளனர். தமிழ்மொழிக்குத் தொண்டாற்றிய சமயவாணர்களுடைய பணியில் அளவாலும் பணியாலும் உயர்ந்தது சமண சமயத்தவருடையதே என்று நாம் உறுதியாகக் கூறலாம்.

ஆழ்வார்கள் காணும் முழுமுதற் கடவுள்

டாக்டர் திரு. ந. சுப்பு ரெட்டியார், M.A., Phd.,
தமிழ்ப் பேராசிரியர், திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி.

திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் வைணவம். இது பல உயரிய கொள்கைகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு பரந்த சமயமாகும். ஆழ்வார்கள் திருமால் அடியார்கள். அவர்கள் திருமாலின் எண்ணற்ற மங்கள குணங்களாகிய அமிழ்த வெள்ளத்தில் மூழ்கி மிகவும் ஈடுபட்டு நன்றாக ஆழ்ந்திடுவர் என்னும் காரணத்தினால் அவர்கட்கு 'ஆழ்வார்கள்' என்னும் திருநாமம் ஏற்பட்டது. பொய்கையார் பூதத்தார் பேயார் திருமழிசைப்பிரான் தொண்டரடிப்பொடிகள் பாண்பெருமாள் குலசேகரர் பெரியாழ்வார் ஆண்டாள் திருமங்கைமன்னன் நம்மாழ்வார் மதுரகவிகள் என ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். ஒப்புயர்வற்ற இந்த மெய்யடியார்கள், உயர்வற உயர்நலமுடையவனை அயர்வறும் அமரர்களின் அதிபதியால் மயர்வற மதிநலம் பெற்று அருளிச் செய்த பிரபந்தங்களே 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' என்ற தமிழ் மறையாகும். பக்திக்கு வரம்பாக, ஓர் எல்லை நிலமாக. அமைந்த இப்பாசுரங்களினின்றும் ஆழ்வார்களின் கடவுட் கொள்கை இன்னது என்பதைத் தெளிவாக அறியலாம்.

கடவுளின் சொரூபம் :

ஆழ்வார்களின் முழுமுதற்கடவுள் திருவாழ்மார்பனாகிய நாராயணன். இவன் சத்தியம் ஞானம் ஆனந்தம் அனந்தம் இவற்றின் சொரூபமாக இருப்பவன். இடத்தாலும் காலத்தாலும் அளவிடப்பெறாதவன் ; "அந்தமில் ஆதிஅம் பகவன்" (திருவாய்-1.3:5). எங்கும் நிறைந்திருப்பவன் ; "உடல் மிசை உயிரெனக் கரந்து மெங்கும் பரந்துளன்" (திருவாய்-1.1:7). மூன்றுவித சேதன, அசேதன பரிணாம உருவமான வேறுபாட்டின் குறைகள் (விகார தோஷங்கள்) தட்டாதவன். இவனை

"பிறப்பொடு மூப்புஒன்று இல்லவன் தன்னைப்
பேதியா இன்பவெள்ளத்தை
இறப்புஎதிர் காலக்கழிவும்ஆனான்"

என்று குறிப்பிடுவர் பரகாலர். (பெரிய திருமொழி-4.3:2). அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு வகைப்பட்ட பலன்களையும் உயிர்கட்குத் தந்து அவற்றின் புகலிடமாக இருப்பவன் ; தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன். இவனை நம்மாழ்வார்,

"தனிமாப் புகழே எஞ்ஞான்றும்
நிற்கும் படியாய்த் தான்தோன்றி
முனிமாப் பிரம முதல்வித்தாய்
உலகம் மூன்றும் முளைப்பித்த
தனிமாத் தெய்வம்"

என்று குறிப்பிடுவார். (திருவாய்மொழி-8.10:7) மேலும் இவன் ஞானம் சக்தி பலம் ஐசுவரியம் வீரியம் தேஜஸ் முதலிய மங்கள குணக் கூட்டங்களால் அலங்கரிக்கப்பெற்றவன். அவனிடம் இக்குணங்கள் ஆதல் அழிதல் இன்றி எப்பொழுதும் நிறைந்திருக்கும், இவற்றைத் தவிர வாத்சல்யம், சௌசீல்யம், சௌலப்பியம் முதலிய எண்ணற்ற குணங்களையும் கொண்டவன் அவன். இவ்வுலகத்தினைப் படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய வற்றின் காரண பூதன். இக்கருத்தினைத் திருமங்கை மன்னன், "பூவளர் உந்திதன்னுள் புவனம் படைத்து, உண்டு, உமிழ்ந்த தேவர்கள் நாயகன்" (பெரிய திருமொழி-

9.9:1) என்றும்; "உடம்பு உருவில் மூன்று ஒன்ருய், மூர்த்தி வேருய் உலகுய்ய நின்றவன்" (பெ. தி. 2.5:1) என்றும் குறிப்பிடுவர். இதனையே நம்மாழ்வாரும்,

"இவையும் அவையும் உவையும்
இவரும் அவரும் உவரும்
எவையும் எவரும் தன்னுள்ளே
ஆகியும் ஆக்கியும் காக்கும்
அவையுள் தனிமுதல் எம்மான்"

என்று போற்றியுரைப்பர் (திருவாய்.-1.9:1). "அழிப்பொடு அளிப்பவன் தானே" (திருவாய் 1.9:8) என்றும், "காக்கும் இயல்வினன் கண்ண பெருமான்" (திருவாய் -2.2.:9) என்றும் மேலும் கூறுவர். சிருர் வீடுகட்டி அழிக்குமாப் போலே இம்முத்தொழில்களும் இவனுக்குத் தன் இச்சையாலே உண்டாகும் விளையாட்டே யாகும். இதனைக் குருகூர் நம்பி,

"துன்பமும் இன்பமும் ஆகிய
செய்வினையாய் உலகங்களுமாய்
இன்பமில் வெந்நர காகி
இனியவான் சுவர்க்கங்களுமாய்
மன்பல் உயிர்களும் ஆகி
பலபல மாய மயக்குகளால்
இன்புறும் இவ்விளையாட்டு உடையான்"

என்று போற்றியுரைப்பர். (திருவாய்.3.10:7). இதனையே கம்பநாடன்,

"உலகம் யாவையும்
தாம்உள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும்
நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை
யாட்டுடை யார்"

என்று விளக்குவன் (கம்ப. இரா. காப்பு). ஆழ்வார்களின் பாடல்களில் அவன் தோய்ந்து நின்ற நிலையே இக்கூற்றிற்குக் காரண மாகலாம்.

வீடுபேற்றிற்குக் காரணன் :

மேலும், இந்த நாராயணன் அசித்து (இவ்வுலகப் பொருள்கள்) மாறுபாடடை வதற்கும், உயிர்கள் தத்தம் வினைகட்கேற்ப உடல்களை அடைவதற்கும் காரணன்-

"கருமமும் கரும பலனும்
ஆகிய காரணன்"

என்பர் ஆழ்வார். (திருவாய். 3.5:10). இந்த உலகிலுள்ள உயிர்கள் பக்தி மூலமும், பிரபத்தி (சரணுகதி) மூலமும் வீடுபேற்றினை அடை வதற்கும் இவனே துணையாவான்.

"தாய்நினைந்த கன்றேயொக்க என்னையும்
தன்னையே நினைக்கச்செய்து தான் எனக்கு
ஆய்நினைந்து அருள்செய்யும் அப்பனை"

என்பார் திருமங்கையாழ்வார் (பெ. தி.7.3;2). கன்றுனது எப்போதும் தன் தாயையே நினைத்துக் கொண்டு இருக்குமாப்போலே உலகிற்கெல்லாம் தாயாகிய தன்னையே தானும் (ஆழ்வாரும்) நினைத்திருக்குமாறு செய்தவன் என்கின்ருர்.

"பரந்தசிந்தை யொன்றிநின்று
நின்னபாத பங்கயம்
நிரந்தரம் நினைப்பதாக
நீநினைக்க வேண்டுமே"

என்று திருமழிசைப் பிரான் கூறியவாறு (திருச்சந்தவிருத்தம்-101) எம்பெருமான் அருளின்றி அவனை நினைந்திருத்தல் அமையாது. நம்மாழ்வாரும்,

"சார்ந்த இருவல் வினைகளும்
சரித்து.மாயப் பற்று அறுத்து
தீர்ந்து தன்பால் மனம்வைக்கத்
திருத்தி வீடு திருத்துவான்"

என்று விளக்குவர். (திருவாய் 1.5:10).

கடவுளின் உருவம் :

நித்திய விபூதியான பரமபதத்தில் எம்பெருமான் நாராயணனுககு எனத் தனியான திவ்விய மங்கள உருவம் உண்டு. அவ்வுருவம் ஈடும் எடுப்பும் அற்ற பேரொளி யினையுடையது; பேரழகு வாய்ந்து, கண்டாரை ஈர்ப்பது. இத்திருவுருவத்தின் அழகில் தன் நெஞ்சினைப் பறிகொடுத்த

ஆழ்வார், "பயிலும் சுடரொளி மூர்த்தி . பங்கயக் கண்ணன்" என்றும், "மாசறு சோதி என் செய்யவாய் மணிக்குன்றம்" (திருவாய் 5.3;1) என்றும் கூறுவதைக் காணலாம். இத்தகைய உருவம் யோகியரின் தியானத்திற்கு ஏற்றது. இதனை,

"நாகம் ஏறி நடுக்கடலுள்
துயின்ற நாரா யணனேஉன்
ஆகம் முற்றும் அகத்தடக்கி
ஆவி அல்லல் மாய்த்ததே"

என்று ஆழ்வார் கூறுவதனுல் அறியலாம். இந்த உருவத்துடன் பெரிய பிராட்டியார், பூமிப்பிராட்டியார், நீளாதேவி ஆகியோருக்கு நாயகனுக இருப்பவன். இதனை,

"இன்துணைப் பதுமத்து அலர்மகள்தனக்கும்
இன்பன் நல்புவிதனக் கிறைவன்
தன்துணை ஆயர் பாவைநப் பின்னை
தனக்கிறை"

(பதுமத்து அலர்மகள்-பெரிய பிராட்டியார்; புவி-பூமிப்பிராட்டியார்; நப்பின்னை-நீளாதேவி) என்ற திருமங்கையாழ்வாரின் வாக்கால் அறியலாம். நம்மாழ்வாரும்,

"முந்நீர்ஞாலம் படைத்த
எம்முகில் வண்ணன்"

என்று கூறுவதால் எம்பெருமான் நாராயணன் படைத்தல் முதலிய செயல்களை மேற்கொள்வன் என்பது புலப்படும். மேலும் இந்தத் திவ்விய மங்கள உருவம் ஐந்து வகையோடு கூடியிருக்கும் என்பது ஆழ்வார்களுடைய நம்பிக்கை. இந்த ஐந்து நிலைகளை அடுத்த கட்டுரையில் காண்போம்.

திரு. ஆம்ரவனேசுவரர் கோயிலில் நடைபெற்ற ஆலயத்தூய்மைப் பரிளிசப்பு விழாவில், திருச்சி உதவி ஆணையர் மற்றும் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல். (4—5—72)

மதிப்புரைகள்

(1) கந்தர் அநுபூதி உரை:

முருகன் அடியார்கள் நாள்தோறும் பாராயணம் செய்துவரும் அருள்நூல்களில் ஒன்ருகத் திகழ்வது கந்தரநுபூதி. "கந்தரநுபூதி பெற்றுக் கந்தர் அநுபூதி சொற்ற எந்தையருள் நாடி. இருக்கும் நாள் எந்நாளோ" என்று தாயுமானவர், இந்நூலைப் புகழ்ந்து போற்றியுள்ளார் இத்தகைய சிறப்புமிக்க இந்நூலுக்கு, எளியமுறையில் இனிய தெளிவான உரையைச் சுருக்கமும் விளக்கமும் அமைய. ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் திரு. ச. ரா. கச்சபேசுவரன், எம். ஏ., அவர்கள் எழுதிப் பதிப்பித்துள்ளார்கள். பயனுள்ள நல்ல நூல். காஞ்சிகாமகோடி பீடம் அவர்களின் அருளாசி பெற்றது. விலை ரூ. 1. கிடைக்குமிடம் "முருகன் அருள், சீனிவாச ராகவன் சாலை, சீனிவாச நகர், சென்னை-63".

(2) பழமுதிர் சோலைப் பிள்ளைத்தமிழ்:

பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம், முருகனுக்குரிய ஆறு படைவீடுகளில், ஏனைய ஐந்து தலங்களுக்கும் முன்னரே பாடப் பெற்றிருக்க, பழமுதிர்சோலைக்கு மட்டும் பாடப்பெருமலிருந்து வந்த குறையினை நிறைவு செய்யும் பொருட்டு, செந்தமிழ்ப் புலமை கைவந்தவரும், சிறந்த முருகன் அடியவரும், தணிகைமணி இராவ்பகதூர் திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ, அவர்களின் நெருங்கிய உறவினரும், முன்பே பல தோத்திர நூல்களைப் பாடியிருப்பவரும் ஆகிய காஞ்சிபுரம் திரு. ரா. குப்புசாமி பிள்ளை, பி. ஏ. அவர்களால், சொற்சுவையும் பொருட்சுவையும் கற்பனைத் திறனும் ஒருங்கே அமையப் பழம்பெரும் கவிஞர்களின் சிறந்த மரபுநெறிகளைக் கொண்டு, அழகுறப் பாடப்பெற்றிருக்கின்றது. இவர்தம் இனிய சமரச உள்ளத்தின் இயல்பு, பூதத்தாழ்வார். பேயாழ்வார், நம்மாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், இராமாநுசர் ஆகிய வைணவப் பெரியோர்களையும், அவர்தம் அருளிச்செயல்களையும், அன்புடன் நினைவுகூர்ந்து போற்றிப் பாராட்டியிருக்கும் முறையால் புலனுகின்றது. மிகவும் நல்ல முறையில் பலவகை உரைக்குறிப்புக்களுடன் அழகுறப் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது. தமிழவேள் திரு. பி. டி. ராசன், தணிகைமணி, அருட்கவி சேதுராமன் முதலிய பெரியோர்கள், அணிந்துரை அளித்துள்ளனர். விலை ரூ. 2-50. கிடைக்குமிடம்: "காஞ்சி ரா. குப்புசாமி, 7, சுண்ணும்புக்காரத் தெரு, நத்தம், செங்கற்பட்டு".

(3) திருமாந்துறைத் தலபுராணம்:

திருமாந்துறை என்னும் தலம், திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ளது. திருஞான சம்பந்தர் திருப்பதிகமும், அருணகிரிநாதர் திருப்புகழும் பெற்ற சிறப்புடையது. சூரியன் சந்திரன் அசுவினி தேவர்கள் ஆகியோர் வழிபட்டு அருள்பெற்ற தலம். இது வடமொழியில் 'ஆம்ரவணக்ஷேத்திரம்' என வழங்கப் பெறும். இத்தலபுராணம் கிரந்தத்தில் அமைந்திருந்த ஓலைச் சுவடியினின்று கண்டெடுக்கப்பெற்றுத் தேவநாகரி லிபியில், ஜகத்குரு ஸ்ரீ காஞ்சிகாம கோடிபீடம் ஆசார்ய சுவாமிகள் அவர்களின் அருளாசியுடன், இந்திய ரயில்வே துணைத் தலைமைக்கணக்கு அலுவலராக இருந்து ஓய்வுபெற்றுப் புதுடில்லியில் இருந்துவரும் திரு. ஏ. கே. கணேசன் அவர்களால் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. பக்தர்களுக்கும், வடமொழி அறிஞர்களுக்கும் பெரிதும் பயன்படும். விலை குறிப்பிடப்படவில்லை: கிடைக்குமிடம்: "திரு. ஏ. கே. கணேசன்' 1-27, லஜபதி நகர்-III., புதுடெல்லி-24."

ஆசிரியர்

அருள் ஆசியுரை

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள்,
திருவாவடுதுறை ஆதீனம்

[திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி கோயிலின் சார்பில், சென்ற ஆண்டிற்போலவே, இவ்வாண்டிலும் 12, 13, 14–5–1972 தேதிகளில், மூன்று நாட்கள் காலை மாலை இருவேளைகளிலும் திருமுறைக் கருத்தரங்கம் மிகவும் சிறப்புற நடைபெற்றது. பல மாவட்டங்களிலும் இருந்து, சைவ சபையினர்களும் - அன்பர்களும் - அறிஞர்களும் - பெருமக்களும் - ஆசிரியர்களும்-மாணவர்களும்-பொதுமக்களும் ஆக இரண்டாயிரத்திற்கு மேற்பட்டோர் வந்து கலந்து கொண்டு பயன்பெற்றனர். மூன்று நாட்களிலும் உண்டி உறையுள் வசதிகள் வழங்கப்பெற்று. வந்திருந்தோர் அனைவரும் மிகவும் சிறந்த முறையில் உபசரிக்கப் பெற்றனர்.

இங்ஙனம் மிகப் பெருஞ் சிறப்பான நிலையில் நடைபெற்ற இந்த இரண்டாவது திருமுறைக் கருத்தரங்கம், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்பமை திரு. என். கிருஷ்ணசுவாமி ரெட்டியார் B.A., B.L. அவர்களால் தலைமைதாங்கித் துவக்கிவைக்கப்பெற்றபொழுது, திருவாவடுதுறையாதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரியசுவாமிகள் அவர்கள் வழங்கிச் சிறப்பித்த அருளாசியுரை இங்கு மகிழ்ச்சியுடன் போற்றி வெளியிடப்பெறுகின்றது.]

ஆசிரியர்,

" வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த மறைமொழி எனப்படும் தலைசிறந்த தெய்வ இலக்கியங்கள் ஆகும். இவற்றை முறையாக ஓதி உணரும் மக்கள் நல் உணர்வும், நல் ஒழுக்கமும் உடையவராய், துன்பங்களின் நீங்கி இன்பம் பெருக்கித் தெய்வ வாழ்வு வாழ்வர் என்பது உறுதி.

இத்திருமுறைகளுள், திருஞானசம்பந்தர் அருளிச் செய்த முதல் மூன்று திருமுறைகளின் திருவருட்பொலிவு, சொல்வாய்மை, பொருட்செறிவு முதலியவை பற்றிய ஆய்வு இன்றுமுதல் மூன்று நாட்களில் ஸ்ரீ மகாலிங்கப்பெருமான் திருவருளால் நடைபெற உள்ளது.

இதில் தக்க அறிஞர்கள் வந்து பங்குபற்றுவது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியை விளைக்கின்றது. பங்குபற்றும் தலைவர், சிறப்புரை ஆற்றுநர், பார்வையாளர் முதலிய பலரும், கேட்டுப் பயன்பெறும் அனைவரும், இம்மை மறுமை நலன்களையும் சிவஞானத்தையும், பெற்று உய்ய ஸ்ரீஞானமா நடராசப்பெருமான் திருவடிகளைச் சிந்திக்கின்றோம்."

திருவிடைமருதூர்த்

திருமுறைக் கருத்தரங்கத் துவக்கப் பேருரை

மாண்பமை திரு. என். கிருஷ்ணசுவாமி ரெட்டியார், B.A., B.L.,

நீதிபதி, உயர்நீதிமன்றம், சென்னை.

முன்னுரை:

திருமுறையை நாள்தோறும் ஓதும் ஓதுவா மூர்த்திகள் அவர்களுக்கும், அறிஞர் பெருமக்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கங்கள் திருவாவடுதுறை ஆதீன மகா சந்நிதானம் அவர்களின் அருளாசியினாலே, இந்த இரண்டாவது திருமுறைக் கருத்தரங்கம் இங்குத் துவக்கப்டுகின்றது. குருமகா சந்நிதானம் அவர்கள் என்னையும் ஒரு பொருளாக மதித்து இக் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்து, அறிஞர் பெருமக்கள் பலரும் பங்குகொள்ளும் இந் நிகழ்ச்சியைத் துவக்கிவைக்கும்படியான ஒரு சிறந்த வாய்ப்பை எனக்கு வழங்கியருளியிருக்கின்றார்கள். அதுகுறித்து நான் மிகுந்த மகிழ்ச்சியடைவதுடன், நன்றியும் செலுத்திக் கொள்ளுகின்றேன்.

பல நூல்களையும் திருமுறைகளையும் நன்கறிந்த அறிஞர் பெருமக்கள் கலந்துகொள்ளும் இக் கருத்தரங்கத்தைத் துவக்கிவைக்க, எனக்கு என்ன தகுதியுண்டு? என்று நானே நினைத்துப் பார்த்தேன். ஒரு தகுதி மட்டும் உண்டு என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ளுகின்றேன். அதாவது நல்லவனாகவும் ஒழுக்கமுள்ளவனாகவும் வாழவிரும்புகின்றவன்; நல்லவனாகவும் ஒழுக்கமுள்ளவனாகவும் வாழ்கின்றேனோ இல்லையோ, வாழ மிகவும் விருப்பமுடையேன். ஆகையினாலே, எனக்கும் ஏதோ ஒரு தகுதி உண்டு என நினைத்து, அறிஞர் பெருமக்கள் பலர் கூடியிருக்கும் இந்தக் கருத்தரங்கத்தினை. மிகவும் பணிவுடன் துவக்கிவைக்கத் துவங்குகிறேன்.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு அவற்றுள் திருஞானசம்பந்தர் அருளிய முதல் மூன்று திருமுறைகளைப் பற்றி, இவ்வாண்டு பல ஊர்களிலிருந்தும் வந்துள்ள அறிஞர் பெருமக்கள் ஆராய்ச்சி செய்யக் குழுமியிருக்கின்றார்கள். ஆராய்ச்சி செய்யவோ, அல்லது பல கோணங்களில் நின்று திருமுறைகளை நோக்கி ஆழ்ந்துணர்ந்து விளக்கவோ, எனக்குப் போதிய அளவு பாண்டித்தியம் இல்லை. இருந்தாலும், மற்றவர்கள் தத்தம் கருத்துக்களைச் சொல்லுவதுபோல. நானும் இங்குச் சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன்.

ஆராய்ச்சி:

திருமுறைகளைப் பற்றிப் பல கோணங்களில் இருந்து ஆராய்ந்து. கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டிய அவசியமுண்டா என்று சிலர் வினவுவர். தகுந்த நல்ல கேள்விதான் இது. திருமுறைகள் தெய்வ இலக்கியங்கள்; பல கோணங்களில் ஆராய்ந்து அவை பற்றிய கருத்துக்களைத் தெரிவிப்பதிலே தவறு இல்லை. ஆனால் ஆராய்ச்சி செய்கிற காலத்திலே, இவைகள் தெய்வ இலக்கியமாக இருக்கிற காரணத்தினாலே, சிவத்தைச் சிந்தையிலே வைத்துத் தன் முனைப்பின்றி. மிக்க அன்புநிலையில் அழுந்தி, மிகவும் பணிவுடன் இவற்றை ஆராய்ச்சி செய்யவேண்டும். வேறு ஏதோ மற்ற பொருள்களை ஆராய்ச்சி செய்து. ஆராய்ச்சித் திறமையினைக் காண்பிப்பது போல. இத்திருமுறைகளில் பக்தி உணர்வின்றி நாம் நுழைதல் கூடாது. தமிழ் வேதம் என்று சொல்லும்படியான, இந்தத் திருமுறைகள் பற்றி ஆராய்ச்சி செய்யும்

போது, மிக்க பணிவும் பக்தியும் சிரத்தையும் இருக்கவேண்டும். சிவனைச் சிந்தையிலே வைப்பது முக்கியம். இல்லாவிட்டால், ஆராய்ச்சி என்பது நம்மை எங்கோ, எந்த இடத்துக்கோ கொண்டுபோய் விட்டுவிடும்.

இன்ப துன்பங்கள் கலந்துள்ள இவ்வுலகியல் வாழ்வில், அமைதியையே மனிதன் தேடி அலைகின்றான். நம்மைப்போன்ற கோடானு கோடி பாமர மக்கள், அமைதியான வாழ்வு வாழ, நல்லொழுக்கத்துடன் வாழ, பிறரையும் அமைதியாக வாழவிட, நமக்கு வழிகாட்டுவன திருமுறைகள் எனலாம். இவற்றைப் பண்டிதனும் ஓதலாம். பாமரனும் பயிலலாம். இவை தோத்திர நூல்கள். சாத்திர நூல்கள் அல்ல. சாத்திர நூல்களுக்கு ஆராய்ச்சி வேண்டும். நாம் யார்? எங்கிருந்து வந்தோம்? எங்கே போய்ச் சேருகிறோம்? என்னும் கேள்விகளை எல்லாம் எழுப்பி, அதிலே விடைகளைக் கண்டு, அந்த விடைகளிலே மெய்ப்பொருளை உணர்ந்து; அதன்மூலம் ஓர் அமைதியை அடையும் நிலை உண்டு. ஆனால் நம்மிலே பலருக்கு இந்தச் சாத்திரங்களிலே உள்ள மெய்ப்பொருளைத் தெரிந்துகொள்ளுவது, கண்டுபிடிப்பது என்பது மிகவும் கடினம். அதற்குச் சாதனங்களெல்லாம் தேவை. ஆனால் திருமுறைகள் அத்தகைய கடினமானவைகள் அல்ல. திருமுறைகளை ஓதி ஓதி, ஓதுவார்கள் இசையுடன் பாடுவதைக் கேட்டுக்கேட்டு, மனம் உருகிக் கசிந்து கசிந்து உணர்ச்சி ததும்பி, அமைதி அடைவதற்கு நம்மால் எளிதாக முடியும். திருமுறைகள் மன அமைதியையும், மகிழ்ச்சியையும், மன உருக்கத்தையும் தருவதில் மிகவும் சிறப்புடைய நூல்களாகும்.

ஞானசம்பந்தர் :

நம்பியாண்டார் நம்பிகள் சைவத் திருமுறைகளைத் தொகுத்தபோது, திருஞானசம்பந்தர் அருளியவற்றை முதலில் தொகுத்து அமைத்தார். அதற்கு ஏதேனும் ஒரு முக்கிய காரணம் இருக்கவேண்டும்.

பகவான் கண்ணபிரான் நான்குவிதமாகப் பெரியோர்களைக் கீதையில் பாகுபடுத்துகின்றான். ஆர்த்தோ, ஜிஞ்ஞாசு, அர்த்தார்த்தி, ஞானி. இந்நால்வகை அருளாளர்களுள், ஆர்த்தோ-அப்பர் சுவாமிகள், ஜிஞ்ஞாசு-மணிவாசகப்பெருமான். அர்த்தார்த்தி - சுந்தரமூர்த்தி நாயனார். ஞானி-ஞானசம்பந்தர். மூன்றாண்டு வயதிலேயே அவர் அம்மையின் திருமுலைப்பாலுண்டு சிவஞானம் பெற்றார். திருமுறைகளில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப்பாடி, நல்ல இசையிலே அமைத்து மண்ணில் உள்ளவர்களெல்லாம் நல்லவண்ணம் வாழவேண்டுமென்று தந்துள்ளார் ஞானசம்பந்தர்.

ஞானசம்பந்தருக்கு மூன்று வயதிலேயே ஞானம் வந்துவிட்டதா? இது என்ன கட்டுக்கதை என்றுகூட சிலர் கேட்பார்கள். விஞ்ஞான ரீதியிலே நாம் காணுங்கால், அந்தகைய அதிசயக் குழந்தைகள் பிறப்பதைப் பார்க்கின்றோம். இப்பொழுதும் சில அதிசயக் குழந்தைகள் இருக்கின்றன. நல்ல யோக்கியதை உடையவர்களும்; அருளாளர்களும் அறிவுடையோர்களும் வாழுகின்ற குடும்பத்தில் இத்தகைய அதிசயக் குழந்தைகள் பிறக்கின்றன. இப்பொழுதுகூட நீங்கள் பார்க்கலாம். நான் பார்த்திருக்கின்றேன். என் கண்ணாலேயே பார்த்திருக்கின்றேன், நான்கு வயதுக் குழந்தை, நல்ல இசைவாணர்கள் குடும்பத்திலே பிறந்த ஒரு குழந்தை. அந்தக் குழந்தை நன்றாகக் கஞ்சிரா வாசிக்கின்றது. நானே பார்த்தேன். தகப்பனுடைய மடியிலே உட்கார்ந்துகொண்டு—குழந்தைக்குத் தூக்கம்கூட வருகின்றது—அந்த நேரத்திலேயும் அது கஞ்சிராவை வைத்து அடிக்கும்போது வித்துவான்களெல்லாம் பிரமிக்கின்றார்கள். அந்த ஞானமும் திறமையும் அதற்கு எப்படி வந்தன. நீங்கள் செய்தித் தாள்களிலும் பார்த்திருக்கலாம். படித்திருக்கலாம். ஏதோ ஒரு குழந்தை, வித்துவான்கள் பலப்பல இராகங்களைப் பாடும்போது இன்னின்ன இராகங்களைப் பாடுகின்றார்கள் என்று உடனுக்குடன் சொல்லுகின்றதாம். அதுமாத்திரமல்ல. அதில் உள்ள பிழைகளையும் கூடச் சொல்லுகின்றதாம். இத்தகைய நிலைமைகள் எல்லாம் எப்படி வருகின்றன. விஞ்ஞானிகளால் சொல்லமுடியுமா? இத்தகு நிலை எப்படி வருகின்றது? தெய்விக முறையில் திருவருட் சிறப்பினாலும், தாய்தந்தையரின் தவநலச் சிறப்பினாலும் தோன்றியவர்கள் தான் திருஞானசம்பந்தர்.

ஞானசம்பந்தர், ஞானம் பெற்றது நம்மைப் போன்றவர்களுக்கு அதிசயம். ஆனால் அது நிகழக்கூடியதேயாகும். நடக்கக்கூடியது, நடக்கிறது. ஆதிசங்கரரும், சிறுவயதிலேயே ஞானம் பெற்றார் என்பது வரலாறு. திருஞான

சம்பந்தர் திருவருளால் தோன்றினுர். ஓர் அருட் பெருஞ் செயலை நிகழ்த்துவதற்காகத் தோன்றினுர். அதனுல் புறச்சமயங்களால் நேர்ந்த தீங்குகள் நீங்கிச் சைவ சமயம் பரவி வளர்ந்தது. அவர் நாளும் இன்னிசையால் தமிழைப் பரப்பினுர். மனிதனுக்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் கொடுக்கக்கூடியது நல்ல இசை. தெய்வ மணங்கமழும்படியான இசை. ஏதோ கச்சேரியிலே பொழுதுபோக்காகப் பாடும்படியான இசை அல்ல; போட்டாபோட்டிக்குப் பாடும்படியான இசையல்ல; மனத்தை உருக்கும்படியான-மனத்துக்கு அமைதியைக் கொடுக்கும்படியான தெய்விக இசைப்பாடல்களையே திருஞானசம்பந்தர் பாடினுர்.

திருமுறை இசை:

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வடமொழியில் இருக்கின்றதே வேதம். அந்த வேதத்தை ஓதி ஓதி, பரம்பரை பரம்பரையாகக் கேட்டுக் கேட்டு, அதனை இசை பிறழாமல் கொஞ்சங்கூடப் பிறழாமல், ஒலியளவும் நயமும் சிறிதும் மாருமல், எத்தனையோ பல நூற்ருண்டுகளாக ஒரே மாதிரியாகவே நம் இந்திய நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பாடி வருகின்ருர்கள். அது போலவே நம்முடைய ஓதுவா மூர்த்திகளும் நம்முடைய தமிழ் வேதமாகிய தேவாரப் பாடல்களை, நம்முடைய நாயன்மார்கள் எந்த இசையில் எந்தப் பண்ணில் எந்தத் தாளத்தில் பாடியிருப்பார்களோ, அந்த மரபு நெறிகளிலிருந்து சிறிதும் பிறழாமல் நல்ல பண் முறையில் குற்றமில்லாமல் பாடவேண்டுமென்பது என் பணிவான கருத்து. உலகியல் நோக்கங்களுக்காகவோ, பொதுமக்களைக் கவர்ச்சி செய்வதற்காகவோ, வேறு பிற நோக்கங்களுக்காகவோ, நவீன முறைகளையும் பாணிகளையும் புகுத்திப் பழைய நல்ல மரபுகள் சிதைந்து போகும்படி பாடாமல் இருக்கவேண்டும் என்று, இந்த நல்ல சபையிலே நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தேவாரப் பண்ணிசையில் கலப்படம் கொஞ்சம்கூடவேண்டாம். வேண்டவேவேண்

திரு. இராமநாத சுவாமி திருக்கோயில்,

இராமேசுவரம்.

ஸ்ரீ இராமநாதசுவாமி திருக்கோயிலில் நாளது 7—8—72-ந்தேதி திங்கட்கிழமையன்று ஸ்ரீ இராமநாதசுவாமிக்கு மூன்ருவது கோடி அர்ச்சனைத் தொடக்கமும், ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்பாளுக்கு முதலாவது கோடி அர்ச்சனை ஆரம்பமும் விழாவாக நடைபெறுகிறது.

இத்திருக்கோயிலில் பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் செலவில் நடந்துவரும் மூன்ரும் பிராகாரம் இரண்டாம்பிராகாரம் திருப்பணி வேலைகளுக்கு ஷ கோடிஅர்ச்சனைகள்மூலம் நிதி திரட்டப்படுகிறது ஷ கோடி அர்ச்சனைகளில் பக்தர்கள் அனைவரும் பங்குகொண்டு, விரைவில் பூர்த்திசெய்து, ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்பாள் ஸ்ரீ இராமநாதசுவாமி பேரருள் பெற்றுய்யுமாறு வேண்டப்படுகிறது.

(ஒப்பம்) எஸ். பி. முனுசாமி,
நிர்வாக அதிகாரி.

டாம். தூய்மை வேண்டும். நாம் மேடையிலே ஏறிப் பேசும்போதெல்லாம் கலப்படம்கூடாது, தூய்மை வேண்டும் என்று கூறுகின்றோம். எப்படி மனிதனுக்குத் தூய்மை வரும். வியாபாரம் செய்வதற்கோ, மார்க்கெட் பிடிப்பதற்கோ, பாப்புலர் ஆவதற்கோ தேவார இசையில் நாம்கலப்படம்செய்தால் அவற்றுள் தெய்வ மணம் எப்படி கமழும்? நமக்கு மன உருக்கமும் மன அமைதியும் எவ்வாறு வரும்? ஆதலால் திருமுறைகளைத் தூய்மையான இடங்களிலே ஓதுங்கள். கண்ட கண்ட இடங்களிலே பக்தி சிரத்தையின்றி ஓதாதீர்கள். நல்லொழுக்கமும் பண்பும் உள்ளவர்கள் திருமுறைகளை ஓதிக்கொண்டிருக்கவேண்டும். வேதியர்கள் வேதம் ஓதுவதுபோல, ஓதுவா மூர்த்திகள் திருமுறைகளை ஓதட்டும்.

திருமுறைகளை ஓதும்போதெல்லாம் தெய்வமிருக்கும் இடம், நல்லொழுக்கம் இருக்குமிடம், நல்லவர்கள் இருக்குமிடம் ஆகிய இடங்களிலேயே ஓதுங்கள். பொருள் உணர்ந்து ஓதுங்கள் என்றுநான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மொழிபெயர்ப்பு :

என்னிடத்திலே சில நண்பர்கள் கேட்டார்கள். திருமுறைகளைப் பற்றி உலகம் முழுவதும் தெரிந்திருக்க வேண்டாமா? அதிலுள்ள கருத்துக்களை உலகம் முழுவதும் தெரிந்துகொள்ளப் பரப்பவேண்டாமா? அதற்காக அவைகளை நாம் பிறமொழிகளில் மொழிபெயர்க்க வேண்டாமா? என்று நண்பர்கள் சிலர் வினவினர்கள். உடனே நான் சொன்னேன். மொழிபெயர்க்கவே கூடாது. காரணம்? திருமுறைகள் நமக்குச் சாத்திரங்களைப் போலல்ல, அவைகள் ஆராய்ச்சிக்காகவும் அல்ல. திருமுறைகள் இசையாலே பாடிப்பாடி மகிழத்தக்கவை இறைவன் நமக்குச் செய்த பரோபகாரங்களை எல்லாம் எடுத்துச் சொல்லிச்சொல்லி வாழ்த்தி வாழ்த்தி நல்ல தமிழிலே, செந்தமிழிலே தேனினும் இனிய தமிழிலே பாடப்பெற்றவை. அந்தப் பாடல்களைக் கொண்டுபோய், வேறு மொழிகளில் மொழிபெயர்த்தால், அம்மொழிபெயர்ப்பில் தெய்வ மணங் கமழுமா? தமிழின் இனிமைதான் அமையுமா? அவற்றில் தெய்வ வடிவத்தையும் காணமுடியுமா? ஒருபோதும் முடியாது. அதனுல்தான் அவற்றை மொழிபெயர்க்க வேண்டாம் என்று என்னுடைய கருத்தைச் சொன்னேன். தயவுசெய்து, எதை மொழி பெயர்த்தாலும் மொழிபெயருங்கள். ஆனல் திருமுறை இலக்கியங்களை மட்டும் மொழிபெயர்க்க முற்படவேண்டாம். இவற்றை நாமே அனுபவிக்கலாம். இவை நமக்கு ஏற்பட்ட சொத்து. நம்முடைய உரிமை. நாமே அனுதினமும் ஈடுபட்டு அனுபவித்தற்குரிய கலைச் செல்வங்கள் இவை. திருமுறைகளை ஓதிஓதி இசையுடன் பாடிப்பாடி மகிழுங்கள் என்று மீண்டும் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

சைவ சித்தாந்தம் :

சாத்திரங்கள் எங்கிருந்து வந்தன. தோத்திரங்களில் இருந்துதான். தோத்திரங்களாகிய திருமுறைப் பாடல்களில் இருந்துதான் சாத்திரங்களாகிய தெளிந்த கருத்துக்கள் வடித்தெடுக்கப்பெற்றன. திவ்வியப்பிரபந்தங்களிலிருந்தே வைணவ சித்தாந்த நுட்பங்கள் தோன்றின. அவ்வாறே திருமுறைகளிலிருந்துதான் சைவசித்தாந்தக் கொள்கைகள் மலர்ந்தன. நம்மாழ்வாருடைய திருவிருத்தமும், திருவாய்மொழியும் விசிஷ்டாத்வைதக் கொள்கைகளுக்கு எப்படியோ, அப்படிய சைவசித்தாந்தக் கொள்கைக்குத் திருஞானசம்பந்தரின் பாடல்கள், அடிப்படையும் அரணுமாகும். இவைகளைப் பற்றியெல்லாம் இங்கே வந்துள்ள அறிஞர் பெருமக்கள் விரிவாகப் பேசுவார்கள்.

ஒப்புநோக்குமுறை :

இந்தத் திருமுறைக் கருத்தரங்கத்தில், திருஞானசம்பந்தரின் திருமுறைகள் சிறப்பாக ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. திருஞானசம்பந்தரையும், அவர்தம் பாடல்களையும் நாம் பல கோணங்களில் நின்று பார்த்தல்வேண்டும். ஞானசம்பந்தரும் அப்பரும், ஞானசம்பந்தரும் சுந்தரரும், ஞானசம்பந்தரும் மாணிக்கவாசகரும் என்று இப்படியாக ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நமக்கு ஒரு குதூகலம் ஏற்படும். பெரியவர்களோடு பெரியவர்களை ஒப்பிட்டு நோக்கி உணர்வது நலம் பயப்பதேயாகும். ஆனல் பெரியவர்களுக்குள்ளே அவர் பெரியவர், இவர் சிறியவர் என்ற முறையில் ஒப்பிட்டு நோக்கி ஆராய்தல் கூடாது.

பட்டிமன்றம்

இங்கு ஒன்று சொல்லுவதற்காக என்னை மன்னிக்கவேண்டும். சில சந்தர்ப்பங்களிலே பட்டிமன்ற நிகழ்ச்சிகளிலே, அவர் பெரியவரா?

Q2ம211, N59TR N72·14·11

இவர் பெரியவரா?; இது பெரியதா? என்றாற் போன்ற சர்ச்சைகளிலே சிலர் ஈடுபடுகின்றார்கள். இதைக் குறிப்பிடுவதற்காக என்னை மன்னிக்க வேண்டும். என்னுடைய கருத்துக்களை நான் சொல்லுவதற்கு எனக்கு உரிமையுண்டு. இந்தத் திருமுறைச் சொற்பொழிவுகளைக் கருத்தரங்காக அமைத்து வைத்திருப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சி. பட்டிமன்றம் ஆக்கிவிட்டாலோ, அது என்ன கதியாகுமோ என்று எனக்குப் பயங்கரமாக இருக்கின்றது. ஒவ்வொருநாளும் நான் பட்டிமன்றத்தைத் தான் நடத்திக்கொண்டிருக்கிறேன். அங்கே நான் என்னுடைய நியாயத்தலத்திலே படுகின்ற பாடு சொல்லும் தரத்ததன்று ஒருவர் பொய்க்காக வாதஞ்செய்வார். இன்னொருவர் மெய்க்காக வாதஞ்செய்வார். இரண்டு பேரும் பொய்க்காகவே வாதஞ்செய்வதும் உண்டு. இத்தகைய பட்டிமன்ற நிகழ்ச்சிகளெல்லாம் திருமுறைத் தெய்விக இலக்கியங்களைப் பொறுத்தவரையில் வைத்துக்கொள்ள வேண்டாமென்று இங்குள்ள அறிஞர் பெருமக்கள் எல்லோரையும் கைகூப்பி வணங்கிக் கேட்டுக்கொள்ளுகின்றேன். நம்முடைய நாயன்மார்களையும் அருளாளர்களையும் பட்டிமன்றங்களிலே கொண்டுபோய் நிற்கும்படி தயவு செய்து விட்டுவிடாதீர்கள்.

ஒரு சந்தர்ப்பத்திலே பட்டிமன்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ள எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. நல்லகாலமாக ஒரே ஒரு சந்தர்ப்பத்தில்தான் நான் அதில் அகப்பட்டுக்கொண்டேன். அப்பருடைய தொண்டு பெரிதா? பக்தி பெரிதா? என்ற தலைப்பு. இரண்டு கட்சியினரும் காரசாரமாக விவாதம் நடத்தினார்கள். நான் அங்கு நடுவராக உட்கார்ந்தேன். பக்தியில்லாமல் தொண்டு இல்லை. தொண்டு இல்லாமல் பக்தியில்லை. தொண்டும் பக்தியும் இல்லாமல் ஒன்றுமே நிகழாது. முடிவு சொல்வதற்கு இதில் ஒன்றும் இல்லை. இந்தத் தலைப்பை இவ்வாறு கொடுத்திருத்தல் கூடாது

148700.

திருவாவடுதுறை

ஸ்ரீ கோமுக்தீசுவர சுவாமி கோயில்

திருக்குட முழுக்குப் பெருவிழா

திருவாவடுதுறை ஆதீனத்து 22-ஆவது குருமகா சந்திதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாணையின்படி, நிகழும் பரிதாபி ஆண்டு ஆவணித் திங்கள் 11-ஆம் நாள் 27—8—72 ஞாயிற்றுக்கிழமை, உத்திரட்டாதி நட்சத்திரம் அமிர்தயோகம் கூடிய நல்ல நாளில், உதயாதி நாழிகை 5-க்கு மேல் 8-க்குள் (காலை 8 மணிக்கு மேல் 9-15-க்குள்) கன்னியா லக்கினத்தில் சிறப்புற நடைபெற இருக்கின்றது. அன்று மாலை மகாபிஷேகமும் இரவு பஞ்சமூர்த்திகள் திருவீதியுலாக் காட்சியும் நிகழும். அதற்குமுன் 20-8-72 ஞாயிறன்று காலை முதலே குடமுழுக்கு விழா நிகழ்ச்சிகள் தொடங்கித் தொடர்ந்து, ஒருவாரகாலம் (26-8-72 வரை) நடைபெறுகின்றன. சிவநேயச் செல்வர்கள் அனைவரும் வந்திருந்து தரிசித்து, இம்மை மறுமை நலங்களெல்லாம் எய்தி உய்யுமாறு வேண்டப்பெறுகின்றனர்.

இங்ஙனம்,

திருவாவடுதுறை ஆதீனம்,

காறுபாறு வைத்தியநாதத் தம்பிரான்.

என்று குறிப்பிட்டேன். நான் கூறியது சரியோ தவறோ எனக்குத் தெரியாது. அதிலிருந்து பட்டிமன்றத்தின் பக்கம் நான் போவதில்லை.

கடவுள் நம்பிக்கை :

ஒன்றே ஒன்று சொல்லி நான் முடித்துக் கொள்ளுகின்றேன். என்னுடைய மனத்திலே இருப்பதை இங்குச் சொல்ல வேண்டுமென்ற ஆசையினால் சொல்லிக் கொள்ளுகின்றேன். ஆங்கிலேயர்கள், மற்றும் மேனாட்டில் இருப்பவர்கள் எல்லோரும் கிருஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு அளவு கடந்த பக்தி உண்டு. அந்தப் பக்தியுணர்வினால், பக்தியிருந்த அந்தக் காலநிலையை ஒட்டி அவர்கள் சட்டம் செய்திருக்கிறார்கள். ஒருவன் இறக்கப் போகின்ற தருவாயில் ஒரு வாக்கு மூலம் கொடுத்தால், அந்த வாக்கு மூலத்தை மிகவும் மதித்து உண்மையானதாக ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்று கருதி, ஆங்கிலேயர்கள் சட்டம் செய்துள்ளார்கள். ஏனெனில் உடல் உயிரைவிட்டுப் பிரியும் மரண வேளையில் ஒருவன் பொய் சொல்லமாட்டான். கடவுளுக்குப் பயப்படுவான். உண்மையைத் தான் சொல்லுவான். அது ஒருவருடைய வாழ்க்கையில் நெருக்கடியான நேரம் (Crucial Moment). ஒருவன் ஓகோஎன்று வாழ்ந்தாலும் சரி, இல்லை துன்பங்களிலே அவதிப்பட்டாலும் சரி, உயிரானது உடலை விட்டுப் பிரிகின்ற நெருக்கடியான நேரத்தில் ஒருவன் பொய் சொல்லமாட்டான், என்பது அவர்களுடைய கருத்து. இறைவன் ஒருவன் உண்டு. அவன் எல்லாவற்றையும் கண்டு கொண்டிருக்கின்றான். அவன் கோபத்திற்கு நாம் ஆளாதல் கூடாது. நாம் வாழ்ந்த நாளெல்லாம் தவறு செய்துவிட்டோம். இனி நாம் அவ்விடம் திரும்பிப் போகிற இந்த நேரத்திலாவது உண்மையைச் சொல்லி விட்டுப் போகவேண்டும். இறைவனுடைய தண்டனைக்கு நாம் ஆளாகக்கூடாது என்று இப்படியெல்லாம் எண்ணுவான். அதனால் இறந்து போகிறவன் பொய் சொல்லமாட்டான் என்று நம்பினர். யாராவது ஒருவன் இறப்பவனிடம்போய், அப்பா உன்னை யார் குத்திவிட்டார்கள் என்று கேட்டால், என்னை இன்னான் குத்திவிட்டான் என்று அவன் குறிப்பிட்டால் அவன் சொன்ன அந்த வாக்குமூலத்திற்கு நூற்றுக்கு நூறு மதிப்புக் கொடுத்து அதைச் செய்பவனுக்குத் தூக்குக் கொடுப்பார்கள் சட்டத்தில். ஆனால் இன்றோ நாங்களெல்லாம் அத்தகைய வாக்குமூலத்திற்கு முழுமதிப்புக் கொடுக்கத் தயங்குகின்றோம். காரணம் எத்தனைபேர் இறைவனிடத்திலே மதிப்பு வைத்திருக்கின்றார்கள், எத்தனைபேர் பொய் பேசுவது தவறு; அது இறைவனுக்கு உகந்ததல்ல என்று எண்ணுகிறார்கள்.

இன்றைய நிலையில் மனிதனுடைய தன்மை பெரிதும் மாறியிருக்கின்றது. இறக்கப்போகும் போதுகூட, ''நான்போய் விடுகின்றேன்; அவனை விட்டு விடாதீர்கள். அவனைத் தீர்த்துக் கட்டுங்கள்'' என்று சொல்லிவிட்டுப் போகின்றான். சாகும்பொழுதுகூட மனிதன் திருந்துபவனாக இல்லை. அப்போதும் பாவங்களையே அஞ்சாமல் சொல்லிவிட்டுப் போகின்றான். ஆரவாரமாக வாழ்தல், பொய்சொல்லி ஏமாற்றிப் பிழைத்தல், முதலிய எத்தனை எத்தனையோ தீய குணங்கள் நம்மிடையே பெருகி வருகின்றன. இவைகளெல்லாம் மாற வேண்டும். இறைவனிடத்திலே உண்மையான பக்தி ஏற்பட்டாலொழிய, தீய குணங்களும் செயல்களும் மாறவே மாறாது. தீமைகள் செய்பவன் ஏதோ சுகமாக வாழ்வது போல நமக்குத் தோன்றலாம். ஆனால் அவர்களுடைய மனம் எப்படியெல்லாம் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது அலைமோதி அல்லலுற்றுத் தொல்லைப் படுகின்றது என்பது பலருக்குத் தெரியாது.

நம்பினோர் கெடுவதில்லை :

ஆகையால் இங்கே இருக்கும் அறிஞர் பெருமக்களை நான் வேண்டிக் கொள்ளுவது இதுதான். நீங்கள் ஆராய்ச்சியைக் கொண்டு போய் எங்காவது விட்டுவிட வேண்டாம். மக்களுக்கு இறைவனிடத்தில் இருக்கும் பக்தியையும் நம்பிக்கையையும் கெடுக்கவேண்டாம். அவற்றை உறுதிப்படுத்துங்கள். பகுத்தறிவில் எல்லோரும் நம்பிக்கை வையுங்கள். பகவான் கொடுத்தருளிய முக்கியமான ஒருபெரிய சக்தி அறிவுதான். அறிவினால்தான் அமைதி அடைய முடியும் நல்லதுகெட்டது பார்க்கமுடியும். ஆனால் இறைவனிடத்தில் வைக்கின்ற நம்பிக்கைக்குப் பகுத்தறிவு வேண்டவே வேண்டாம். காரணம் பகுத்தறிவை மனிதனிடத்திலேயே செலுத்தவேண்டும். மனிதனை நாம் நம்பலாமா? நம்பக்கூடாதா? என்று ஆராயலாம். ஏனென்றால் மனிதன் நம்பிக்கைத்துரோகம் செய்வான். தீயவன் நல்லவன்போலத் தோன்றக்கூடும். நல்லவனைத் தீயவனாக நாம் தவறாக எண்ணிவிடுதல் கூடும். அதனால் மனிதனிடத்தில்

பகுத்தறிவைச் செலுத்தவேண்டும். இறைவனே நமக்கு ஒருபோதும் நம்பிக்கைத் துரோகம் செய்யமாட்டான். தன்னை நம்பினேரை அவன் எப்பொழுதும் காப்பாற்றுவான். அதனல் அவனிடத்தில் நாம் பகுத்தறிவைச் செலுத்த வேண்டுவதில்லை. ஆழ்ந்த நம்பிக்கை வைப்பது அவசியம். நம்பிக்கையினுல் நலங்கள் பல அடையலாம். "நம்பினேர் கெடுவதில்லை இது நான்கு மறைத் தீர்ப்பு" என்ருர் பாரதியார்,

முடிவுரை :

கடைசியாக ஒரே ஒரு வார்த்தை. இத் தகைய திருமுறைக் கருத்தரங்குகள் ஆண்டு தோறும் இங்கே நன்ருக நடக்கவேண்டும். அறிஞர் பெருமக்கள் எல்லோரும் வந்து கலந்து கொள்ளவேண்டும். திருமுறைகள் வளர்ந்து செழித்தால் நாடு நலம்பல பெறும். "நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை". திருமுறை ஓதுகின்ற இசை வாணர்கள் நல்லமுறையில் சிறப்பாகவும் செழிப் பாகவும் வாழ வகை செய்ய வேண்டும்' அவர் களைப் போற்றி மதித்து, அவர்கள் வாழ்க்கை யை வளப்படுத்துதல் வேண்டும். திருவாவடு துறை ஆதீனத்தின் சார்பில் இக்கருத்தரங்கு நன்கினிது நடைபெறச் சிறந்த முறையில் ஏற்பாடுகள் செய்திருப்பது பெரிதும் பாராட்டி மகிழ்தற்குரியது என்று கூறி, இக்கருத்தரங் கத்தினைத் துவக்கி வைக்கின்றேன். ★

திருவிடைமருதூர்த் திருமுறைக் கருத்தரங்கத்தில், சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி மாண்பமை திரு. என். கிருஷ்ணசுவாமிரெட்டியார், B.A.B.L. அவர்களும்; தமிழ்க்கடல் சிவமணி- சிவம்பெருக்கும் சீலர். திரு. ராய. சொ. அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தல். (12—5—72).

மதிப்புரை :

திருவருட்பா

(தவத்திரு. ஊரன் அடிகள் பதிப்பு)

திருவருட் பிரகாச வள்ளலார் ஆகிய வடலூர் இராமலிங்க அடிகளார் அருளிய திருவருட்பாப் பாடல்களின் பதிப்பு வெளியீடுகள், பலரால் பலகாலத்தில் அவ்வப்போது நிகழ்ந்து வந்துள்ளன. அவற்றுள், தொழுவூர் வேலாயுத முதலியார், பொன்னேரி சுந்தரம் பிள்ளை, திரு. ச. மு. கந்தசாமி பிள்ளை, சோடசாவதானம் சுப்பராய செட்டியார், புதுக்கோட்டை இராமச்சந்திரபுரம் வள்ளல் தீ. நா. முத்தையா செட்டியார், ஆ. பாலகிருஷ்ண பிள்ளை ஆகியோர், பதிப்புகளும், சென்னை சன்மார்க்க சங்கப் பதிப்பும், மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன!

சன்மார்க்க உலகில் தவத்திரு ஊரன் அடிகள் அவர்களை அறியாதார் எவருமிரார். முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் தோற்றுவித்த வடலூர்ச் சுத்த சன்மார்க்க நிலையத்தின் செயலாளராகவும், வடலூர்த் திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையங்களின் அறங்காவலராகவும், சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையத்தின் நிறுவனராகவும், அடிகளின் 'சன்மார்க்க விவேக விருத்தி' இதழாசிரியராகவும் விளங்கி, அரிய பல பணிகளைத் தவத்திரு ஊரன் அடிகள் அவர்கள் ஆற்றி வருகின்றார்கள். முன்னரே 'வடலூர் வரலாறு' 'இராமலிங்கரும் தமிழும்' 'இராமலிங்க அடிகள் வரலாறு' என்னும் நூல்களை எழுதி அளித்துள்ள தவத்திரு ஊரன் அடிகள் அவர்கள், அண்மையில் திருவருட்பாப் பதிப்பு ஒன்றையும் சிறந்த முறையில் வெளியிட்டருளியுள்ளார்கள். இது காறும் வெளிவந்துள்ள திருவருட்பாப் பதிப்புகள் எல்லாவற்றையும்விட, எத்தனையோ பலவகைகளில் இவர்தம் பதிப்பு, மிகமிகச் சிறந்ததொன்றாக விளங்குகின்றது.

இதன்கண், ஆறுதிருமுறைகளும் காலவரிசையில், வரலாற்று முறையில் ஆராய்ந்து செவ்விதின் வகுக்கப்பெற்றுள்ளன. சிற்சில பதிகங்களுக்குப் புதிய பொருத்தமான தலைப்புக்கள் தரப்பெற்றிருப்பதுடன், பாவினக் குறிப்புக்களில் பழைய பதிப்புக்களில் காணப்படும் பிழைகள் களையப் பெற்றும், பாவினம் குறிக்கப்பெறாத பதிகங்களுக்குப் புதிதாகப் பாவினம் குறிக்கப் பெற்றும், சந்தி பிரிக்கப்பெற்றும், செம்மைப்படுத்தப் பெற்றுள்ளது. நூல் முழுவதும் பாடல்களுக்குத் தொடர் எண், ஆறு திருமுறைப் பாடல்களுக்கும் ஒருங்கே பாட்டுமுதற் குறிப்பு அகராதி, அட்டவணை, மற்றும் எத்தனையோ பல குறிப்புக்கள் ஆகியவை தொகுத்தளிக்கப் பெற்றிருப்பது மிகவும் போற்றற்பாலது.

"ஒரு நல்ல புத்தகமென்பது ஒரு சிறந்த ஆசிரியரின் விலைமதிப்பரிய உயிர்க்குருதியினைப் பிழிந்து வடித்தெடுத்த அரும்பெறற் சாறேயாகும்" என்று ஆங்கில அறிஞர் ஒருவர் குறிப்பிட்டார். ("A good book is the precious life-blood of a master-spirit"—John Milton). அதனை மெய்ப்பிக்கும் வகையில், இப்பதிப்பு இனியதோர் எடுத்துக்காட்டாக இலங்குகின்றது: இராமலிங்க அடிகளின் சன்மார்க்க நெறியினை யாண்டும் பரப்புவதற்கென்றே இட்டுப் பிறந்தவராய், நைட்டிகப் பிரமசரிய விரதமாகிய தவவாழ்க்கையினை மேற்கொண்டு, சீலமும் நோன்பும் செறிவும் அறிவும் மிக்குத்திகழும் தவத்திரு ஊரன் அடிகள் அவர்களின் சன்மார்க்கத் தொண்டும், தமிழ்த் தொண்டும் எத்துணையும் புகழ்ந்து போற்றத்தக்கனவாகும். சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்களுள் ஒருவரான உமாபதிசிவம், பெரியபுராணத்தினை "நாடு செய்த தவம்! சேக்கிழார் செய்த பெருந்தவம்" என்று போற்றிப் பாராட்டிப் புகழ்ந்தருள்கின்றார். அதனையொட்டி, இனிய இத்திருவருட்பாப் பதிப்பையும் "ஊரன் அடிகள் செய்த உயர்தவம்" என்று உரைத்துப் போற்றி நாம் உளம் மகிழலாம். 1350 பக்கங்களுககு மேற்பட்ட இப்பதிப்பு, மிக உயர்ந்த தாளில், நல்ல பெரிய எழுத்தில், திருத்தமாகவும் செம்மையாகவும், அழகிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. தமிழன்பர்களும், சன்மார்க்க அன்பர்களும், இதனைத் தவறாது வாங்கிப் பயன் கொள்வார்களாக! விலை ரூ. 25/-. கிடைக்குமிடம்: "**ஊரன் அடிகள், வடலூர் அஞ்சல், தென்னாற்காடு மாவட்டம்.**"

சீரின் மிகும்நம் இராமலிங்க அடிகள் சிறந்த திருவருட்பா,
யாரும் வியந்து போற்றும்வணம், இனிதின் ஆய்ந்து பதித்தளித்தார்;
பேரன் புடையார்; தவநலங்கள் பெரிதும் வாய்ந்து திகழ்ந்தொளிர்வார்;
ஊரன் அடிகள்; அவர்பணிகள் ஓங்கி வளர்ந்து வெல்கநன்றே!

—ந.ரா. முருகவேள்.

ஆறுபடை வீடுகள்

' அருண்மொழியரசு '
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

ஆறு என்ற எண்ணிக்கை உயர்ந்தது. ஒரு பெட்டி செய்ய வேண்டுமாயின் ஆறு பலகைகள் வேண்டும். கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு மேல் கீழ் என்று திசைகள் ஆறு ஆகும். இந்த ஆறு திசைகளிலும் பார்வையுடன் ஆறு முகங்களை உடையவன் முருகன்.

(1) சமயங்கள் ஆறு: சைவம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம், சாக்தம் என்பன.

(2) அத்துவாக்கள் ஆறு: மந்திரம் வன்னம் பதம் தத்துவம் புவனம் கலை என்பன.

(3) ஆதாரங்கள் ஆறு: மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பன.

(4) அரச அங்கம் ஆறு: படை, குடி, கூழ் அமைச்சு, நட்பு, அரண், என்பன. "படை குடி கூழமைச்சு நட்பரணாறும், உடையான் அரசருள் ஏறு" என்பது திருக்குறள்.

(5) அந்தணர் தொழில் ஆறு: ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஏற்றல் ஈதல் என்பன.

(6) அகச்சமயம் ஆறு: சைவம் பாசுபதம் மாவிரதம் காளாமுகம் வாமம் வைரவம் என்பன.

(7) அகப்பாட்டுச் சமயம் ஆறு: பாடாணவாதசைவம், சங்கிராந்தவாத சைவம், பேதவாதசைவம், பேதசைவம், சுத்தசைவம், அவிகாரவாதசைவம்.

(8) இன எழுத்துக்கள் ஆறு: வல்லினம் 6, மெல்லினம் 6, இடையினம் 6.

(9) இறைவனுடைய குணங்கள் ஆறு: சர்வஞ்ஞதை, திருப்தி, அநாதிபோதம், அலுப்தசக்தி, அனந்தசக்தி சுவதந்திரத்துவம். "ஏவர்தம் பாலுமின்றி எல்லை தீரமலற்குள்ள மூவிரு குணனும்" என்பது கந்தபுராணம்.

(10) ஐசுவர்யம், வீர்யம், புகழ் திரு, ஞானம், வைராக்கியம் என்பனவுமாம்.

(11) சக்திகள் ஆறு: பராசக்தி, ஆதிசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி, இச்சாசக்தி, குடிலாசக்தி.

(12) வேத அங்கங்கள் ஆறு: சிட்சை வியாகரணம், சந்தஸ், நிருத்தம், சோதிடம், கல்பம்,

(13) சம்பத்திகள் ஆறு: சமம், தமம், உபரதி, திதிட்சை, சிரத்தை, சமாதானம்.

(14) அறிவு ஆறு: சுவையறிவு. ஊறு அறிவு, ஒளிஅறிவு, ஓசையறிவு, கந்தஅறிவு, பகுத்தறிவு.

(15) சுவைகள் ஆறு: இனிப்பு, கசப்பு, புளிப்பு, உறைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, என்பன.

(16) இருதுக்கள் ஆறு: வசந்தருது, கிரீஷ்மருது, வர்ஷருது, சரத்ருது, ஏமந்தருது, சிசிரருது.

(17) பருவங்கள் ஆறு: கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்.

(18) சக்கரவர்த்திகள் அறுவர்: அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புருகுற்சன், புருரவன், கார்த்தவீரியன்.

(19) சாஸ்திரங்கள் ஆறு : வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகரம், பூருவ மீமாஞ்சை, உத்திரமீமாஞ்சை என்பன.

(20) பகை ஆறு : காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன.

இவ்வாறு ஆறு என்ற எண்ணிக்கையில் சிறப்பாகக் கூறத்தக்கவைகள் பலவுள. அத்தனையும் கூறில் விரியும்.

ஆறு தலையுடைய அண்ணல் ஆறுபடைகளில் அமர்ந்து ஆன்மாக்களுக்கு ஆறுதலைத் தந்து அருள்புரிகின்றான்.

ஆறு ஆதாரங்களே அப்பரமனுடைய ஆறு படை வீடுகளாம். திருப்பரங்குன்றம், திருச்செந்தூர் (திருச்சீரலைவாய்), திருவாவினன்குடி, திருவேரகம் (சுவாமிமலை), குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்பன.

உல்லாசம் - திருப்பரங்குன்றம்.
நிராகுலம் - திருச்செந்தூர்.
யோகம் - திருவாவினன்குடி (பழனி).
இதம் - சுவாமிமலை.
சல்லாபம் - திருத்தணி.
விநோதம் - பழமுதிர்சோலை.

இத்தகு வித்தகு திறத்தை அருணகிரிநாதர் கந்தரனுபூதியில் விளக்குகின்றார். "உல்லாச நிராகுல யோகவித சல்லாப வினோதனும் நீயலையோ". இந்த ஆறுபடை வீடுகளையும் அடியார்கள் அன்புடன் வழிபட்டு ஆறெழுத்தாகிய சடக்கர மந்திரத்தைச் செபித்தால், அவர்கள் திருவுள்ளக்கோயிலில் முருகன் எழுந்தருளியிருப்பான்.

" ஆறு திருப்பதிகண்டாறெழுத்தும் அன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே "

என்று கந்தர் கலிவெண்பாவில் குமரகுருபர சுவாமிகள் கூறியருளினார். புண்ணியம் எண்ணில்லாத வகையில் செய்தவர்க்கே இந்த ஆறுபடை வீட்டுத்தரிசனம் ஒருங்கே கிடைக்கும்.

ஆறு கார்த்திகைப் பெண்கள் மகிழ, ஆறு திருமேனி கொண்டுஅழுது விளையாடியருளியவரும், பராசரர் குமாரர்களான தபதர், அநந்தர் நந்தி, சக்பராணி, சதுர்முகர், மாலி என்ற அறுவருக்கும் உபதேசித்தவரும், ஆறு காலங்களிலும் வழிபடத்தக்கவரும், ஞானப்பிரகாசம், ஞானானந்தப்பிரகாசம் என்ற,சர்வஞானவியாபகப் பிரகாசம், சத்தஞான சாட்சிப்பிரகாசம் சர்வபரிசுத்த பிரமஞானானந்த அருட்பிரகாசம், அநாதி நித்ய பிரம ஞானானந்த சிவப்பிரகாசம் என்ற ஆறுபிரகாச ஆறுமுகப் பரம்பொருளாகிய முருகப்பெருமானுடைய ஆறு படை வீடுகளைப் பக்திப் பரவசத்துடன் தரிசிப்போர், இம்மை, மறுமை, முத்தி, என்ற மும்மை நலங்களையும் எளிதிற் பெறுவார்கள். ★



அண்ணாமலை அண்ணல்

(திருவண்ணாமலை)

சைவ சித்தாந்தம்

'சித்தாந்தக் கலைச்செல்வர்'

திரு. க. வச்சிரவேலு முதலியார், B.A., L.T.,

திருவாவடுதுறை ஆதீனம்.

அடிப்படைக் கொள்கை:

உலகத்தை நடத்தும் முதற்பொருள் ஒன்று உண்டு: அஃது அறிவே வடிவாய் விளங்குவது; நம் அறிவு நிலையைக் கடந்ததாயினும், உயிர் தோறும் கலந்து உடனாய் நின்று செலுத்தி வருவது. அதனைத் தன் உணர்வில் தலைப்பட்டு உணர்ந்து, அதன் அருள்வழி நிற்றலே, ஒருவனுக்குத் தலையாய அறமும்; வாழ்க்கையின் முடிநிலைப் பயனும் ஆகும். அங்ஙனம் உணர்வார்க்கு, அஃது அருளொளிப் பேரின்பமாய் அநுபவப்படுவது. இதனால், அதனைச் சிவம் அல்லது சிவன் எனக் குறித்துணர்வதே தலையாய அறிவினர் துணிவு - என்னும் அடிபடைக் கொள்கையை உடைய ஒழுக்க நெறியே, சைவ சித்தாந்தம் எனப்படும். சிவம்-அறிவு - இன்பம்.

இஃது உலகில் தோன்றி வழ்ங்கும் ஒழுக்க நெறிகளுள் மிகப் பழைமையானதும், அவற்றின் முடிநிலை (Culmination) யானதும் ஆகும். இது சிவனால் வெளிப்படுத்தப் பெற்றமையாலும், அவனுடைய சம்பந்தத்தை உணர வேண்டும் என விதித்தலினாலும், சைவம் (சிவ சம்பந்தம் உடையது) எனவும்; முன்தோன்றும் பொது உணர்விற்கு அன்றி, ஆய்வின் பயனாய்ப் பெறும் முடிநிலைத் துணிவாய் நிலை பெறுதல் பற்றிச் சித்தாந்தம் (பெற்ற முடிவு அல்லது முடிந்த முடிவு) எனவும்; அருளாசிரியர்களால் வழங்கப்பெறுசிறது

" எவ்வுயிரும் நீங்காது உறையும் இறை சிவம் என்று எவ்வுயிர்க்கும் அன்பாய் இரு "

திரு. 5

தலையாய பிரமாண நூல்கள் :

சிவநெறியைத் தெளிவாக உணர்த்தி, நன்னெறிப்படுத்த எழுந்த செந்தமிழ் அருட்பாடல்கள், தேவாரம் முதல் பெரியபுராணம் இறுதியாக எண்ணப்படும் சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் ஆகும்! இதன் அடிப்படை உண்மைகளையும், நெறிமுறைகளையும் அளவை முறையில் உணர்த்தும் நூல்கள் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தி, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம் முதலிய பதினான்கு சாத்திரங்கள் ஆகும்.

அருமையில் எளிய அழகு :

சிவநெறியுட் கூறப்பெறும் பல உண்மைகள் உலகப் பொதுமையும், அருமை பெருமைகளோடு விரவிய எளிமையும் உள்ளவை. அவை பிறசமயங்கள் தோன்றி உருத்தெரிய வாராத மிகப் பழங்காலத்திலேயே சொற்செய்து அருநிதியமாகத் தமிழ் மக்களுக்கு வைக்கப் பெற்றவை. சுமார் இராண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றி, இன்றும் வழங்கி வரும் திருமந்திரமாலை எனப்படும் பத்தாந் திருமுறையில் வரும் சில சொற்றொடர்களையும் பாட்டுக்களையும் எடுத்துக் காட்டாகக் கண்டு இன்புறலாம் :

" அன்பே சிவமாவது ,, " ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" " ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின் " " ஒன்று அவன் தானே, இரண்டு அவன் இன்னருள் " என்பவை திருமந்திரத் தொடர்கள் !

யாவர்க்கும் ஆம் இறை
வற்கொரு பச்சிலை;
யாவர்க்கும் ஆம் பசு
விற்கொரு வாயுறை ;
யாவர்க்கும் ஆம் உண்ணும்
போதொரு கைப்பிடி,
யாவர்க்கும் ஆம் பிறர்க்கு
இன்னுரை தானே !

நெறியைப் படைத்தான்
நெருஞ்சில் படைத்தான்,
நெறியின் வழுவின்
நெருஞ்சில் முள்பாயும் ;
நெறியில் வழுவா
தியங்கவல் லார்க்கு
நெறியின் நெருஞ்சில்முள்
பாயாகி லாவே.

" சார்ந்தவர்க் கின்பம்
கொடுக்கும் தழல்வண்ணன்
பேர்ந்தவர்க் கின்னாப்
பிறவி கொடுத்திடும் ;
கூர்ந்தவர்க் கங்கே
குரைகழல் காட்டிடும்
சேர்ந்தவர் தேவரைச்
சென்று உணர்வாரே "

என்பவை திருமந்திரமாலைச் செய்யுள்கள்! இவற்றால் அறிவுறுத்தப்பெறும் கருத்துக்கள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுதற்குரிய சிறப்புடையனவாகத் திகழ்தல் காணலாம்.

தனிச்சிறப்பு :

யான் எனது என்னும் செருக்கு அற்றால் அன்றி உயிர்க்கு உய்தி இல்லை என்பதும், எது உயிர்க்கு உணர் பொருளாக உள்ளதோ அது வாக உயிர் ஆகிறது என்பதும், தத்துவ நூல் களின் அடிப்படைத் துணிபுகள். இத்துணிபு களோடு மாறுபடாதபடி, உண்மையைப்பட் டாங்கு விளக்கி, மக்களை நன்னெறிக்கண் உய்ப்பது தமிழகத்துக்குரிய சிவநெறி ஒன்றே ஆகும். உயர்ந்த பொருளை எண்ணினால் நாம்



திருவாவின்ன்குடிக் குடமுழுக்கு நினைவுப் பெருவிழாவில் நிர்வாக அதிகாரி — தணையாளையர் திரு, ஜி. ஆதிமூலம், B.A., B.L. அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல்.

உயர்கின்றோம். ஆகவே, குறைவிலா மங்கலப் பொருளாகிய சிவத்தைச் "சிவோகம்" (சிவன் யான்) என உணர்ந்து உபாசிக்கச் சொல்லுகிறது இந்நெறி! அதே சமயத்தில், "நீயே முதற்பொருள் என்று ஒருபொழுதும் கருதாதே" என முன்பாதுகாப்புரையும் தருகிறது. 'நான் முதல் (அகம்பிரம்மம்)' என்ற உணர்வினுல் யான் என்னும் செருக்கு உளதாவதோடு' முதல்வனை அல்லது அவன் திருவருளை அறியமாட்டாத அறியாமையும் உள்ளது என எடுத்துக்காட்டுகிறது இந்நெறி. இது முதற்பொருளைத் தலைப்பட்டு உணர்ந்து, அப்பொருளின் அருளாற்றலில், நீர்வழிப் படும் புணைபோல, அடங்கி நின்று அன்பு செய்யுமாறு பணிக்கின்றது. "சேர்வார்தாமே தாளுகச் செயுமவன்"

" அவனிவ னுனது
அவனருளா லல்லது
இவனவன்ஆகான்என் றுந்தீபற
என்றும் இவனேயென் றுந்தீபற"

என எழுந்த திருவாக்குகள் போல்வன, இங்கு நாம் சிந்திக்கத் தக்கவை.

கடவுட் கொள்கையை உடைய பிற நெறிகள் பலவும், கடவுள் ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடப்பது ஒன்றினையே வழிபாடு என விதிக்கும். அவ்வாணை, பெரும்பான்மையும் அறநெறியாகவே அமைந்து, தனிமகனது மன அமைதியினையும், பொது வாழ்வின் ஒற்றுமையினையுமே முடிநிலைப் பயனுகக் கொண்டு நிற்கும்; அவை, 'அறத்தை விதித்த முதல்வனை மேலான ஓர் உலகத்திற்சென்றே காணுதல் கூடும்; அஃது இவ்வுடம்பை நீத்தபின்னரே நிகழத்தக்கது' என வலியுறுத்தும். சிவநெறி அங்ஙனம் அமையாது, முதல்வனது அருளாணையாகிய அறவழியில் ஒழுகுவதோடு, இவ்வுடம்பு உள்ளபோதே அவனைத் தலைப்பட்டு உணர்ந்து, அவன்றன் மங்கல குணங்கள் நம்மாட்டு மேம்பட்டு விளங்குவதற்குரிய சிறப்புச்செய்தி முறைகளையும் படிநிலையில் வைத்து உணர்த்துகின்றது.

கடவுளும் மனிதனும்:

இந்நெறியின்படி :- ' இறைவனும் உயிர்களும் என்றும் உள்ள பொருள்கள். இறைவன் தானே அறிந்து அறிவிக்கும் இயற்கை முற்றுணர்வுடைய முழுமுதல். அவன் அருளாணை வழியே எல்லா உலகமும் நடைபெறும். உயிர்கள், படலம் படர்ந்த கண்ணைப்போலத் தம் அறிவாற்றலைத் தடுக்கும் இயற்கைக் குற்றம் உடையவை; அக்குற்றம் இருள் மலம் எனப்படும். மலம்-மாசு, அழுக்கு. அழுக்காறு, அவா, வெகுளி என்பவை மனத்தின் மாசு என உணர்தல் வேண்டும். உயிர் இம்மாசு நீங்கி, வியாபக உணர்வு விளங்கப்பெற்றுல் அன்றி, முதற்பொருளையும் உணராது; தன் உண்மை இயல்பையும் உணரமாட்டாது. உயிர்கள் இம்மாசு நீங்கித் தன் அருளொளியைப் பெற்றுத், தன்னைச் சார்ந்து வரம்பில் இன்பத்தில் அழுந்தி நிலைபெறுதற் பொருட்டே, முதல்வன் உலகப் படைப்பை மேற்கொண்டான்.

உலகப் படைப்புப் பயனுடைய செயல் எனத் தெரிவிப்பது சிவநெறி ஒன்றே ஆகும். " ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்-உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்" என்பது திருவாசகம். ஆனுல், "உலகத்திற்போல, வெறும் விளையாட்டே" என்பது வியாச சூத்திரம்.

உலகம், 'உடம்பு, கரணம், உலகு, நுகர்ச்சிப்பொருள்' என நான்கு வடிவில் இருந்து, மலத்தின் வலியைச் சிறிது நீக்கி, உயிர்க்குச் சிற்றறிவையும் சிறு ஆற்றலையும் விளங்கச் செய்கின்றது. உயிர்கள் கரணங்களே தம் வடிவம் என ஒற்றுமைப்பட்டு நின்று, உடம்பை நிலைக்களஞகக் கொண்டு, உலகில் வாழ்ந்துவரும். இந்நுகர்ச்சி, சத்துவம் இராசதம் தாமதம் என்னும் முக் குணங்களுள் ஒன்றனை உயிரின் மாட்டு மேம்படச் செய்தல் பற்றி, இன்பம் துன்பம் மயக்கம் என்னும் மூன்றனுள் ஒருவகையாக அடங்கும். இவற்றால், உயிர்கள் விருப்பு வெறுப்பும் யான் எனது என்னுஞ் செருக்கும் உடையவையாய் நல்வினை தீவினைகளைச் செய்து, அவற்றின் பயனுக வேறுவேறு உடம்பும், இடமும், நுகர்ச்சியும் தரப்பெற்று நுகர்ந்து இறந்தும், பிறந்தும் வரும்.

இங்ஙனம், மெய்ந்நூல்கள் சார்பாக ஆராய்ந்து காணும் பிறப்பு நிலை, உயிர்களின் சகல அவத்தை எனப்படும். சகலம்-கலையோடு கூடியது. உடம்பு முதலிய நான்கு உருவிற் புலப்படும் உலகத்திற்கு முதற்காரணமாக, புலப்படாத அருவநிலையில், யாங்கணும் நிறைந்துள்ள சடசத்தியே (Material force) மாயை எனப்படும். அஃது உள்பொருள் ; சங்கரர் கூறுவதுபோல, உள்ளதும் அன்றி இல்லதும்

அன்றிச் சொல்லொணுதது அன்று. அவர் கூறுவதுபோல, முதற்பொருளைத் தன்னுண்மை உணராதபடி மயக்குவதும் அன்று; மல இருளை நீக்கி, உயிர்களுக்கு அறிவை விளக்கும் விளக்குப்போல்வது மாயை. அஃது ஒரோவழி உயிர்களை மயக்குவதற்குக் காரணம், அதனேடு விரவித்தன் வலியைக் காட்டும் இருள்மலமே ஆகும். இறைவன் மலத்தடை இல்லாதவன்; மாயைக்குத் தலைவனுய் அதன் உதவியைத் தன் பொருட்டு வேண்டாதவனுய் அதனைக் கடந்தவன்.

இம்மாயையின் நுண்ணிய காரியமே கலை. அது காலம், நியதி முதலிய பிற (மாயையின்) காரியங்களோடு சேர்ந்து உயிரைப் பற்றி நிற்கும் நிலையே சகலம் எனப்படுகிறது.

இனி, கலை முதலியவற்ருேடு சேராது, பிறத்தற்குமுன், கருப்பையில் அறிவற்றிருக்கும் குழவியைப்போல, இருள்மலம் ஒன்றிலேயே அழுந்தியிருந்த மூர்ச்சை நிலை ஒன்று உயிர்க்கு உண்டு என்பது தொடர்ச்சி பற்றிக் கருதி உணரப்படும். அஃது அநாதி கேவலம் எனப்படும். கேவலம்-தனிமை. இக்கேவலநிலை நம் அறிவைக் கடந்ததே ஆயினும், அன்ருடம் நமக்கு வரும் உறக்கம், கனவு, நனவு என்னும் நிலைகளில் வைத்து அதன் இயல்பைக் கருதி உணரல் ஆகும். மாயையின் காரியமாகிற பொறிகளையும் அந்தக் கரணங்களையும் விடும்போது நாம், அறிவு விளங்கப்பெருமல், இருள் மலத்தில் அழுந்திக் கேவலப்படுகிருேம். அதுவே உறக்கம் எனப்படுகிறது. அக்கருவிகளோடு சேர்ந்து நுகரும் நிலையே நனவு. அதுவே சகலம் எனப் பொதுவாக அறிந்துகொள்க. இனி, பொறி முதலிய கருவிகள் இன்றி அறியாமையாகிய இருளில் அழுந்தும் நிலையே உண்மைக் கேவலம் ஆகும்.

இனி, இவ்வறிவு அறியாமைகளை (சகல கேவலங்களை)க் கடந்து, இறைவனது அருள் ஒளியைச் சார்ந்து நிற்கும் நிலை ஒன்று உண்டு. அது சுத்தம் (தூய்மை) எனப்படும். அதுவே உயிர்கட்கு இயற்கையானதும், நிலைத்ததும் ஆதல்பற்றி, அது பேரா இயற்கை எனப்படும்.

திருவாவினன்குடிக் குடமுழுக்கு விழா நிறைவுப்பெருவிழாவில் பழனி ஆண்டவர் மகளிர் கலைக்கல்லூரி முதல்வர் பேராசிரியை திருமதி N. சரோஜினிதேவி அவர்கள் சிறப்புரை நிகழ்த்துதல்.

அறியாமை, மலத்தான் ஆய செயற்கை எனவும், சிற்றறிவு, மாயையின் காரியங்களாகிய உபாதி பற்றிய செயற்கை எனவும் பெரியோர் கூறுவர்.

இவ்வரிய கருத்துக்களைப் பின்வரும் பாட்டைக் கொண்டு நினைவிற்கொள்ளலாம்;

கேவல சகல சுத்தம்
 என்றுமூன் றவத்தை ஆன்மா
மேவுவன்: கேவ லந்தன்
 உண்மை; மெய் பொறிகள் எல்லாம்
காவலன் கொடுத்த போது
 சகலனும்; மலங்கள் எல்லாம்
ஓவின போது சுத்தம்
 உடையன் உற்பவந் துடைத்தே.

முண்டகோபநிடதத்தில் மூன்றும்முண்டகத்தின் முதற் கண்டத்தின் முதல் மூன்று மந்திரங்களின் மொழி பெயர்ப்புக்கள் மேற்கூறிய கருத்துக்கள் அனைத்தும் வேதப் பயனாகவும், வேதாந்தக் தெளிவாகவும் உள்ளவை எனக் காட்டும் நோக்குடன் கீழே தரப்படுகின்றன.

1. அழகிய சிறகுடைய பறவைகள் இரண்டு; (உயிர், முதல்வன்) இணைபிரியாதவை; ஒரே; மரத்தில் தங்குபவை; அவற்றுள் ஒன்று சுவையுள்ள பழத்தை நுகர்கிறது; மற்றையது உண்ணாமல் பார்த்துக் கொண்டிருக்கிறது.

2. ஒரே மரத்திலிருப்பினும் ஒன்று (உயிர்) தலைமையின்றி மதிமயங்கித் திறமையற்றுத் துன்புறுகின்றது; அஃது எப்போது, உயர்ந்ததும் ஆளுந்தன்மை வாய்ந்ததுமாகிய மற்றையதை (முதல்வனை)க் கண்டு அதன் மகிமையைத் தன்னுடையதாகச் சார்ந்து பெறுகிறதோ அப்போது துன்பத்தின் நீங்கியதாகிறது.

3. காண்போன் (உயிர்) வேதத்தின் பிறப்பிடமாய், வினைமுதலாய், ஈசனாயுள்ள புருடனை எப்போது காண்கின்றானோ, அப்போது அங்ஙனம் அறிந்தவன் நல்வினை தீவினைகளை உதறிவிட்டு மாசற்றவனாய் அப்பரமபுருடனோடு சாமியத்தை அடைகிறான்.

இங்குக் காட்டியவற்றைப்போல இன்னும் அநேகம் உபநிடதங்களில் உள்ளன. மேற் காட்டியவற்றால் சிவநெறி ஒன்றே வேதத்தொடு செந்தமிழ்ப் பயனாக உள்ளது என்பது இனிது விளங்கும். இச்சிவநெறி உலக முதல்வன், 'தானும், தன் சத்தியும்' என இருதிறப்பட்டு இயைந்து நின்று, உலகு உயிர்களோடு கலந்து உடனாய் நின்று செலுத்துபவன் என்பதைச் சிறப்பாகக் கண்டு வெளியிடுகிறது. ★

(குடமுழுக்கு விழாக் காட்சி) ஸ்ரீ எல்லை அம்மன் என்னும் ஸ்ரீ ரேணுகா பரமேஸ்வரி ஆலயம், தேவராய முதலி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5.

அத்வைத தத்துவம்

'வேதாந்த வித்தகர்'
திரு. டி. எம். பி. மகாதேவன், M.A.: Ph.D.,
சென்னைப் பல்கலைக் கழகம்

அத்வைதம் என்பது வேதாந்த மதங்களுள் ஒன்று. "பிரமம் இரண்டற்ற மூலப் பொருள்; பலவாகக் காணப்படும் உலகம் பொய்த் தோற்றம்; சீவன் பிரமத்தைவிட வேறன்று" என்று அத்வைதம் கூறுகிறது. அத்வைதம் என்ற சொல்லுக்கு இரண்டற்றது என்பது பொருள். ஆசாரிய சங்கரர் இம்மதத்தின் கொள்கைகளைத் தாம் வரைந்த நூல்களில் தெளிவாக விளக்கியுள்ளார். இம்மதம் அவர் இயற்றியதன்று. உபநிடதங்களில் பலவிடங்களில் அத்வைதம் போதிக்கப்படுகின்றது. முக்கியமாக யாக்ஞவல்கியரின் உபதேசங்களில் இதைக் காணலாம். சங்கரருக்கு முன்வந்த கௌடபாதர், அத்வைதக் கொள்கைகளை யுக்திகளைக் கொண்டு நிலைக்கச் செய்தார்.

ஏனைய வேதாந்தமதங்களைப் போல அத்வைதமும், மூன்று பிரஸ்தானங்களை மூல நூல்களாகக் கருதுகின்றது. அவையாவன: உபநிடதங்கள், பிரம சூத்திரம், பகவத்கீதை என்பன. கௌடபாதர் மாண்டுக்கிய உபநிடதத்திற்கு வியாக்கியானமாகக் காரிகையொன்றை இயற்றியுள்ளார். சங்கரர் முக்கியமான உபநிடதங்களுக்கும், மற்ற இரண்டு பிரஸ்தானங்களுக்கும் பேருரை எழுதியுள்ளார். அத்வைதத்தைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கி அவர் வரைந்துள்ள விவேக சூடாமணி, உபதேச ஸாகஸ்ரி முதலிய தனி நூல்களும் உண்டு. பிரகதாரணியகம், தைத்திரீயம் முதலிய உபநிடதங்களுக்குச் சங்கரர் எழுதிய உரைகளுக்கு, அவருடைய சீடரான சுரேசுவரர் வார்த்திகங்கள் செய்துள்ளார். நைஷ்கர்ம்ய சித்தி என்பது சுரேசுவரருடைய மற்றொரு நூல். சங்கரரின் இன்னொரு சீடரான பதுமபாதர் தம் குருவின் சூத்திர பாடியத்திற்கு ஒரு வியாக்கியானம் எழுதினார். அவர் எழுதியதில் முதல் ஐந்து பாதங்களுக்குள்ள வியாக்கியானமே அழியாமல் வந்திருக்கிறது. ஆகையால் அதற்குப் பஞ்சபாதிகை என்ற பெயர் ஏற்பட்டது. இதற்குப் பிரகாசாத்மன் என்பவர் பஞ்சபாதிகா விவரணம் என்ற ஒருரைவரைந்துள்ளார். இதை அடிப்படையாகக் கொண்டு விவரணம் என்ற மரபு அத்வைதத்தில் தோன்றியது.

விவரணக் கொள்கைகளைத் திரட்டி விவரணப் பிரமேய சங்கிரகம் என்ற நூலைப் பாரதீ தீர்த்த-வித்யாரணியர் இயற்றினார். இவருடையதே பஞ்சதசீ என்னும் காவியமும். அத்வைதத்தில் சங்கரருக்குப்பின் வந்த மற்றொரு மரபு பாமதீ என்பது. இதற்கு மூல நூல் வாசஸ்பதி மிசிரர் சங்கரருடைய சூத்திர பாஷியத்திற்கு எழுதிய பாமதீ என்னும் வியாக்கியானம். அமலானந்தர் எழுதிய கல்பதரு பாமதீயின் விளக்கம். இதற்கு உரை, அப்பைய தீட்சிதரின் கல்பதரு பரிமளம் என்பது. அத்வைத மதத்திலுள்ள பேதங்களை வகுத்துச் சித்தாந்த லேச சங்கிரகம் என்னும் நூலை அப்பைய தீட்சிதர் இயற்றினார். ஏனைய அத்வைத நூல்களின் முக்கியமான சில நூல்கள்: சர்வஞ்ஞாத்ம முனியின் சம்க்ஷேப சாரீரகம்; அர்ஷரின் கண்டன கண்டகாத்யம்; சித்சுகரின் தத்வப்பிரதீபிகை; மதுசூதன சரசுவதியின் அத்வைத சித்தி; தர்மராஜரின் வேதாந்த பரிபாஷை; சதானந்தரின் வேதாந்தசாரம்! சமஸ்கிருதத்தைத் தவிர மற்ற

மொழிகளிலும் வேதாந்த நூல்கள் உண்டு. இந்தியில் நிச்சலதாசர் எழுதிய விசார சாகரம், விருத்திப் பிரபாகரம் என்னும் நூல்களும், தமிழில் தாண்டவராய சுவாமிகள் எழுதிய கைவல்லிய நவநீதம் என்னும் நூலும், மக்களுக்கு மிகவும் உபயோகமுள்ளவை.

அத்வைத மதத்தில் ஆறு அளவைகள் அல்லது பிரமாணங்கள் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. அவையாவன: பிரத்தியட்சம், அனுமானம், உபமானம், அர்த்தாபத்தி, அனுபலப்தி, சப்தம் என்பன. (1) பிரத்தியட்சப் பிரமாணம் என்பது சாதாரணமாக இந்திரியங்களுக்கும், விஷயங்களுக்கும் உள்ள சேர்க்கை. இதனால் ஏற்படும் ஞானம்பிரத்தியட்சஞானம். உதாரணமாகக் கண்களுக்கும் ஒரு விஷயத்தின் உருவத்திற்கும் சம்பந்தம் உண்டாகும் போது காட்சி யேற்படுகின்றது. வெளியேயுள்ள பொருள்களை யறிவதற்குத் தான் இந்திரியங்களின் உதவி வேண்டும். நம் மனத்திலுள்ளவற்றை யுணர்வதற்கு மனமே தான் காரணம். இதற்கு மானதப் பிரத்தியட்சம் என்று பெயர்.

(2) அனுமானம் என்பது ஒரு குறியின் ஞானத்தின் வாயிலாக, அது எதைக் குறிக்கின்றதோ அதையறிவது. புகையைக் கண்டு, நெருப்பை அனுமானிக்கிறோம். குறிக்கு ஏது வென்றும், குறிக்கப்படும் பொருளுக்குச் சாத்தியம் என்றும் பெயர். இவ்விரண்டுக்கும் உள்ள சம்பந்தம் வியாப்தி. விரிவாகவுரைக்கப்படும் அனுமானத்திற்கு ஐந்து அவயவங்கள் உள்ளன. உதாரணமாக: குன்றில் நெருப்பு உள்ளது (பிரதிஞ்ஞை); அங்கே புகை யிருப்பதால் (ஏது); எங்கெங்குப் புகையுளதோ அங்கங்கு நெருப்புளது, அடுக்களையிலுள்ளது போல (உதாரணம்); நெருப்பால் வியாபிக்கப்பட்ட புகை குன்றில் உளது (உபநயம்); ஆகையால் குன்றில் நெருப்புளது (நிகமனம்).

(3) உபமானம் என்பது இரண்டு பொருள்களை ஒப்பிட்டுப் பார்ப்பது. இதனால் ஏற்படும்

காஞ்சிபுரம் திருவேகம்பநாதர் கோயிலில் ஆலயத் தூய்மைப் பரிசளிப்பு விழா நிகழ்ந்தபொழுது, நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்களுக்கு அறங்காவலர் திரு. எல்லப்ப நாயக்கர் பொன்னாடை போர்த்தல். சுழற் கோப்பையுடன் இருப்பவர் அறங்காவலர் திரு. எஸ். ஜி. பெருமான்.

ஞானம் உபமிதி. கவயம் என்ற விலங்கு பசுவைப் போன்றது என்று ஒருவன் கேள்வியினுல் தெரிந்து கொள்கிருன். பின்னர் வனத்திற்குச் சென்று கவயத்தைப் பார்க்கிருன். அப்பொழுது தான் காணும் விலங்கைப் போலுள்ளது பசு என்று உணர்கிருன் ; இது உபமிதி ஞானம்.

(4) அர்த்தாபத்தி என்பது ஒரு விஷயம் நேரிடையாக விளங்கவில்லையானுல், அதை விளக்கக் கூடிய ஒன்றைக் கற்பிப்பது. ஒருவன் பகற்பொழுதிலே சாப்பிடுவதில்லை ; ஆனுல் இளைக்காமல் இருக்கிருன். இவ்விரண்டையும் பொருத்துவதற்காக "அவன் இரவில் உண்கின்ருன்" என்று ஊகிக்கின்ரேம்.

(5) அனுபலப்தி என்பது ஒரு பொருளின் இன்மையை உணர்வது. "தரைமீது குடம் இல்லை" என்று குடத்தின் இன்மையை அனுபலப்தி மூலம் அறிகின்ரேம்.

(6) சப்தம் என்பது கேள்வி ஞானம். பதங்களின் சேர்க்கைகளாகிய வாக்கியங் களினின்று அறிவு ஏற்படுகின்றது. சப்தப் பிரமாணம் மற்றப் பிரமாணங்களை விட முக்கிய மானது ; ஏனெனில், ஆத்ம ஞானம் உபநிடத வாக்கியங்களிலிருந்து தான் ஏற்பட வேண்டும். மீமாம்சகர்கள் வேதங்களின் தாற் பரியம் கர்மம் என்று வாதிக்கின்ருர்கள். ஏனென்ருல், அவர்களுடைய கொள்கைப்படி செயலை யொட்டியே ஒரு வாக்கியத்திலுள்ள பதங்கள் பொருளைத் தெளிவுறுத்துகின்றன. வேதாந்திகளோ என்ருல், செயலோடு சம்பந்தப்படாத ஒரு பொருளையும் வாக்கியத் தினின்று அறியலாம் என்கிருர்கள். மிகவும் ஒளி பெற்றவன் சந்திரன் என்றபோது, சந்திரனின் சொரூபத்தை உணர்கிரேம் ; இங்குச் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. உபநிடதங்கள், ஆத்ம பிரம்ம வஸ்துவை இவ்வாறே உணர்த்துகின்றன.

அறிவது என்ற வியவகாரத்தில் நான்கு கூறுகள் உள்ளன. (1) அறிபவன் (2) அறியப்படும் பொருள் (3) அறியும் வழி (4) அறிவு. இந்நான்கும் ஒரே ஆத்ம வஸ்துவின் பேதங்கள் என்பது அத்வைதத்தின் கொள்கை. ஆத்ம சைதன்னியம் அந்தக்கரணத்தில் பிரதி பலித்து, அறிபவன் (பிரமாதா) என்ற பெயரை யடைகின்றது. அறியப்படும் பொருளிலும், அதே சைதன்னியம் உள்ளது (விஷயம்). அஞ்ஞானத்தால் இவ்விரண்டும் வேருகக் காணப்படுகின்றன. பிரமாண வியவகாரத்தால், இவ்விரண்டிற்கும் சம்பந்தம் ஏற்படுகின்றது. இதை ஏற்படுத்தும் கருவி விருத்தியென்னும் மனத்தின் பரிணமம். விருத்தியிலும் (பிரமாணம்) சைதன்னியம் விளங்குகின்றது. விருத்தியின் வியாபாரத்தினுல் ஞானம் (பிரமிதி) உதிக்கின்றது. இதுவும் ஆத்ம சைதன்னியமே. இவ்வாறு பிரமாண வியவ காரத்தை ஆராய்ந்தாலும் கூட "ஆத்மா வொன்றே உளது ; அதன் சொரூபம் ஞானம்" என்பது விளங்கும்.

இனி. உண்மை எது, பொய் எது என்று விசாரிப்போம். உண்மை என்பது ஞானத்தின் தன்மை. ஒரு ஞானம் பொய்யாவது, ஞானத் தின் வெளியேயுள்ள சில சந்தர்ப்பங்களினுல் ஆகும். இதை சம்ஸ்கிருதத்தில் "ப்ராமாண்யம்" ஸ்வத: அப்ரா மாண்யம் பரத" என்பார்கள். பொய்ஞ்ஞானம் என்பதே அஞ்ஞானம். முத்துச் சிப்பியை வெள்ளியென்று மதிப்பது அஞ்ஞானத்தால். அஞ்ஞானத்தின் விஷயத்தில் சொரூபத்தைப் பற்றிய விவாதம் இந்திய தரிசனங்களிடையே யுண்டு. (1) பௌத்த மதத்தின் ஒரு சாராரான சூனியவாதிகள், இல்லாதது தோன்றுகின்றது என்று கூறுகிருர்கள் (அஸத்க்யாதி). (2) பௌத்த மதத்தின் மற்ருெரு சாராரான விஞ்ஞான வாதிகள், உள்ளே விஞ்ஞான ரூபமாயுள்ள பொருள் தவருக வெளியே தோன்றுகின்றது என்கிருர் கள் (ஆத்மக்யாதி). (3) மீமாம்சை மதத்தின் ஒரு சாரரான பிரபாகரர்களும், சாங்கியர்களும் இவ்வாறு உரைக்கின்றனர். "இது வெள்ளி' என்று சொல்லும்போது, இது என்ற ஞானமும், வெள்ளியென்ற ஞானமும் தனித்தனியே உண்மைதான். இது என்பதை நேரிடையே பார்க்கிரேம். முன் பார்த்த வெள்ளியை நினைவு கூர்கின்ரேம் (ஸ்மரிக்கிரேம்). தவருக இவ்விரண்டையும் சேர்த்து, "இது வெள்ளி" யென்று நினைக்கிரேம். இதுவே அஞ்ஞானம் (அக்யாதி). (4) மீமாம்சை மதத்தின் மற்ருெரு சாரரான பாட்டர்களும் நையாயிகர் களும் பொய்யென்பது ஒன்றை மற்ருென்ருக மதிப்பது என்று கருதுகிருர்கள். கடையி லுள்ள வெள்ளியை இங்கே காண்கிரேம். இதற்குக் காரணம் முத்துச் சிப்பிக்கும், வெள்ளிக்கும் உள்ள ஒப்பு சாதிருசியம் (அன்யதாக்யாதி). (5) அத்வைதிகள்

இவ்வாறு பகர்கின்றனர்:— பொய்யாகத் தோன்றும் வெள்ளி உள்ளதும் அன்று, இல்லாததும் அன்று. அது தோன்றுவதால் 'அது இல்லை' என்று சொல்லிவிடலாகாது. முத்துச் சிப்பியின் உண்மை ஞானம் உதயமாகும் போது, வெள்ளி மறைந்துவிடுவதால் அதை உள்ளது என்றும் கூறமுடியாது. ஆகையால் அது அநிர்வசனீயம் (விவரிக்க முடியாதது); அவித்தையினல் உற்பத்தி செய்யப்பட்டது; ஞானத்தினுல் அழிவைபடைவது (அநிர்வசனீயக்பாதி). க்யாதி என்பது பொய்யைப் பற்றிய வாதம்.

உண்மையின் இலக்கணம் "என்றும் உள்ளது; காலம் முதலிய அளவிற்கு உட்படாதது" என்பதாம். இவ்விலக்கணத்தின்படி பார்த்தால், பிரமம் அல்லது ஆத்மாவொன்றே உண்மை. இதற்குக் குணங்கள் இல்லை; குறிகள் இல்லை. இது சொல்லுக்கும் மனத்துக்கும் எட்டாதது. ஆகையால்தான் உபநிடதங்கள் இது அன்று, (நேதிநேதி) என்று, விலக்கல் வாயிலாகப் பிரமத்தின் சொருபத்தைப் போதிக்கின்றன. இதுவே நிர்க்குணப் பிரமம். நம்முடைய புத்திக்குச் சகுணமாக (குணங்களோடு கூடியதாக)த் தோன்றுகிறது. இந்த நிலையில் பிரமம் உலகத்திற்குக் காரணம். சகுணப் பிரமம் அல்லது ஈசுவரன் உலகிற்கு நிமித்த காரணம் மாத்திரம் அல்ல; உபாதான காரணமும் அப்பொருளே. பிரமத்தினிடமிருந்து உலகம் பிறக்கின்றது; பிறந்தபின் அதனுள்ளே அடங்குகின்றது. ஆனல் உலகம் பிறப்பதும், நிலைப்பதும், அடங்குவதும் உண்மை அல்ல. பால் தயிராக எவ்வாறு மாறுகிறதோ. அவ்வாறு பிரமம் உலகாகப் பரிணமிப்பது கிடையாது. கயிற்றினிடத்தே பாம்பு தோன்றுவது போல, பிரமத்தை ஆதாரமாகக் கொண்டு உலகம் தோன்றுகிறது. இந்தக் கொள்கைக்கு விவர்த்தவாதம் என்று பெயர். அதாவது பிரபஞ்சம் மாயை அல்லது மித்யை (பொய்த் தோற்றம்) என்பதாம்.

உலகம் மாயையென்று சொல்வதால் அத்வைதத்திற்கும் சூனியவாதத்திற்கும் வேறுபாடில்லை என்று சிலர் கருதுகின்றனர். அது தவறு. சூனிய வாதம் "உண்மை என்பது ஒன்றுமில்லை" என்று கூறுகின்றது. அத்வைதம் "பிரமம் ஒன்றே உண்மை" என்று போதிக்கின்றது. "பாம்பும் உண்மையன்று. கயிறும் உண்மையன்று. இல்லாதது



ஸ்ரீ எல்லை அம்மன் என்னும் ஸ்ரீ ரேணுகா பரமேஸ்வரி ஆலயம், தேவராயமுதலி வீதி, திருவல்லிக்கேணி, சென்னை. 108 சங்கு அபிஷேகம். சிலம்புச் செல்வர் திரு.ம. பொ. சிவஞானம் முதலிய பெருமக்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

வியவகாரத்தில் கயிருகவும், பிரமத்தில் பாம்பா கவும் தோன்றுகிறது''— இது சூனியவாதம். ''உண்மை பிரமம் ஒன்றே. இது வியவகாரத்தில் கயிறு முதலியனவாகவும், பிரமத்தில் பாம்பு முதலியனவாகவும் தோன்றுகிறது''— இது அத்வைதம். இத் தோற்றத்திற்குக் காரணம் மாயை. மாயை, ஒரு பாவ பதார்த்தம். அதாவது அது ஞானத்தின் அபாவம் அன்று; அது மித்யா ஞானம். மேலும், அது அனதி, அதாவது ஆதிபற்றது. காலம் மாயையின் காரியமான படியால், மாயை எப்பொழுது தோன்றிற்று என்னும் கேள்விக்கு இடமில்லை. ஆகையால் மாயை அனதி. ஆனல், அது நித்தியமன்று. நித்தியமான பொருள் பிரமம் ஒன்றே! மாயை எவ்வியல்புடையது என்று வினவுங்கால், நாம் ஒரு முடிவுக்கும் வரமுடியாது. அது சத்தும் அன்று அசத்தும் அன்று. ஆகையால், அது அநிர்வசனீயம் என்று கூறப்படுகிறது. அது எத்தகையது என்று சொல்ல இயலாது. ஆனல் ஞானம் உதயமாகும் போது, எவ்வாறு சூரியன் முன் இருள் நிலைக்காதோ, அவ்வாறு மாயை நில்லாது மறைந்துவிடுகிறது.

அவித்யை அல்லது அஞ்ஞானத்தினல், சீவன் தான்வேறு பிரமம்வேறு என்று கருதுகிருன்; தானல்லாதவற்றைத் தானகப் பாவிக்கிருன். இதற்கு அத்தியாசம் என்று பெயர். ஆத்ம தருமங்களை அனத்மாவிலும், அனத்ம தருமங்களை ஆத்மாவிலும் ஏற்றி, ஒன்றை மற்றென்றாகப் பாவிப்பது அத்தியாசம். இதனல்தான் ''நான் இது'', ''என்னுடையது இது'' என்ற வியவகாரம் ஏற்படுகிறது. மகன், மனைவி முதலியவர்கள் இன்புற்றே துன்புற்றே இருந்தால், ஒருவன் ''நான் இன்புற்றுள்ளேன், நான் துன்புற்றுள்ளேன்'' என்று கருதுகிருன். அதுபோலவே, தேகம், இந்திரியங்கள், மனம் முதலியவற்றின் தருமங்களை ஆத்மாவின் மீது ஆரோபிக்கிறேம். ''நான் பருத்திருக்கிறேன், இளைத்திருக்கிறேன். நான் குருடு, செவிடு: நான் எண்ணுகிறேன், விரும்புகிறேன்'' என்று தவருக நாம் மதிக்கிறேம். உண்மை இதுவன்று, ஜீவாத்மாவின் வாஸ்தவ சொரூபம் பிரமம். இந்த உண்மையை தத்+த்வம்+அசி முதலிய மகாவாக்கியங்கள் போதிக்கின்றன.

இம் மகாவாக்கியங்கள் சீவனுக்கும் பிரமத்துக்கும் உள்ள அபேதத்தைப் போதிக்கின்றன. தத்+த்வம்+அசி என்ற வாக்கியத்திற்கு, ''அது நீ, நீ அதுவாய் இருக்கின்றய்'' என்பது பொருள். இது வாச்சியப் பொருள் அன்று, லட்சியப் பொருள். வாச்சியம் என்பது ஒரு சொல்லுக்குள்ள நேரான பொருள். லட்சியம் என்பது குறிப்புப் பொருள். சிங்கம் என்னும் சொல்லின் வாச்சியம் வனத்திலுள்ள ஒரு விலங்கு; ஒரு மனிதனைக் குறிப்பிட்டு ''அவன் சிங்கம்'' என்று சொன்னல், இங்கே சிங்கத்தின் சில குணங்களைப் பொருளாகக் கொள்ள வேண்டும். இது இலட்சியப் பொருள். தத், த்வம் என்ற பதங்களுக்கும், இலக்கணையால் பொருள் கொள்ள வேண்டும். தத் என்ற சொல்லுக்கு வாச்சியம், சர்வ சக்தி முதலிய குணங்கள் வாய்ந்த ஈசுவரன்; த்வம் என்ற சொல்லுக்கு வாச்சியம், அற்ப சக்தி முதலிய குணங்கள் படைத்த ஜீவன். இவ்விரண்டிற்கும் அபேதம் இருக்க முடியாது. ஆகையால் தத்+த்வம் என்ற இரண்டு பதங்களுக்கு லட்சியமான பிரமத்தைப் பொருளாகக் கொள்ளவேண்டும். இது மகா வாக்கியத்தின் அகண்டார்த்தம் என்று சொல்லப்படுகிறது. இந்த உண்மையைச் சாட்சாத்கரிப்பது மோட்சம்.

மோட்சத்தைப் பெறுவதற்குவழி ஞானம் கருமம் சாதனமாகாது. கருமத்தினல் இல்லாத ஒரு பொருளை உற்பத்தி செய்யலாம் (உற்பத்தி); ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தை யடையலாம். (பிராப்தி); ஒன்றை மற்றென்றாக மாற்றலாம் (விகாரம்): மலினமாயுள்ள வொன்றைத் துடைத்துச் சுத்தமாக்கலாம். (சம்ஸ்காரம்); ஆத்மா எப்பொழுதும் உள்ளது, எங்கும் உள்ளது; நிர்விகாரமாய் நித்திய சுத்தமாய் விளங்குவது. ஆகையால் அது கருமத்திற்கு விஷயமாகாது. அதை அடைவது என்று சொல்வதுகூட ஔபசாரிகம். எவ்வாறு சில சமயங்களில் ஒருவன தான் அணிந்த மாலை தன் கழுத்திலிருக்க, அதை மறந்து, அங்குமிங்கும் தேடி அலைகிருனே, அதுபோல நாம் ஆத்மாவைத் தேடுகிறேம். எவ்வாறு கழுத்திலுள்ள மாலையை யடையவழி, அதைத் தெரிந்து கொள்வதோ, அவ்வாறே ஆத்மாவை யடைய மார்க்கம் ஞானம். நிஷ்காமகருமத்தினல் மனம் சுத்தமடைகிறது; உபாசனையால் ஒருமுகப்படுகிறது; அப்பொழுது ஒருவன் ஞானமார்க்கத்திற்கு அதிகாரியாகிருன்; வேதாந்த விசாரத்தில் ஈடுபடுகிருன்.

வேதாந்த விசாரத்தை ஆரம்பிப்பதற்கு முன் நான்கு சாதனங்களை ஒருவர் பெற

வேண்டும் என்று சங்கரர் கூறுகின்றார். (1) நித்தியாநித்திய வஸ்து விவேகம்: அழியாதது ஆத்மா. அழியக்கூடியவை மற்றப்பொருள் என்ற பகுத்தறிவு. (2) இகாமுத்ரார்த்தபல போக விராகம்; இந்த லோகத்திலும் பரலோகத்திலும் நாம் அடையக்கூடிய சுகத்தை நாடாதிருத்தல். (3) சமாதிசட்கசம்பத்து: சமம் முதலிய ஆறு குணங்கள். சமம் மனத்தை அடக்குதல்; தமம் இந்திரியங்களைத் தத்தம் விஷயங்களிலிருந்து திருப்புவது; உபரதி-திருப்பிய இந்திரியங்களை மறுபடியும் வெளிப் போகாது காத்தல்; திதிட்சை-வெப்பம், குளிர் முதலிய இரட்டை அனுபவங்களைப் பொறுத்தல்; சமாதானம்–மனத்தை ஒரு நிலையில் வைப்பது. சிரத்தை-வேதாந்த போதனையில் ஆர்வம் கொள்ளுவது. (4) முமுட்சுத்துவம்: மோட்சத்தைப் பெறவேண்டும் என்ற இச்சை. இந்த நான்கு சாதனங்களையும் பெற்ற ஒருவன் வேதாந்த விசாரம் செய்யவேண்டும்.

சிரவணம், மனனம், நிதித்தியாசனம் என்பவை ஞானமார்க்கத்தின் பகுதிகள். சிரவணம் என்பது வேதாந்த வாக்கியங்களின் அர்த்தத்தைக் குருவினிடமிருந்து கேட்பது. மனனம் என்பது கேட்ட பொருளைச் சிந்திப்பது. நிதித்தியாசனம் என்பது சிந்தித்துத் தெளிந்ததை இடைவிடாது தியானிப்பது ஆத்ம சாட்சாத்காரம் பெற நேரிடையான சாதனம் சிரவணமா? தியானமா? என்ற விவாதமென்று அத்வைதிகளிடையே உளது. விவரணப் பிரஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள் சிரவணம் என்றும், பாமதீப் பிரஸ்தானத்தைப் பின்பற்றுபவர்கள் தியானம் அல்லது பிரசங்கியானம் என்றும் கூறுகிறார்கள். ஆனால் இவ்விரு வகுப்பினரும், "சிரவணத்தினாலோ அல்லது பிரசங்கியானத்தாலோ ஞானம் உதயமாகின்றது. இதுவே மோட்சத்திற்கு சாதனம்" என்று ஒப்புக் கொள்கின்றனர்.

இந்தப் பிறப்பிலேயே நாம் மோட்சத்தைப் பெறலாம். அவ்வாறு மோட்ச மடைந்தவர்கள் சீவன் முக்தர்கள். மோட்சம் என்பது நம்முடைய சொருபமானபடியால், அதை வேறு தேசத்திலோ, வேறு காலத்திலோ அடைய வேண்டும் என்பதில்லை. மோட்சத்தை மறைத்து நிற்பது அஞ்ஞானமானபடியால், அஞ்ஞானத்தின் அழிவே மோட்சம். சீவன் முக்தர்கள் தேகம் தாங்கி சீவிப்பவர்கள் போல நம்முடைய அனுபவத்திற்குக் காணப்படுகின்றார்கள். உண்மையில் அவர்களுக்குத் தேகமேயில்லை; அவர்கள் அவ்வாறு காணப்படுவது நம்மையும் முக்தர்களாக ஆக்குவதற்காக, அத்வைத அனுபவத்தைச் சங்கரர் "ஞானமே உருவாயும், ஆகாயத்தைப் போல மேலானதாயும், எப்பொழுதும் ஒரே பிரகாசமாயும், பிறப்பற்றும், ஒன்றாகவும், அழிவற்றும், மலமற்றும், எங்கும் வியாபகமாயும், இரண்டற்றதாயும் எது உளதோ அதுவே நான்-எப்பொழுதும் முக்தன் நான்" என்று தம்முடைய உபதேச சாஹஸ்ரியில் விளக்கியிருப்பது, இங்கு நாம் உணர்ந்து மகிழத்தக்கதாகும். ★

சிறுவரம்பேடு

இராவ்சாகிப்
திரு. நல். முருகேச முதலியார், பி.ஏ.,
சென்னை.

முன்னுரை :

தொண்டை நாட்டில் செங்கற்பட்டு மாவட்டம் பொன்னேரி வட்டத்தில், சின்னம்பேடு எனப்படும் ஒரு சிற்றூர் உள்ளது. அஃது ஓர் அமைதியான சூழ்நிலை வாய்ந்த அழகியதொரு கிராமம். சென்னையில் இருந்து சுமார் 20 கல் தொலைவில் உள்ளது. சென்னை-நெல்லூர் நெடுஞ்சாலைப் பிரிவில் இருந்து 4 கல். ஆரணி செல்லும் பேருந்து இக்கிராமத்தின் வழியே செல்லுகின்றது.

அருணகிரியார் :

தொண்டை நாட்டில் உள்ள புகழ்பெற்ற முருகன் தலங்களுள், சின்னம்பேடு என்னும் இவ்வூரும் குறிப்பிடத்தக்க சிறப்புடைய தொன்றாகத் திகழ்கின்றது. கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த அருணகிரி நாதப் பெருமான், இத்தலத்திற்கு எழுந்தருளி, இங்கே உள்ள ஸ்ரீ பாலசுப்பிரமணியர் என்னும் முருகப்பெருமானைத் தரிசித்து, நான்கு திருப்புகழ்ப் பாடல்களை அருளிச் செய்துள்ளார். அத்திருப்புகழ்ப் பாடல்களினால், இப்போது சிற்றூராக உள்ள சின்னம்பேடு என்னும் இந்தக் கிராமம், ஏறத்தாழ 500—600 ஆண்டு கட்கு முன்னரே. மிகவும் புகழ்பெற்ற ஒரு பெரிய நகரமாகத் திகழ்ந்திருத்தல் வேண்டும் எனத் தெரிகின்றது. அருணகிரிநாதர் தம்முடைய திருப்புகழ்ப் பாடல்களில், இந்தச் சிறந்த முருகன் தலத்தினைப் பின்வருமாறு புகழ்ந்துள்ளார்.

திருப்புகழ் :

"தேவர்களின் தலைநகரமாகிய அமராவதியைக் காட்டிலும் பெரும் சிறப்புடையதாய், மிக்க செல்வச் செழிப்பு வாய்ந்த குபேரனின் தலைநகரமாகிய அளகாபுரி நகரத்தினையும்விட மேம்பட்டுச் சிறந்து, திருமகள் நிலையாகத்தங்கி வாழ்கின்ற சிறுவாபுரி".

"பொன்னால் செய்ய பெற்றது போன்ற அழகுமிகுந்த கோபுரம், பெரிய மதில், கோயில், விசாலமான பல அழகிய வீதிகள், நிறைந்துள்ள சிறந்த சிறுவாபுரி".

(1) வானவர் ஊரிலும் வீறுகி வீறு அளை
காபுரி வாழ்விலும் மேலாக வேதிரு
வாழ்சிறு வாபுரி வாழ்வே ! சுராதிபர்
பெருமாளே!

(2) ஆடகம் பயில்கோபுரம் மாமதில்
ஆலயம் பல வீதியு மேநிறை
வான தென்சிறுவாபுரி மேவிய
பெருமாளே

என்றெல்லாம் அருணகிரிநாதர் இத்தலத்தின் அருமை பெருமைகளை மிக்க சிறப்பான முறையில் எடுத்துப் புகழ்ந்து போற்றியிருக்கின்றார். இதனால் இவ்வூரும் கோயிலும் பழங்காலத்தில் மிக்க எழிலும் வளமும் நிறைந்து விளங்கியது எனக் கொள்ளுதல் மிகையாகாது.

தலவரலாறு :

மேலும். இத்தலத்தைப் பற்றிய வரலாற்றுக் குறிப்பினையும் அருணகிரிநாதர் தமது திருப்புகழில் அழகாக எடுத்துக்காட்டியிருக்கின்றார். இராம பிரானின் புதல்வர்கள் ஆகிய லவன்-குசன் எனும் இருவரும் வால்மீகி முனிவரால் வளர்க்கப்பெற்று விற்பயிற்சி முதலிய கலைகளில் தேர்ச்சிபெற்று விளங்கியிருந்தனர். சென்னைக்கு அருகேயுள்ள கோயம்பேடு என்பது வான்மீகி முனிவரின் ஆசிரமமாகத் திகழ்ந்தது. அங்கேதான் லவ-குசர்கள் வளர்ந்து கலைப் பயிற்சிகள் பெற்றுவந்தனர், என்பர். அவர்கள் பின்னர் அங்கிருந்து இங்குவந்து சிலகாலம் தங்கியிருந்தனர். அப்போது இராமபிரான் அசுவமேதம் என்னும் வேள்வி செய்து தம்

வெற்றிக்கு அறிகுறியாக விடுத்த குதிரைகள், அரசர்கள் எவராலும் தடைசெய்யப்படாமல், நாற்றிசைகளிலும் சென்று வெற்றிப் பெருமிதத்துடன் மிக்க மிடுக்குடன் வந்து கொண்டிருந்தன. அவைகள் தெற்கு நோக்கி இங்குவந்த போது, அவற்றை லவ-குசர்கள் தடுத்து நிறுத்தினர். அதனால் ஒருவரையொருவர் அறியாத நிலையில், தந்தையாகிய இராமபிரானை எதிர்த்து மைந்தர்களாகிய லவ குசர்கள் போர்புரிய நேர்ந்தது. அப்போது இராம பிரானோடு போர் புரிந்து அவரை வெற்றி கொள்ளும் பொருட்டுச் சிறியவர்களாகிய லவ குசர்கள் அம்பு எடுத்தனர். அங்ஙனம் லவ குசர் ஆகிய சிறுவர் அம்பு எடுத்த இடம் ஆதல்பற்றி, இவ்வூருக்குச் சிறுவரம்பேடு என்னும் பெயர் உண்டாயிற்று. இவ்வரலாற்றுக் குறிப்பைப் பின்வருமாறு அருணகிரிநாதர் பாடியுள்ளார்.

சிறுவ ராகிஇருவர் அந்த கரிபதாதி
கொடு பொருஞ்சொற்
சிலை இராமனுடன் எதிர்ந்து சமராடிச்
செயமதான நகர் அமர்ந்த அளகைபோல
வளம் மிகுந்த
சிறுவை மேவி வரம் மிகுந்த பெருமாளே.

இங்ஙனம் அருணகிரிநாதர் குறிப்பிட்டிருக்கும் நிகழ்ச்சிக்கேற்ப, சிறுவர் இருவர் அம்பு எடுத்த ஊர் என்பது மருவிச் சிறுவரம்பேடு எனத்திரிந்து, இந்நாளில் சின்னம்பேடு என்று மக்களால் வழங்கப்பட்டு வருகின்றது. திருப்புகழில் இதனைச் சிறுவை என்றும், சிறுவாபுரி என்றும், அருணகிரிநாதர் அழகுற வழங்கியுள்ளார்.

கோயில் அமைப்பு :

இத்தலத்திலுள்ள பாலகுமாரசுவாமி என்னும் முருகனின் திருவுருவம், மிகவும் அழகு வாய்ந்தது. அருகேயுள்ள ஆண்டார்குப்பம் என்னும் தலத்திலுள்ள முருகனின் திருவுருவத்தைவிட, இது சற்றுச் சிறியது கொடிக்கம்பத்தின் முன்னேயுள்ள மயிலும் மிக்க அழகும் நேர்த்தியும் உடையது. விநாயகர் புன்முறுவல் பூத்த முகத்தினராய்ப் பொலிகின்றார். கோயிலின் உள்ளே அண்ணாமலை நாதரும், உண்ணாமுலையம்மையும், தனிக்கோயில் கொண்டு உள்ளனர். இங்குள்ள முருகனைத் தண்டமிழில் மிகு நேயர் என்றும், அடியார்கள் சிந்தை குடிகொண்டவர் என்றும், திருப்புகழ் போற்றிப் புகழ்கின்றது.

தண்டரள மணிமார்ப செம்பொன்னெழில்
செறிரூப
தண்டமிழின் மிகுநேய முருகேசா
சந்ததமும் அடியார்கள் சிந்தையுறு குடியான
தண்சிறுவை தனில்மேவு பெருமாளே !

இங்கே ஒரு பெருமாள் கோயிலும், உள்ளது. திருஊரகப்பெருமாள் என்பது திருநாமம். அவரது திருவுருவமும் பேரழகு வாய்ந்தது. தீண்டாத திருமேனி. ஆண்டுக்கு ஒரு முறை தேன் அபிடேகம் நிகழ்கின்றது தேனைச் சீலையில் நனைத்துப் பிழிவதுதான் வழக்கம்.

முடிவுரை :

இத்தகைய சிறந்த தலத்திற்குத் திருப்பணி செய்ய, ஊர்ப் பொதுமக்களும் பிறரும் முன் வந்துள்ளனர். அதற்கென ஒரு திருப்பணிக் குழுவும் அமைக்கப்பெற்றுள்ளது. திரு. இராக்கியப்ப முதலியார் திருப்பணிக்குழுவின் தலைவராக நியமிக்கப் பெற்றுள்ளார். அண்மையில் நிகழ்ந்த திருப்பணித் துவக்கவிழாவில், அறநிலைய ஆணையர், துணை ஆணையர் முதலிய பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முருகன் அடியார்கள் பலரும், அன்பர்கள் பிறரும், திருப்புகழ்ப் பாடல்பெற்ற இத்தலத்தைத் தரிசித்துப் பயனடைவார்களாக.



சிறுவரம்பேடு பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் விமானங்கள் திருப்பணி செய்யப்பெறும் காட்சி.

தமிழில் அறிவியல் கருத்துக்கள்

திரு. கே. எஸ். மகாதேவன், M.A., B.Sc.,
இயக்குநர், தமிழ்வளர்ச்சித்துறை.

இயற்கையைப் பற்றிய உண்மைகளையும் முறைமைகளையும் ஒழுங்குபடுத்தி ஆய்வது அறிவியலாகும். அறிவியல் வளர்ச்சிக்கு அடிப்படையாக இருப்பது காட்சித்திறன் (Observation power). கண்ணுடையோர் எல்லோரும் காணலாம். காட்சித்திறன் என்பது எவருடைய தனியுடைமையுமன்று. இயற்கை ஒரு நாட்டிற்கு அறிவிக்கும் உண்மையை, மற்றொரு நாட்டிற்கு அறிவிப்பதில் எத்தகைய தடையும் இருக்க முடியாது; இருப்பினும். அறிவியல் என்றால் மேல்நாடுதான் நம் நினைவிற்கு வருகிறது. அறிவியல் அறிஞர் என்றால், கலீலியோவும் நியூட்டனுமே நம் கண் முன் வந்து நிற்கின்றனர்; தமிழ் மாணவர் கைகளில் ஏந்தும் அறிவியல் நூல்கள் அறிவியலை முற்றிலும் 'அயல்நாட்டுச் சரக்கு' என்ற அளவிலேயே அறிமுகப்படுத்துகின்றன! "மேற்கத்திய நாடுகளின் தொடர்பு தமிழ் நாட்டில் ஏற்பட்ட பின்பே விஞ்ஞானம் இங்கே தலைகாட்டத் தொடங்கிற்று" என்று பேசுகிறவர்களையும் நாம் காண்கின்றோம் மேல் நாட்டவர் கண்டனவாகப் பேசப்படும் செய்திகள் பலவற்றை, அவர்கள் பிறப்பதற்குப் பல நூற்றுண்டுகட்கு முன்னரே, தமிழர்கள் அறிந்திருந்தனர் என்ற உண்மையை எடுத்துச் சொன்னால், நம்மில் சிலர்க்கு ஏனோ வெகுளி பிறந்து விடுகிறது!

பாஸ்கலும், ஔவையாரும் :

பொருள்களை அவை காணப்படும் உருவ நிலைக்கு ஏற்பத் திண்பொருள் நீர்ப்பொருள் வளிப்பொருள் என்று மூவகையாகப் பிரித்துப் பேசுகிறோம். திண்பொருளுக்கும் வளிப்பொருளுக்கும் இல்லாத சில இயல்புகள், நீர்ப்பொருளுக்கு இருப்பதை இன்றைய அறிவியல் நமக்கு அறிவுறுத்துகின்றது. திண்பொருளையும் வளிப்பொருளையும் அழுத்தம் கொடுத்து அளவில் சுருங்கும்படி செய்யலாம். அரிசி, உமி, தவிடு போன்ற பொருள்களை 'அழுத்தி அழுத்தி' அளந்து ஒரு படியை முக்காற்படியாகக் காட்டலாம்! அதே போன்று, ஓர் உதைபந்தில் இயல்பாகக் கொள்வதைப்போன்று, மூன்று மடங்கு அளவிற்கு வேண்டுமானாலும் காற்றினை அடைத்து வைக்கலாம்! ஆனால், எவ்வளவுதான் 'அழுத்தி அழுத்தி' அளந்தாலும் ஒருபடி பாலையோ, எண்ணெயையோ, அல்லது நீரையோ முக்காற்படியாகக் குறைத்து அளந்து காட்ட முடியாது! இதிலிருந்து அழுத்தத்தினால் நீர்ப்பொருள்கள் அளவில் சுருங்குவதில்லை என்பது விளங்குகின்றது. இவ்வியல்பினை நீர்ப்பொருளின் சுருங்கா இயல்பு (Non-Compressibility of Liquids) என்று அறிவியல் குறிப்பிடுகிறது.

இவ்வுண்மையைக் கண்டுபிடித்தவர், கி. பி. 17ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த பாஸ்கல் என்பவரே என்று, அயல்மொழியில் அறிவியல் பயிற்றுவோர் கூறுவர். ஆனால் இதே உண்மையைக் கி. பி. 12-ஆம் நூற்றுண்டில், தமிழ் நாட்டில் வாழ்ந்து வந்த ஔவையார் அழகாக எடுத்து விளக்கியுள்ளார்! 'இயல்பாக உள்ள ஒன்றை யாரும் எளிதில் மாற்றிவிட முடியாது' என்னும் கருத்தினை வலியுறுத்த விரும்பிய அவர், நீர்ப்பொருளின் இந்தச் சுருங்கா இயல்பினை,

> ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
> நாழி முகவாது நால்நாழி—தோழி,
> நிதியும் கணவனும் நோபடினும் தத்தம்
> விதியின் பயனே பயன்

என்ற வெள்ளைப்பாவால் வெளியிடுகின்றார்! இங்கு 'ஆழ்கடல்நீர்' 'ஆழ அமுக்குதல்' ஆகிய தொடர்கள் அறிவியல் நுட்பம் வாய்ந்தவை.

நீருக்கு அழுத்தம் உண்டு; நாம் எவ்வளவுக்கெவ்வளவு ஆழத்தில் மூழ்கிச் செல்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு அது மிகுதியாக நம்மை அழுத்தும்! அதாவது ஆழத்தைப் பொறுத்து அழுத்தம் அதிகமாகும். இவ்வுண்மையினையும் பாஸ்கலே கண்டு கூறியதாக அயல்மொழி ஏடுகள் பேசுகின்றன. ஆனால், இங்கு எடுத்துக் காட்டப்பட்ட 'ஆழ் கடல்நீர்' 'ஆழ அமுக்கி முகக்கினும்' என்னும் தொடர்கள் ஆழத்தைப் பொறுத்து அழுத்தம் அதிகமாகின்றது'' என்பதை நன்கு சுட்டுகின்றனவல்லவோ? இன்று, ஆழ்கடலில் சோதனையை முடித்துக் கோலூன்றித் திரும்பிவரும் ஔவையாரைச் சென்னைக் கடற்கரையிலேயே கண்குளிரக் கண்டு மகிழ்கின்றோம்?

நியூட்டனும், மணிவாசகரும் :

பொருள்களின் இயக்கம் பற்றிய உண்மைகளை உணர்ந்து உரைத்துப் புகழ்கொண்டவர், அறிஞர் ஐசக் நியூட்டன் என நாம் பாடம் கேட்கின்றோம், ''வேற்று விசையால் தூண்டப்படாத வரையில், நிற்கின்ற பொருள் நின்று கொண்டே இருக்கும்; ஓடுகின்ற பொருள் அதே வேகத்தில் அதே திசையில் ஓடிக்கொண்டே இருக்கும்'' என அவர் விளக்கியதையே நியூட்டனின் முதலாம் இயக்க முறைமை (First law of motion) என்று நாம் சொல்கின்றோம். இந்த முறைமையின் அடிப்படையில்தான், உலகத்திற் செயல்படும் பல்வேறு விசைகளைப் பற்றியும், நாம் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. எடுத்துக்காட்டாக, மேசையின் பரப்பில் ஒரு பொருளை நகர்த்திவிட்டால், இம்முறையின்படி, அது நகர்ந்து கொண்டே இருக்கவேண்டும்! ஆனால் அது அப்படி செய்வதில்லை. வரவர வேகம் குறைந்து நின்றுவிடுகிறது! இதிலிருந்து 'வேற்றுவிசை' ஒன்று தலையிட்டு அப்பொருளைத் தடுக்கிறது என்று முடிவு செய்துவிடுகிறோம். அந்த விசையையே 'எதிர்ப்பு விசை' (Frictional Force) என்று பெயரிட்டு அழைக்கின்றோம்.

நியூட்டனின் இம்முறைப்படி வானத்துக் கோள்களெல்லாம் ''இதே வேகத்தில் அதே திசையில்'' ஓடிக்கொண்டே இருக்கவேண்டும். இப்படி நிகழ்ந்தால், எல்லாக் கோள்களும் இமைப்பொழுதில் வான்வெளியில் எல்லையற்ற ஆழத்திலே சென்று கண்ணுக்கும் எட்டாமல் மறைந்துவிடும்! ஆனால் நடைமுறையில் அப்படி நிகழவில்லை. ஏதோ ஒருவிசை தலையிட்டு, கோள்களை எல்லாம் ஒரே வேகத்தில், ஒரே திசையில் ஓடி மறைந்துவிடாமல் இழுத்து வைத்துக்கொண்டிருக்கிறது என்று உடனே முடிவு செய்கிறோம். அதனையே கவர்ச்சியாற்றல் (Gravitational Force) என்று பெயரிட்டு அழைக்கின்றோம். சுருக்கமாகக் கூறவேண்டுமானால், ''விசையின்றி ஒரு பொருளும் நிலைமாறாது'' என்ற உண்மை தோன்றுதற்கு இடமாக நியூட்டனின் இவ்வியக்க முறைமை அமைந்து கிடக்கின்றது.

''அவனன்றி ஓரணுவும் அசையாது'' என்ற மெய்ம்மொழி தமிழன் கண்டமொழி. ஆற்றலைக் கடவுளாகக்கொண்டு ஆன்மாவாக்கி அவன் என்று அழைப்பதும் மக்கள் இயல்புதானே. இத்தகையதோர் அறிவியல் தொடர் தோன்றுவதற்குத் தமிழகத்திலும் ஓர் இயக்க முறைமை அடிப்படையாக இருந்திருக்க வேண்டுமன்றோ? தமிழகத்தின் அந்த நியூட்டனைத் தேடி நாம் நெடுந்தொலைவு செல்ல வேண்டுவதில்லை. இதோ வருகிறார் மணிவாசகர். அவரின் திருவாயிலிருந்து உதிரும் 'பொருள்களின் இயக்க முறைமையைக் கேளுங்கள்.

நடப்பன நடாஅய்; கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறீஇச் சொற்பதம் கடந்த தொல்லோன்

சொல்லாலும் வடித்துக் கூறமுடியாத இறைவனின் ஆட்சியில் திகழும் இயற்கை உண்மை எது என்று, திருவாசகத்தில் உள்ள இவ்வரிகள் விளக்குகின்றன. ஆம், நடக்கும் பொருள் நடந்துகொண்டே இருக்கும். கிடக்கும்பொருள் கிடந்தபடியே இருக்கும். நிற்கும் பொருளோ, நின்றுகொண்டே இருக்கும்.

நியூட்டன் 17-ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்தார். மணிவாசகரோ (கி. பி. மூன்றும் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று கொள்ளாவிட்டாலும்), எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றேனும் கொண்டுதான் ஆகவேண்டும்! இருந்தாலும் பொருள்களின் இயக்க முறைமை கண்ட பெருமை (தமிழனது குரலிலே வலிமையில்லாத காரணத்தால்), இன்றும் நியூட்டனையே சார்ந்து நிற்கின்றது.

கலிலியோவும் சிவஞான முனிவரும் :

கோவிலில் தொங்கிய விளக்கிலே காலம் ஏறி அமர்ந்து ஊசலாடுவதைக் கலிலியோ கண்டார். ஆடுகின்ற விளக்கின் ஒவ்வோர் அசைவும் ஒரே அளவான காலத்தை எடுத்துக் கொள்வதை உணர்ந்தார். வீடு திரும்பிய அவர் பல சோதனைகள் செய்து நீளம் மிகுந்த பொருள்கள் மெல்ல அசைந்தாடுவதை

நீளம் குறைவாக உள்ள பொருள்கள் விரைந்து அசைந்தாடுவதையும் கண்டு பிடித்தார். இந்த அடிப்படையில் எழுந்தவை தாம் இன்று கடிகார முள்ளின் வேகத்தைக் கட்டுப்படுத்தியபடி அசைந்தாடிக்கொண்டிருக்கும் ஊசலிகள் (Pendulums) கடிகார முள் விரைந்து நகர வேண்டுமானால், ஊசலியின் திருகாணியைத் திருகி, மேலேற்றி அதன் நீளத்தைக் குறைக்கின்றோம்; கடிகாரம் மெல்லச் செல்லவேண்டுமானால், திருகாணியைத் தளர்த்தி இறக்கி ஊசலியின் நீளத்தை மிகுதிப்படுத்துகிறோம். ஊசலியின் நீளத்திற்கும் காலத்திற்கும் உள்ள இந்தத் தொடர்பைத் தமிழ்நாட்டில் வாழ்ந்த ஒரு தமிழ்ப் புலவரும் அறிந்திருந்தார் என்பதை இன்று உலகம் அறியுமா?

பெரிய ஊசலும், சிறிய ஊசலும் :

தமிழகத்தில் ஊஞ்சல் ஆடுவது மகளிரின் விளையாட்டுகளுள் ஒன்று. பெண்பாற் பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் ஊசற்பருவம் என்ற ஒரு பகுதியும் இடம் பெற்றுள்ளது. இதோ ஒரு காட்சி. நீண்டு தொங்கும் ஊஞ்சலிலே தென்குளத்தூரில் எழுந்தருளிய அமுதாம்பிகை (மலைமகளின் மாற்றுருவம்) இருக்கின்றாள். மலைமகள் இருக்கும் அவ்வூசலை அலைமகள் ஒருபுறமும், கலைமகள் ஒரு புறமுமாக நின்றுகொண்டு அசைத்து ஆடுகின்றனர். ஆனால் அந்த ஊசலிலும் விரைந்து அசைந்தாடுகின்றது மற்றோர் ஊஞ்சல், அந்த ஊஞ்சல் நீளத்தில் குறைந்தது. அதுவே அமுதாம்பிகையின் காதிலே தொங்கும் குழை! அந்தச் சிறிய குழைபோல் ஊஞ்சலும் ஆடவேண்டும் என்று விரும்பிய அலைமகளும் கலைமகளும் ஊஞ்சலை 'வலித்து' ஆட்டிப் பார்த்தனர். ஆனால், ஊஞ்சலின் வேகம் மிகுந்ததாகத் தெரியவில்லை. அமுதாம்பிகை அவர்களின் அறியாமையைக் கண்டு சிரித்தாள். தாமரைப் பெண்கள் இருவரும் நாணத்தால் முகங்கவிழ்ந்திருந்தனர். அமுதாம்பிகை ஞாலமுழுவதும் ஒருங்கீன்ற நங்கை. இயற்கைச் சட்டங்களெல்லாம் அவளுக்குத் தானே தெரியும்? அலைமகளென்ன, கலைமகளென்ன? அவர் தம் கணவன்மாராகிய திருமாலும் பிரமனுமே வந்து ஆட்டினாலும் ஊஞ்சலின் நீளம் குறைந்தாலொழிய, அதன் வேகத்தில் விரைவு காண முடியாதே!

கலீலியோ கோவிலில் ஆடிய விளக்கில் கண்டு கூறிய அதே இயற்கைச் சட்டத்தை வீட்டில் ஆடிய ஊஞ்சலிலும் மகளிர் காதில் தொங்கிய குழையிலும் கண்டு இவ்வாறு விளக்கியவர் சிவஞான முனிவர் ஆவார். அறிவியற் கருத்துக்களைத் தாங்கி மிளிரும் அவர் பாடல் வருமாறு :

திங்களொளி காட்டுமுக மீதுலவு நாட்டச்
  செழுங்கயல் உதைத்து ஊக்கலாற்
செம்பொனின் இழைத்தமகரக்குழைகளும்
  செவிச் செங்கனக ஊசலாடப்,
பங்கய இருக்கைமட மாதர் அது நோக்கி, 'இரு
  பாயுங் கயற்குலம் அசைக்குமவ் ஊசலிற்
  பாயந்திலது இவ்வூசல்' என நீள்
அங்கையின் வலித்துநனி யாட்டுதொறும்
  நின்வாய் அரும்புநகை நிலவெழிலுக்கு
ஆங்கவர் முகத்திங்கள் சாயப், புராணமறை
  யாகமம் அளந்தறிவரும்
புங்கவன் மருங்குகுடி கொண்டஅமு தாம்பிகை
  பொன்னூசல் ஆடியருளே!
பூரண மதிக்கருள் புரிந்தகம லாகரீ
  பொன்னூசல் ஆடியருளே!

செயலும், எதிர்வினையும் :

நெருப்புக்குச்சி உராய்ந்து நெருப்பை உண்டாக்குகிறது. இருந்தாலும், அது உண்டாக்கிய நெருப்புக்கு முதலில் அதுவே எரிந்து) ஊனமாகிறது. சினம் கொண்டவனையே திரும்பித்தாக்கிக் கொல்லுகிறது. சினத்தின் இத்தகைய எதிர்தாக்கும் இயல்பினை விளக்குதற்கே, திருவள்ளுவர் 'நிலத்தறைந்தான் கையினை உவமையாகத் தேர்ந்து எடுத்து,

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

எனக் கூறுகின்றார். இன்றுவரை, உரையாசிரியர்கள் 'நிலத்தறைந்தான் கை'யினைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. நிலத்தை அறைந்தவனது கை குறி தவறாமல் நிலத்தினைச் சென்று தாக்குவது எப்படி உறுதியோ, அதுபோன்று சினத்தால் அழிவது உறுதியென்ற கருத்தினையே இவர்கள் வற்புறுத்துகின்றனர். குருடன் நிலத்தை அறைந்தாலும் கூடக் கை குறி தவறாமல் நிலத்தைச் சென்று தாக்கவே செய்யும். இதைச் சொல்ல ஒரு வள்ளுவர் வேண்டுவதில்லை. 'பிழைத்தல்' என்ற சொல் 'தவறுதல்' என்ற பொருளிலும் வரும், 'தப்பித்துக்கொள்ளல்' என்ற பொருளிலும் வரும். இடத்திற்கேற்பப் பொருளைக் கொள்ளுதல் வேண்டும். இங்கு நிலத்தறைந்தான் கை அச்செயலின் எதிர் வினையிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது என்பதனையே வள்ளுவர் உவமையாகக் கொள்கின்றார். ஆம், கை நிலத்தை அறைந்தால், நிலமும் கையினை அதே வேகத்தில் திருப்பி அறையும். 'ஒவ்வொரு செயலுக்கும் நேரான எதிர் விளைவு உண்டு' (For every action there is equal and opposite reaction) என்று நியூட்டன் கூறிய 'மூன்றாம் இயக்க முறை'யை வள்ளுவர் பல நூற்றாண்டுகட்கு முன்னரே உணர்ந்து ஆண்டிருக்கிறார்.

முடிவுரை :

உலகத்து மற்றப் பகுதி மக்களைப்போலவே தமிழகத்து மக்களும் காட்சித்திறன் என்னும் ஆற்றலைப் பயன்படுத்தி, அறிவியலின் அடிப்படை உண்மைகளைக் கண்டறிந்தே வந்தார்கள்; அவைகளை, ஆங்காங்குத் தமது நூல்களில் எடுத்துரைத்தும் வந்தார்கள். அதன் விளைவாகத் தமிழ்ச் சோலை அறிவியல் மணம் வீசிக் கொண்டு இருக்கிறது. அதனை முகர்ந்து மகிழ இளைஞர் உலகம் முன்வருதல் வேண்டும்.



குன்னூரில் நிகழ்ந்த கோடைக்காலச் சமய போதனைப் பயிற்சி வகுப்பிற் கலந்துகொண்டு பயன்கொண்ட மாணவர்களும், அதற்கு அருளாசியுரை வழங்கிச் சிறப்பித்த மகாசந்நிதானங்களும்.

திருவல்லிக்கேணி தேவராச முதலித் தெரு, இரேணுகையம்மன் கோயில் மண்டலாபிஷேக விழாவில் சென்னைத் தியாகராய நகர்த் தருமையாதீன சமயப் பிரசார நிலையம்- தவத்திரு மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தல்.



வேளாண்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி அவர்கள் தலைமையில், சிக்கல் சிங்காரவேலவர் இலவசச் சித்த வைத்தியசாலையினைத் திறந்துவைத்து நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் திரு. க. அன்பழகன், M.A அவர்கள் சிறப்புரை ஆற்றுதல். (31—5—72)

சிக்கல் சிங்காரவேலவர் இலவசச் சித்த வைத்தியசாலைத் திறப்பு விழாவில், ஆணையர் திரு கே.எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S., அவர்களும், "முத்தமிழ்க் காவலர்" திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களும், உடன் உள்ளனர்